

# அம்மானைக் கும்பிடுகிறானுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாளைக் கும்பிடுறானுகள்

(உண்மைக் கதைகள் - தொகுதி 1)

இது
தமிழீழ விடுதலைப் புலிகள்
வெளியீட்டுப் பிரிவின்
வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாளைக் கும்பிடுகிறானுகள்
(உண்மைக் கதைகள் தொகுதி - 1)

வெளியீடு : வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

அட்டைப்பட ஓவியம் : ஒலிவர்

முதற்பதிப்பு : ஆவணி 1994

மறு பதிப்பு : ஆவணி 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

உண்மைச் சம்பவங்களைக் கருவாகக் கொண்ட பதினைந்து 'உண்மைக் கதைகள்' இத் தொகுப்பு நூலில் உள்ளன.

இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்ட வாழ்க்கையையும், அந்த வாழ்க்கையின் அவலங்களையும் சித்தரிக்கும் சிறப்புப் படைப்புகளாக பதினாள்கும்; சிறிலங்கா இராணுவக் கொடூரத்தினைச் சித்தரிப்பதாக ஒன்றும் அமைந்துள்ளன.

தமிழீழ-இந்தியப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் வெளிவந்து கொண்டிருந்த எமது சஞ்சிகைகளில் இக் கதைகள் பிரசுரமாகி யிருந்ததை குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந்தியப் படைகளினதும் தேசவிரோதக் கும்பல்களினதும் கெடுபிடி காரணமாக, பெரும்பாலான தமிழீழ மக்களின் கைகளை இந்தச் சஞ்சிகைகள் சென்றடையவில்லை. அதனால் ஒரு காலத்தின் பதிவுகளாக விளங்கும் இந்த உண்மைக் கதைகளைப் படிக்கும் வாய்ப்பையும் எமது மக்கள் பெற்றிருக்கவில்லை.

எனவே, இந்தக் கதைகளைத் தொகுத்து புத்தகமாக உருவாக்கி மக்களிடம் தரும் பணியை, **விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவு** ஒரு முக்கிய கடமையாகக் கொண்டுள்ளது.

இச் சிறு கதைகள் இரண்டு தொகுதிகளாக வெளிவரவுள்ளன.

**அம்மாளைக் கும்பிடுகிறானுகள்** என்ற பெயரில், முதலாவது தொகுதியை உங்களது கைகளில் தந்துள்ளோம்.

இதைப் படித்து உங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் தந்துதவுமாறு, பணிவுடன் கோருகின்றோம்.

வெளியீட்டுப் பிரிவு.

தமிழீழ விடுதலைப் புலிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்ப்பு

மனங்கொள்ளாத நம்பிக்கையுடனும் எதிர் பார்ப்புடனும் இருக்கும் அந்தத் தாயிடம் போய், உங்கள் மகன் போர்க்களத்தில் உடல் சிதறிச் செத்துவிட்டான் என்று எப்படிச் சொல்வது...?

அந்தத் துணிவு எனக்கிருக்கவில்லை. நாளை இன்னொரு தோழன் வந்து அதைச் சொல்லட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகில் இல்லாது வானம் வெறுமையாய் இருந்தது. அம்மாவைக் காணாது சிணுங்கும் குழந்தைகளைப் போல சந்திரன் தோன்றாத வானில் நட்சத்திரங்கள் தூங்கி வழிந்து கொண்டிருந்தன.

அன்று அமாவாசை.

சுற்றிலும் இருள் அடர்ந்து பரவியிருந்தது.

வெப்பக் காற்று வீசிக்கொண்டிருக்கின்றது. சுதந்திரம் என்னும் குழந்தையைப் பிரசவிக்கத் தமிழீழத் தாய் படும் வேதனையின் மூச்சு வெப்பக்காற்றாக வெளிப்படுகிறதோ... என்னவோ...?

மனப்பாரம் நெஞ்சை அழுத்த நடந்துகொண்டிருக்கிறேன்... இரண்டு வருடங்களுக்கு முன்னர் நான் கண்ட அடையாளங்களை ஞாபகத்தில் வைத்துக்கொண்டே இரு புறமும் புதர்கள் கொண்ட அந்த வண்டிற் பாதையில், 'ரோர்ச்லைட்' இன் உதவியுடன் குடிசையைத் தேடினேன்.

அதோ... ஒரு பெரிய மரம்... அது வேப்பமரம் தான். பக்கத்தில் இருளாய்க் குடிசை.

உள்ளே எரியும் குப்பி விளக்கின் ஒளி செத்தையினூடாகப் புள்ளி புள்ளியாய், வானத்திலிருக்கும் நட்சத்திரங்களைப் போலத் தெரிந்தது.

இதே குடிசை தான்.

இந்த வேப்பமர அடியில் நானும் சூரியும் எவ்வளவு தோழமையாய் - அன்பாய் - இருந்து கதைத்திருப்போம்!

அவனுடைய ஏழைத்தாயின் கையால் எத்தனை தடவைகள் சாப்பிட்டிருக்கிறேன்!

மறுபடி இத்தகைய சூழ்நிலையில் அந்தத் தாயின் முகத்தில் விழிக்கும் நிலை, மனதைச் சோகமாக அழுத்தியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிசை வாசலை நெருங்கி... "அம்மா... !" என்று கூப்பிட்டேன்.

"யாரது?" என்ற பலவீனமான குரல் ஒன்று கேட்டது. சில வினாடிகளில் குடிசையின் கதவு திறக்கப்பட்டது.

சூரியின் அம்மா!

எட்டிநின்று, குப்பி விளக்கை உயர்த்தியபடி என்னை ஊன்றிப் பார்த்தாள்.

சட்டென்று அடையாளம் கண்டு பரபரப்புடன், "உள்ளே வாமோனை..." முகம் மலர அழைத்தாள். நான் தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தேன்.

"தம்பி... நீங்கள் தேவன் தானே!"

"ஓம் அம்மா...!"

குப்பி விளக்கை நன்றாக உயர்த்தியபடி, எனக்குப் பின்னாலும் அந்தத் தாய் யாரையோ கண்களால் தேடினாள்.

ஒரு விநாடி எதையோ கேட்பதைப் போல் என்னைப் பார்த்தாள்.

சூரியின் ஞாபகம் வந்திருக்க வேண்டும்.

"எப்படியிருக்கிறீர்கள் எல்லோரும்...?"

இப்போது கூட தனது மகன் சூரியை மட்டும் விசாரிக்காமல் எல்லோரையும் விசாரிக்கும் விதம், என் மனதை ஆழமாய்த் தொட்டது.

"இருக்கிறம் அம்மா... எல்லோரும் சுகமாக இருக்கிறம்... "

"முன்பைவிட இப்ப சரியாகக் கஸ்டப்படுவீங்க என்ன...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாட்டுக்கு என்ன செய்வியள்...?

எப்படிக் குளிக்கிறியள்...?

எங்கை படுத்து நித்திரை கொள்ளுறியள்...?"

போராளிகள் அனைவரையும் தனது பிள்ளைகளைப் போலக் கருதிக் கொண்ட ஒரு தாயின் ஆதங்கம், தொடர் கேள்விகளாய் வெளிப்படுகிறது.

"அம்மா! எங்களுக்கு ஒரு கஸ்டமும் இல்லை. நாங்கள் நல்லா சாப்பிடுகிறம். சந்தோசமா இருக்கிறம்..."

எனக்குச் சூரியின் ஞாபகம் வருகிறது...

"தம்பி... எதும் இந்தப் பக்கம் அலுவலா வந்தீங்களே? மற்ற ஒருத்தரையும் காணேல்ல...?"

அக்குடிசையைத் தேடி அந்த இரவில் நான் வந்த நோக்கத்தை அறிய, அந்தத் தாய் விரும்பினாள்.

"அலுவல் ஒண்டும் இல்லை அம்மா... சும்மா உங்களை ஒருக்கால் பாத்திட்டுப் போவமெண்டுதான் வந்தனான்...."

"இரு தம்பி எதும் சாப்பாடு தாறன்..."

எனக்குச் சாப்பாடு தந்தால், இந்தக் குடிசையில் இன்றிரவு ஒரு ஜீவன் பட்டினி கிடக்கும்.

"வேண்டாம் அம்மா எனக்குச் சாப்பாடு வேண்டாம்."

நான் சொல்வதைக் கேளாமல், மூலையில் இருந்த சட்டிக்குள் இருந்த சோற்றை எடுத்துக் கறியும் போட்டு என்னிடம் நீட்டியபடி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாப்பிடு மோனை..."

நான் எதற்காக இங்கு வந்திருக்கிறேன்; என்ன சொல்ல வந்திருக்கிறேன் என்பது மனதைக் குடைய, வேதனையில் மூழ்கிவிட்டேன்.

அதனால் ஒரு பிடி சோற்றைக் கூட என்னால் சாப்பிட முடியவில்லை.

"எனக்கு பசிக்கேல்லை அம்மா...!"

நிலத்தைப் பார்த்தபடி சொன்னேன்.

"சாப்பிடாமல் நீ மெலிஞ்சு போனாய்..." செல்லமாக அந்தத் தாய் என்னைக் கண்டித்தாள்.

ஒரு நிமிட அமைதிக்குப் பிறகு...

"சூரி எப்படி மோனை இருக்கிறான்...?"

கிசுகிசுத்த குரலில் ஆவல் பொங்கக் கேட்டாள். எனது பதிலுக்காகக் காத்திருக்காமல் அந்தத் தாய் தொடர்ந்தாள்...

"என்ரை உயிரே அவன் தான் தம்பி!

எங்கையாவது அவன் சுகமாக இருப்பான் எண்ட நம்பிக்கையிலதான், என்ரை மிச்ச மூண்டு குஞ்சுகளோடையும் நான் சந்தோசமாக இருக்கிறன் தம்பி..."

குரல் உடைந்துபோக, அழத் தொடங்குகிறாள்... சிறிதுநேர அழுகைக்குப் பின் தொடர்ந்தாள்...

"கடவுள் என்னைக் கைவிட மாட்டான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிக்கு நல்ல ஆயுள் பலன் மோனை...''

கண்ணீரைத் துடைத்துவிட்டு மீண்டும் உற்சாகமாகத் தொடங்கினாள்.

''அண்டைக்கு ஒரு பத்து நாளைக்கு முன்னாலை அந்தக் கோயில் குளச் சாத்திரியாரிட்டை 10 ரூபாய் கொடுத்து சூரியின்ரை குறிப்புப் பாப்பிச்சனான்; அவனுக்கு நீண்ட ஆயுள் இருக்காம்.''

காலங்காலமாக இருந்துவரும் மனிதனின் நம்பிக்கைகள் அந்தத் தாய்க்கும் ஒரு தெம்பைக் கொடுத்தது.

''கடவுள் என்னைக் கைவிட மாட்டான்...''

விக்கலுக்கூடாக அந்தத் தாய் இன்னும் ஏதேதோ சொல்ல முயன்றாள்...

''அழாதேங்கோ அம்மா, சூரி சுகமாக இருக்கிறான்....'' என் நெஞ்சின் கனம் உடைபட்டுக் கண்ணீராக வெளிவருகிறது.

அந்தத் தாயின் முன்னால் அழ நான் விரும்பவில்லை, குடிசைக்கு வெளியே எழுந்து வருகிறேன். கண்ணீரைக் கட்டுப்படுத்துவதற்காக அண்ணாந்து வானத்தைப் பார்க்கிறேன்.

இன்னும் நட்சத்திரங்கள் அழுது வடிந்துகொண்டுதான் இருக்கின்றன.

மனங்கொள்ளாத நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனுமிருக்கும் அந்தத் தாயிடம்போய், உங்கள் மகன் போர்க்களத்தில் உடல் சிதறிச் செத்து விட்டான் என்று எப்படிச் சொல்வது...?

அந்தத் துணிவு எனக்கிருக்கவில்லை. நாளை இன்னொரு தோழன் வந்து அதைச் சொல்லட்டும்...

''அம்மா நான் போட்டுவாறன்...''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வேப்பமரத்தையே பார்த்தபடி திரும்பி நடக்கிறேன்.

சூரியின் சின்னஞ்சிறு தங்கைகள் இருவரும் ஆர்வத்துடன் கையை அசைத்து எனக்கு விடை தருகின்றார்கள்.

அன்பு அண்ணணின் சாவுச் செய்தியை சொல்ல வந்தவனை கையசைத்து வழியனுப்புகிறோம் என்பது அவர்களுக்குத் தெரியாது.

"தம்பி தேவன், கவனமாப் போகவேணும். வழியிலை, தெருவிலை எங்கையாவது படுத்துக் கிடப்பாங்கள்..."

"கவனம் மோனை..."

அழுகையை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. அழுதுகொண்டே அந்த அமாவாசை இருட்டில் நடக்கிறேன்.

இப்போது நான் கண்ணீரைத் துடைக்க முயற்சிக்கவில்லை!

தமிழீழம்

பெப்ரவரி - மார்ச் 1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்களும் தமிழர்கள் என்பதற்காகவே...

மூர்த்தியினால் கௌரியின் இழப்பைத் தாங்க முடியவில்லை. அவளில்லாத நாட்களை எண்ணிப் பார்க்கவே அவனால் முடியவில்லை. அவன் அவளை விரும்பி, அந்தக் கிராமத்து வழமை போலவே இளம் வயதிலேயே திருமணமும் செய்து ஆறுமாதங்கள் கூட ஆகவில்லை. இவ்வளவு குறுகிய காலத்தில் அவர்களுடைய வாழ்வு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றின் சலசலப்பு, இரவு நேரத்தின் தவளைச் சத்தங்கள் - சிங்கள இராணுவத்தினர் வள்ளங்களில் ஆற்றைக் கடந்து ஊருக்குள் இறங்குகிறார்கள். அந்த இருட்டின் துணையுடன் பதுங்கிச் சென்ற சிங்கள இராணுவ வெறியர்களினால் அந்தக் கிராமம் சுற்றி வளைக்கப்படுகிறது.

நாளை என்ன நடக்குமோ?

தம்பலகாமத்திலும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களிலும் இன்று நடக்கும் சோக நிகழ்வுகள், நாளை இங்கும் தொடரும். ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள், சிறுவர்கள் வித்தியாசமில்லாமல் வெறித் தனமாகத் தாக்கப்படுவார்கள்.

இந்த மண்ணின் இளம் பெண்கள் காட்டுக்குள் இழுத்துச் செல்லப் படுவார்கள். அவர்களில் சிலர் திரும்பவே மாட்டார்கள்.

அந்த மிருகங்கள் விலகிய பின்...

ஊர் புகைந்து கொண்டு இருக்கும், ஆற்றிலும் வயலிலும் தமிழரின் உடல்கள் வீசப்பட்டுக் கிடக்கும்.

துயரத்தைச் சுமந்த அந்த மக்கள்தான் புலிகளுடனும் இரண்டறக் கலந்து வாழ்ந்தார்கள்.

வழமை போலவே விடிந்த அந்தக் கிராமத்தில் மக்கள் தம் வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். கௌரி பாலர் பாடசாலையில் படிப்பித்துக் கொண்டிருந்தாள். பிள்ளைகளின் கலகலப்பு, கத்தல்கள். தமிழீழத்தின் வருங் காலத்தை நிர்மாணிப்பவர்களின் உருவாக்கத்தில் அவள் ஈடுபட்டிருந்தாள்.

அதுவரையில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திருந்த படையினர் திடீரென ஊருக்குள் நுழைந்தார்கள். அந்தக் கிராமம் அமைதியை இழந்தது. எங்கும் அந்தச் சிங்களப்படை வெறியர்களின் அதட்டும் குரல்களும், சித்திரவதையினால் எழுந்த ஓலங்களும்,

கலங்கி நிற்கும் அந்தச் சின்னஞ்சிறுசுகளின் கண்ணீருக்கிடையே ஒரு படை வெறியன் கௌரியை மிரட்டிக்கொண்டிருந்தான்.

"புலிகள் இங்கு வாறதா?

அவங்க தானே இந்தப் பள்ளிக்கூடம் கட்டினது?"

ஊர் முழுக்க கேட்கப்பட்ட கேள்விதான். ஆனால் பதில் ஒரே மாதிரியாகவே இருந்தது, "இங்கு எவருமே வருவது இல்லை. இது நாங்கள் கட்டிய பாடசாலை." அவர்களின் மிரட்டல்கள் பலனளிக்க வில்லை; சிங்கள இராணுவத்தினர் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

கௌரி வாய் விட்டுச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"இவையின்ரை அநியாயத்திற்கு வலுவிரைவில ஒரு முடிவு கிடைக்கத் தான் போகுது."

அந்தப் படை வெறியர்கள் திரும்பிச் செல்வதை இறவடிச்சேனைக் கிராமம் பார்த்துக்கொண்டிருந்தது.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலங்கேணிக்குப் பின்புறம்தான் இறவடிச்சேனை இருந்தது. குளிர்மை நிறைந்த அந்தக் காட்டுப்புறக் கிராமத்திற்குத் தோணிகளில் ஆற்றைக் கடந்து தான் செல்ல வேண்டும். காட்டுக்கு நடுவே இருக்கும் வயல் வெளிகளில் தான் அந்த மக்கள் காலபோக நெற்செய்கையை மேற்கொள்வார்கள். மற்ற நாட்களில் எல்லாம் வயல் வெளிகளில் மாடுகள் தான் நிறைந்து நிற்கும். ஆலங்கேணியிலிருந்தும் அதன் அயற் கிராமங் களிலிருந்தும் இங்கு தொழில்ரீதியாக வந்த மக்கள், காலப் போக்கில் அங்கே நிரந்தரமாக வாழத் தொடங்கினார்கள்.

கௌரியும் அப்படித்தான். முதலில் தோட்டத்துக்குத் தான் வந்து போய்க் கொண்டிருந்தாள் - மூர்த்தியை சந்திக்கும் வரை. அதன் பின் அவர்கள் அந்தக் கிராமங்களின் இளங்குடும்பங்களில் ஒன்று.

விடுதலைப் பற்றுடைய இருவரின் சேர்க்கை அந்தக் குடும்பம்.

"இந்த மண் பாதுகாக்கப்படுவதற்கு, தேவை என்றால் நாங்களும் ஆயுதம் தூக்கவேண்டும்" என்பாள் கௌரி.

அவர்களுடைய வாழ்வின் இனிமை நிறைந்த வசந்த காலம் அந்தக் கிராமத்திலும், ஆற்றிலும் கழிந்து கொண்டிருந்தது.

* * *

திருகோணமலை மாவட்டம்.

நூற்றுக் கணக்கான சிங்களப் படை முகாம்கள், சிங்களக் குடியேற்றக் கிராமங்கள் இவற்றுக்கிடையே கடுமையான போராட்ட வாழ்க்கையை மேற்கொண்டிருந்த புலிகளிற்கு, அந்தக் கிராமந் தான் ஆறுதல் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம். நீண்ட தூர நடைப்பயணங்களின் பின்பு அங்கு தான் அவர்கள் சிறிது ஓய்வெடுப்பார்கள்.

அந்தக் கிராமத்து மக்கள் புலிகளுடன் ஐக்கியமாகி விட்டார்கள்.

"தம்பியவை, உங்களோட பழகிறதாலையும் உங்களிற்கு உதவி செய்யிறதாலையும் நாங்கள் எவ்வளவு பெருமைப்படுறம் தெரியுமே!" கந்தையாக்கிழவர் அடிக்கடி சொல்லும் வார்த்தைகள்தான்.

"இல்லையணை அப்பு.

நாங்கள் களைச்சு வருகிற நேரத்தில நீங்கள் தருகிற தண்ணியும், அன்பும் அரவணைப்பும் எங்களை எவ்வளவு சந்தோசப்படுத்திறது தெரியுமே! எங்கட சோர்வே பறந்து போயிடுது அப்பு" போராளி ஒருவனின் பேச்சைக் கேட்டுச் சீறி விழுந்தார் கிழவர்.

"நீங்கள் ஆருக்காண்டியடாப்பா கஸ்டப்படுறீங்கள், எங்களுக்காத் தானே! இதுதான் எங்கட போராட்டப்பங்களிப்பு. இதுவும் செய்யாட்டி நாங்களும் ஒரு தமிழரோ?"

அமைதி அடைந்த கிழவர் பெருமூச்சு விட்டபடியே முணுமுணுத்தார்.

"என்ர கண்ணுக்கு முன்தான்ரா தம்பி இந்த மண் பறிபோனது."

அந்தக் கிராமத்து மக்கள் வசதி அற்றவர்கள்தான் - அதிகம் படிக்காத வர்கள்தான். ஆனாலும் தமிழன் என்ற உணர்வில், இந்த மண் மீதான பற்றில், உயர்ந்த மனிதர்களாக வாழ்ந்தார்கள். அந்தக் கிராமத்தின் வாழ்வில் புலிகளும் கலந்துவிட்டார்கள். அங்கு ஒரு பாலர் பாடசாலையை அமைத்தார்கள். அதற்குக் கௌரிதான் ஆசிரியை. அவள் அடிக்கடி சொல்லிக்கொள்வாள்.

"அண்ணாக்களின் இலட்சியத்தில் நானும் கலந்து கொள்கிறேன்."

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லம்மாவுக்கோ பெரும் கவலையாக இருந்தது. மகள் செய்வது சரிதான் என்றாலும் அவளுக்குப் பயமாக இருந்தது.

''பிள்ளை உந்தப் படிப்பிக்கிறத விட்டால் என்ன?''

''ஏனம்மா?''

''இல்லை அவனுகளுக்குத் தெரிஞ்சு போச்சுப் போல கிடக்கு. அவன் சுட்டாப் பரவாயில்லை, நீ பொம்பிளைப் பிள்ளையெல்லே.''

''ஏனணை அம்மா, இந்தப் போராட்டத்தில இருந்து விலகி, தங்களுக்கு ஒன்றும் தெரியாதென்று இருப்பவர்களை மட்டும் அவன் சும்மாவே விடுறான்? ஏன் அந்தப் பதினாலு வயதுப் பிள்ளை ரோகினியைக் கெடுத்துக் கொலை செய்யேலையே? அதை மாதிரி எத்தனை பேரை இந்தச் சிங்களக் காடையர்கள் கொலை செய்திட்டாங்கள்.

இதுக்கெல்லாம் முடிவென்டா ஊரோட ஆம்பிளை பொம்பிளை யெல்லாம் துவக்குத் தூக்கிறதுதான். அப்பதான் நாங்கள் மானம் மரியாதையோட வாழ முடியும். இல்லாட்டி அவன் செய்யிறதெல்லாத் தையும் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டியதுதான்.''

செல்லம்மா மௌனமானாள்; மகள் உண்மையைத்தான் சொன்னவள். செல்லம்மாவின் கண்களுக்கு முன்னாலேயே எத்தனை இளம் பெண்களை ஊர்காவல் படைக்காரங்கள் கொண்டு போனார்கள். அவர்களில் சிலபேர் திரும்பவும் வந்தார்கள்; எத்தனையோ பெண்களை அதன்பின் காணவே இல்லை.

தை, 1987

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்ணியா சிங்களப்படை முகாமிலிருந்து வந்த சிங்கள இராணுவத் தினராலும், ஊர்காவற் படையினராலும் இறவடிச்சேனைக் கிராமம் சுற்றிவளைக்கப்பட்டது. ஊரெங்கும் துப்பாக்கி வேட்டுக்கள்.

அது ஒரு துயரம் நிறைந்த நிகழ்வு.

பாலர் பாடசாலைக்குள் நுழைந்து கொண்ட படை வெறியன் ஒருவன், கௌரியின் கன்னத்தில் மாறிமாறி அடித்தான்.

"உனக்குப் புலிகளின் முகாமைத் தெரியும்" - அந்தச் சிங்கள வெறியன் உறுமினான்.

அந்தப் பாலகர்களின் கண்ணீருக்கும், கதறல்களுக்குமிடையே அவள் சித்திரவதை செய்யப்பட்டாள். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையிலே அவள் அருகிலிருந்த அவளது வீட்டுக்கு இழுத்துச் செல்லப்பட்டாள். அதன் பின் அவர்கள் தங்களது ஆசிரியையைக் காணவேயில்லை.

வீட்டிலிருந்த மூர்த்தியின் தாய் அடித்து விரட்டப்பட்டாள்.

கௌரி வீட்டிற்குள் இழுத்துச் செல்லப்பட்டாள்.

அங்கே சிங்களப் படை வெறியர்கள் இருவர் அவளை மாறி மாறி... அந்த இளம் பெண் அந்த மனித மிருகங்களினால் படுபயங்கரமாகச் சித்திரவதை செய்யப்பட்டாள்.

"ஐயோ! அம்மா!"

"ஐயோ பாவிகளே என்னை ஒண்டும் செய்யாதிங்கோ..."

"உங்கட சகோதரம் மாதிரி நினையுங்கோ..." கௌரியின் குரல் அந்தக் கிராமம் முழுவதும் ஒலித்துக் கொண்டிருந்தது. அந்தக் கிராமத்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் சிந்தியபடியே அவளின் கதறல்களை கேட்டுக் கொண்டிருந் தார்கள்.

அந்த மண்ணில் பல பெண்களுக்கு நடந்த சோக முடிவுதான்அன்று கௌரிக்கும் நடந்தது. இந்த மண்ணையும் இந்த மண்ணின் விடுதலையையும் விரும்பிய கௌரி அன்று சாகடிக்கப்பட்டாள். ஆனால் அவளின் உயிரிழப்பு ஒன்றை உணர்த்தியது.

'நாம் மனிதர்களாக வாழ வேண்டும் என்றால்... எமது மண் மீட்கப்பட வேண்டும்'

* * *

மூர்த்தியினால் கௌரியின் இழப்பைத் தாங்க முடியவில்லை. அவளில்லாத நாட்களை எண்ணிப் பார்க்கவே அவனால் முடியவில்லை. அவன் அவளை விரும்பி, அந்தக் கிராமத்து வழமைபோலவே இளம் வயதிலேயே திருமணமும் செய்து, ஆறுமாதங்கள் கூட ஆகவில்லை. இவ்வளவு குறுகிய காலத்தில் அவர்களுடைய வாழ்வு...

கௌரியின் வார்த்தைகள் எவ்வளவு உண்மையானவை... இந்தக் கிராமம் முழுவதும் ஆயுதம் தூக்கினால் தான் நாம் வாழ முடியும்.

கௌரி மரணமடைந்து 19ஆவது நாள்.

ஊருக்குள் திரும்பவும் சிங்களப் படை வெறியர்கள். மூர்த்தி அவர்களினால் பிடிக்கப்பட்டான்.

"ஆசிரியை உனது மனைவி தானே?"

"ஆம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப நீயும் புலிதானே?"

தொடர்ந்து அவன் முரட்டுத்தனமாகத் தாக்கப்பட்டான். அவர்களுடைய சித்திரவதைகளும், அடிகளும், உதைகளும் தொடர்ந்துகொண்டிருந்தன.

அவன் மௌனமாகச் சொல்லிக்கொண்டிருந்தான்.

"இவர்கள் எங்களை அடித்தாலும் உதைத்தாலும் ஏன்... அழித்தாலும் கூட எங்கட மண் பற்றை அழிக்க முடியாது." அந்தப் படை வெறியர்களின் துப்பாக்கிகள் அவனைக் குறிவைத்து வெடித்தன.

கௌரியின் வீட்டு வாசலில் -

செல்லம்மாவிடம் ஒரு இராணுவ அதிகாரி சொல்லிக்கொண்டிருந்தான்.

"உனது மகளைச் சுட்டுக்கொன்றதை நீ ஏன் வந்து சொல்லவில்லை. இனிமேல் இப்படிச் சம்பவம் ஏதும் நடந்தால் பயப்படாமல் வந்து சொல்ல வேண்டும். நாங்கள் அவங்களில் நடவடிக்கை எடுப்போம்..."

ஆனால் மூர்த்தியின் உயிரற்ற உடலுக்கு மேலால் தமது சப்பாத்துக் கால்களைப் பதித்தபடியே அந்த சிங்களப்படை வெறியர்கள் நடந்து கொண்டிருந்தார்கள்.

அந்த இளம் உயிர்கள் சாகடிக்கப்பட்டதற்குக் காரணம், அவர்கள் இந்த மண்ணின் விடுதலையை விரும்பியவர்கள் என்பதற்காக மட்டுமல்ல, இந்த மண்ணில் கொல்லப்படும் சகல தமிழர்களையும் போலத்தான் அவர்களும் தமிழர்கள் என்பதற்காகவே அழிக்கப்பட்டார்கள்.

நெருப்பு

புரட்டாதி 1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டுகளால் கிழிக்கப்பட்ட பாசங்கள்

"ராஜஸ்தானிலோ உத்தரப்பிரதேசத்திலோ இருந்து இவனின்ர அம்மாவோ - அப்பாவோ - தங்கச்சியோ அனுப்பிய கடிதமாக இருக்கும்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதி முகாமில்தான் நிருபர் அவனைச் சந்தித்தார்.

பன்னிரண்டு வயது.

அவனைப் போலவே சின்னஞ்சிறுசுகள் - கிழவிகள் - இளைஞர்கள் - குழந்தைகளும் கையுமாகத் தாய்மார்கள் - பெரியவர்கள் அவனைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள்.

சட்டிகளும் பானைகளும் மூட்டை முடிச்சுகளுமாய்க் கிடந்த அந்த இடத்தில், ஆங்காங்கே ஓரிரு அடுப்புகள் எரிந்துகொண்டிருந்தன.

மூலையில் தொங்கிய துணித்தொட்டிலில் ஒரு குழந்தை கவலையில்லாமல் சுருண்டு கிடந்தது.

எலும்பும் தோலுமாக இரண்டு மூன்று நாய்கள்.

சிறுவனின் தோள்களைத் தடவிக்கொடுத்து "என்ன தம்பி... எப்படி?" என்று தொடங்கினார் நிருபர்.

சுற்றி இருந்த முகங்களை ஒவ்வொன்றாக அவன் மாறி மாறிப் பார்த்தான். பிஞ்சு உதடுகள் துடிக்க, சிறுவனின் விழிகளில் கண்ணீர் பொங்கிற்று.

நிருபர் கொஞ்ச நேரம் பேசவில்லை. பின்பு அவனைப் பார்த்து அவர் கேட்டார் -

"பெயர் என்ன தம்பி?"

"ஜெயச்சந்திரன்."

குரல் தளதளத்தது.

சிறுவன் குலுங்கி அழத் தொடங்கிவிட்டான்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரும்பிராயில் மகிழ்ச்சியாக வாழ்ந்த குடும்பம் அது. ஜெயச்சந்திரன் தான் அந்த வீட்டின் செல்லப்பிள்ளை. குளிப்பாட்ட அப்பா, தலைக்கு எண்ணெய் வைத்துவிட அம்மா, பாடப்புத்தகங்களை எடுத்துத் தந்து பள்ளிக்கு அனுப்ப அண்ணா - தங்கச்சி ஒருத்தி இருந்தும்கூட, அவனைத்தான் எல்லோரும் தலையில் வைத்துக்கொண்டிருந்தார்கள்.

ஆனால்...

ஜெயச்சந்திரனை இழுக்கும் ஏதோ ஒன்று அவன் தங்கையிடம் இருந்தது. அவளையே அவன் சுற்றிச்சுற்றி வந்தான். அவளோடு விளையாடுவது - சண்டைபோடுவது இரண்டும்தான் அவனுக்கு எல்லாம். ஊர்ப்பிள்ளைகள் யாராவது தங்கச்சியைத் தொட்டால், அவனுக்குப் பொல்லாத கோபம் வரும். ஒரு தடவை பக்கத்துத் தெருப் 'பொடியன்' ஒருவனை ஒரு முரட்டுக்கல் பதம்பார்த்திருக்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அண்ணா ஒரு பட்டதாரி மாணவன். ஜெயச்சந்திரனுக்கு அவன்தான் வீட்டில் பாடம் சொல்லிக் கொடுப்பான். ஒவ்வொரு மாலை வேளையிலும் அடிவிழும். 'அண்ணை'யின் அடி பலமானது.

* * *

நிருபர் ஜெயச்சந்திரனைப் பார்த்துக் கேட்டார். "அண்ணை உன்னோட விருப்பமாக இருந்தார் என்று சொன்னாயே... இப்ப அண்ணை அடிப்பார் என்று சொல்லுறாயே?"

சிறுவனுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு கிழவி வாயைப் போட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் உரும்பிராய்க்காரி.

"தம்பியின்ரவீடு எங்களின்ர வீட்டுக்குப் பக்கத்தில் தான் மோனே... இவன்ர தமையன் இவனில பாசமா இருப்பான். எனக்குத் தெரியும்... ஒரு நாள் வீட்டில வச்சிப் படிப்பிக்கக்குள்ள இவனுக்கு அடிச்சுப் போட்டு அவன் தான் அழுதவன்..."

நிருபர் புரிந்துகொண்டார்.

ஜெயச்சந்திரனைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே, கிழவியிடம் கேள்விகளை அடுக்கினார் அவர். நிருபருக்குத் தேவை ஜெயச்சந்திரனின் கதை.

* * *

அந்தக் குடும்பம் கலகலப்பானது.

ஜெயச்சந்திரனை ஒருநாள் அவன் தந்தை தோளில் வைத்துக் கொண்டு, வீட்டு முற்றத்தில் கூத்தாடினார்.

இனிப்பு வாங்கி வரும்போதெல்லாம் அவன் கையில் தான் அவர் அதைக் கொடுப்பார். அவன் அப்படியே தங்கச்சிக்குத் தந்துவிட்டு அவளிடம் பங்கு கேட்பான்.

வேலியில் நின்ற செம்பருத்தி மரத்தில் ஜெயச்சந்திரன் ஏறி உட்கார்ந்து கொண்டு, கீழே நிற்கும் தங்கையைப் பார்த்து, "இதுதான் ஸ்பீக்கராம்" என்று கூறிவிட்டு உரத்த குரலில் பேசுவான். "நாங்கள் விடுதலைப் புலிகள் பேசுகிறோம்... தமிழீழம் வாழ்க! பிரபாகரன் வாழ்க!"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தில் நின்று தாய் சிரிப்பாள்.

மகனில் உயிரையே வைத்திருந்தவள் அவள். ஜெயச்சந்திரனுக்குப் பிடித்தமான பருப்புக்குழம்பு, வாரத்தில் இரண்டு நாட்களாவது அடுப்பில் இருக்கும்.

தங்கச்சி முன் மண்டபத்தில் ஜெயா அண்ணைக்குப் பக்கத்தில் படுத்துக் கொண்டு கதை கேட்பாள்.

"ஒரு ஊரில ஒரு ராசா இருந்தாராம்..."

தங்கச்சியை அவன் தூங்கவைப்பான்.

கலகலப்பாக இருந்தது அந்தக் குடும்பம்.

அப்போதுதான்...

* * *

நிருபர் ஒருமுறை இரத்தம் தோய்ந்த ஒக்ரோபர் திங்களை நினைத்துக் கொண்டார்.

விடுதலைப் புலிகளுக்கும் - இந்தியப் படைகளுக்கும் சண்டை தொடங்கிய நாட்கள் கொடுமையானவை.

விடுதலைப் புலிகள் ஆவேசமாகப் போராடினார்கள்.

எல்லா ஊர்களிலும், தெருக்களிலும், பலம் மிக்க இந்திய 'டாங்கி'கள் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கி நொறுங்கிக் கிடந்தன. சில உடைந்த டாங்கிகளில் யாரோ புலிக்கொடியைப் பறக்கவிட்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் விமானங்களின் 'உறுமல்' எப்போதும் வானத்தில் கேட்டுக் கொண்டே இருக்கும்.

''இந்தியப்படை ஊரை எல்லாம் போட்டு அழிக்குதாம்... பத்து அப்பாவிகள் செத்துப்போனதுகளாம்... ஒரு குழந்தைக்குக் கால் இல்லையாம்... எங்கையோ வீடுகளுக்கெல்லாம் நெருப்பு வைக்கினையாம்...''

சேதிகள் இரத்தத்தை உறைய வைத்துக்கொண்டிருந்தன.

ஜெயச்சந்திரனைச் சுற்றி இருந்தவர்களைப் பார்த்து நிருபர் ''ஓ! அந்த நாட்கள் கொடுமையானவை!'' என்று சொன்னார்.

''இந்தியப் படை உங்களின்ரை வீட்டுக்குள்ள நுழையிறபோது என்ன மணி தம்பி இருக்கும்?'' என்று ஜெயச்சந்திரனைப் பார்த்துக் கேட்டார் அவர்.

''ராத்திரி ஆறு மணி.''

* * *

முதலில் ஒரு 'கிறனேட்' ஜெயச்சந்திரனின் காணி வேலிக்கு உட்புறமாக விழுந்து, பேரோசையோடு அதிர்ந்து வெடித்தது.

துப்பாக்கிகள் குண்டுகளைப் பொழிந்து தள்ள - பன்றிகள் தோட்டத்துக்குள் புகுந்தாற்போல் - வீட்டு முற்றத்தைக் கிழித்துக் கொண்டு. வெறியர்கள் நுழைந்தார்கள்.

ஒருவன் சப்பாத்துக்காலால் ஓங்கி வேகமாகக் கதவை உதைத்து நொறுக்கினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு ஆடிற்று.

முன் மண்டபத்தில் ஜெயச்சந்திரனின் அப்பா முகமெல்லாம் கறுத்துப்போய் அசைவற்றிருந்தார். இந்தியப் படை வெறியர்களில் ஒருவன் அவரைக் 'கொற கொற' என்று வெளியே முற்றத்துக்கு இழுத்து வந்தான்.

துப்பாக்கியின் வேட்டோசை கேட்டது.

அப்பா செத்துப்போனார்.

ஜெயச்சந்திரனும், அம்மாவும், தங்கச்சியும் உள்ளே இருந்தவர்கள், கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடி வந்தார்கள். அம்மாவையும் ஒருவன் துப்பாக்கியால் குறி பார்த்துச்சுட்டான். நெஞ்சைக் கையால் பொத்திக்கொண்டு, அம்மா குசினி வாசலில் விழுந்தாள். அவள் மீது தொடர்ந்து குண்டுகள் பாய்ந்தன.

அடுப்பில் இருந்த பருப்புச் சட்டி நொறுங்கிச் சிதறிற்று.

* * *

தங்கச்சியைப் பற்றி கூறத் தொடங்கிய ஜெயச்சந்திரன், அழுது அழுதே நிகழ்ச்சிகளைக் கூறினான்.

"அம்மா விழுந்ததைப் பார்த்துத் தங்கச்சி, 'ஐயோ அம்மா!' என்று கத்தினாள். அவளின்ர வாயில துப்பாக்கியை வச்சு சுட்டாங்க. தங்கச்சியின்ர உடம்பில எல்லாம் சுட்டாங்க. அவளின்ர உடம்பு கிழிஞ்சு போட்டுது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவன் அழுதுகொண்டே இருந்தான். பக்கத்தில் இருந்த உரும்பிராய்க் கிழவி தொண்டை அடைக்க "என்ர ராசா" என்று குழறத் தொடங்கினாள்.

நிருபர் ஜெயச்சந்திரனைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தேற்றினார்.

"பிறகு என்ன தம்பி நடந்தது...?"

* * *

இத்தனை நேரமும் பக்கத்து அறையில் இருந்த ஜெயச்சந்திரனின் அண்ணன் வெளியே வந்தான்.

ஆவேசத்தால் அவன் உடல் நடுங்கியது.

"எங்களை எல்லாம் ஏன் சுடுறீங்கள்? நாங்கள் என்ன பிழை செய்தனாங்கள்?" என்று கேட்டான் அவன். ஆங்கிலத்திலும் அவர்களோடு அவன் பேசினான். "நான் ஒரு யூனிவசிட்டி மாணவன்" என்று அண்ணன் சொன்னதை, ஜெயச்சந்திரனால் புரிந்துகொள்ள முடிந்தது.

ஆனால்...

ஒரு நொடியில் அண்ணனின் உடலும் குண்டுகளால் துளைக்கப் பட்டது. பாசத்துக்குரிய 'அண்ணை' ஒரு மரத்தைப் போல கீழே சாய்ந்தான்.

முரடர்கள் ஜெயச்சந்திரனின் வீட்டிலேயே இரவு முழுவதும் தங்கினார்கள்.

ஒரு மூலையில் நடுங்கிக் கொண்டும் அழுதுகொண்டும் இருந்த ஜெயச்சந்திரனைப் பார்த்து, அடிக்கடி அவர்கள் சிரித்தார்கள்.

அவனை அவர்கள் தொடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் அந்த வெறியர்கள் வீட்டை விட்டு வெளியேறுகிறவரை, ஜெயச்சந்திரனின் உயிர் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டே இருந்தது.

* * *

நிருபர் சிறுவனைப் பார்த்துக் கேட்டார் -

"ராத்திரி முழுதும் உங்களின்ர வீட்டிலதான் அவனுகள் இருந்ததாச் சொல்லுறாயே... அவ்வளவு நேரமும் என்ன தம்பி செய்து கொண்டிருந் தவன்கள்?"

ஜெயச்சந்திரன் கொஞ்ச நேரம் எண்ணிப் பார்த்தான். பின்பு சொன்னான் -

"அதில ஒருவன் சட்டைப் பைக்குள்ள இருந்து ஒரு கடிதத்தை எடுத்துப் படிச்சவன் - மற்ற இந்தியப்படைக்காறனுகள் கேட்டுக்கொண்டிருந்தவை."

நிருபரால் தாங்கமுடியவில்லை. ஆத்திரத்தோடு அவர் உரத்த குரலில் கத்தினார் -

"ராஜஸ்தானிலோ உத்தரப்பிரதேசத்திலோ இருந்து இவனின்ர அம்மாவோ - அப்பாவோ - தங்கச்சியோ அனுப்பின கடிதமாக இருக்கும்!"

தமிழீழம்

ஜூலை - 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுந்தான் மகனைத் தேடுகிறான்...

பாபுராஜ் நடுங்கிக்கொண்டே குழிக்குப் பக்கத்தில் போய் நின்றதை எல்லோரும் பார்த்தார்கள். அவனை நோக்கி இந்தியப் படைக்காறன் ஒருவன் துப்பாக்கியால் குறிபார்த்த போது, "சுடாதீங்க ஐயா... அம்மாவை அனாதை ஆக்கிடாதீங்க ஐயா" என்று கெஞ்சினான் பாபுராஜ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வெட்டித்துறைக்குப் பக்கத்து ஊர் கம்பர்மலை. மறைந்த மாவீரன் பண்டிதர் இங்கே தான் பிறந்தான். தமிழின உணர்வு நிரம்பிய மக்கள் - ஓங்கி வளர்ந்த பனைமரங்களில் ஆங்காங்கே சிவப்பு நிறத்தில் மிடுக்கான புலிக்கொடி பறந்து கொண்டிருக்கும்!

நடுப்பகல் 1.00 மணி பேச்சியம்மா மகனுக்குச் சோறு போடப் போனவள், தெருவில் ஒலிபெருக்கியில் யாரோ எதையோ அறிவிப்பதைக் கேட்டு எட்டிப் பார்த்தாள். அவர்கள்தான்... இந்தியப்படைதான் பொது மக்களை ஒலிபெருக்கியில் அழைத்துக் கொண்டிருந்தார்கள்.

"சந்தியில் வந்து கூடுங்கள். உங்களுக்கு இலவச அரிசி - கோதுமை - கருவாடு - வழங்கப்படும். எல்லா மக்களையும் அழைக்கிறோம். சந்தியில் வந்து கூடுங்கள்."

பேச்சியம்மா பெருமூச்சு விட்டாள்.

ஒக்ரோபர் மாதத்தில் தொடங்கிய போர், ஒரு திங்களாகியும் ஊரடங்குச் சட்டமும் குண்டு வீச்சும் சாவும் ஓலமுமாய்... இன்னும் நிற்காமல்...

கொழும்புக்கு வண்டிகள் போய் வர முடியவில்லையாம்... உணவுப் பொருள் தட்டுப்பாடு... ஒவ்வொரு நாளும் ஏதோ ஒருநேரச் சாப்பாட்டோடு பொழுது கழிகிறது.

"டேய் பாபு... வாடா தம்பி. பின்னால சாப்பிடலாம்...சோத்துக் கோப்பையை வைச்சிட்டு வா... சந்திக்குப் போனாத்தான் நமக்கும் ஏதாச்சும் கிடைக்கும்.

பேச்சியம்மா பாபுராஜை இழுத்துக்கொண்டு சந்திக்குப் போனாள்.

பிச்சை எடுக்கும் நிலையில் வாழ்ந்தவள் அல்ல பேச்சி. கொழும்பில் முனுசாமியோடு அவள் குடியிருந்த காலம் கலகலப்பானது. முனுசாமிக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியுரிமை இல்லை. பேச்சியம்மா சிறிலங்காவின் குடியுரிமையைப் பதிவு மூலம் பெற்றிருந்தாள். கொழும்பில் அவனுக்கு நல்ல வருவாய் இருந்தது. அந்தக் காலத்தில்தான், கிளுகிளுப்பான குடும்ப உறவின் அறுவடையாய் ஒன்பது பிள்ளைகளை இறக்கி வைத்தாள் பேச்சியம்மா. மூன்று பிள்ளைகளுக்குத் திருமணம் ஆயிற்று. ஆறு பிள்ளைகள் இன்று அவள் பொறுப்பில் - கம்பர்மலையில் - அவள் கூடவே நொந்துபோய்க் கிடக்கிறார்கள்.

முனுசாமி கொழும்பை விட்டுக் கம்பர்மலைக்கு வந்து 14 ஆண்டுகள் ஆகின்றன. கொழும்பில் அடிக்கடி சிங்கள இனவெறிக் கலவரங்கள்... இரத்தம்... உயிரோடு தமிழர் எரிப்பு... கற்பழிப்புக்கள்... தமிழீழத்தில் ஏதோ ஒரு பகுதியில் போய் உட்கார்ந்தால் நிம்மதியாக வாழலாம் - இப்படித்தான் கம்பர்மலைக்கு வந்து, எட்டு ஆண்டுகள் வரை அந்த மக்களின் அன்பில் ஊறித் தோய்ந்து - அவர்கள் மகிழ்ச்சியாகத்தான் இருந்தார்கள்... ஆனால் 83 ஆம் ஆண்டில் திடீரென்று கண்களை மூடி, பேச்சியையும் பிள்ளைகளையும் அனாதைகளாக்கி விட்டு முனுசாமி போனதிலிருந்து... அந்தக் குடும்பம் இருளில் மூழ்கிற்று. இன்று பேச்சியம்மாவோடு நொந்து அழுந்தி வாழும் பிள்ளைகளில் நான்கு பேர் பெண்கள் - இருவர் ஆண்கள். பாபுராஜுக்கு வயது 24. சின்னவன் அந்தனிராஜ் 15 வயதில் பள்ளிக்குப் போய் வருகிறான்; வகுப்பில் முதலாம் பிள்ளை.

பாபுராஜைப் பார்த்து பேச்சி அடிக்கடி சொல்வாள் - "பாபு நீ இல்லேண்ணா நம்ம குடும்பத்தோட கதி என்னடா ஆவுறது? ஏதோ நான் செஞ்ச புண்ணியம்... நீயாவது உழைச்சி வந்து வயித்துக்குப் போடுறியே... சின்னவனோட படிப்பே உன்னால தாண்டா ஓடுது... இன்னம் கொஞ்ச நாள் போனா அவன் வளர்ந்து விடுவான். அப்புறம் கொழும்பில் உங்க அப்பா காலத்தில சீவிச்ச மாதிரியே..."

பேச்சியம்மாவின் கண்களில் அப்போது நீர் கொத்துக் கொத்தாகக் கொட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபுராஜ் சுறுசுறுப்பானவன். முனுசாமி சின்னவயதில் மகாத்மா காந்தியின் கதையை அவனுக்குச் சொல்லியிருந்தார். இந்திய விடுதலைப் போரைப்பற்றிக் கதை கதையாக அவர் சொல்லக் கேட்டிருக்கிறான். விடுதலைப் புலிகளின் தமிழீழப் போரை பாபுராஜ் அப்படியான ஒன்றாகத்தான் நினைத்தான். இந்தியப்படை தமிழீழத்துக்கு வந்த நாளில் அவனுக்கு ஒரே மகிழ்ச்சி. "இந்தியப் படை வந்தாச்சு - சிங்களவன் இனிமே தமிழர்களைத் தொடமுடியாது" என்று தாயிடம் சொல்லுவான் பாபுராஜ்.

பாபுராஜின் மகிழ்ச்சி நிலைக்கவில்லை.

திடீரென்று இந்தியப்படை தமிழீழமக்களையும் விடுதலைப் புலிகளையும் சுடத்தொடங்கியபோது, பாபுராஜுக்கு எல்லாமே குழப்பம் ஆயிற்று. யார் யாரைச் சுடுகிறார்கள்? மகாத்மா காந்தியின் கையில் துப்பாக்கி இருப்பது போல் அவனுக்கு அடிக்கடி தோன்றிற்று. தாயைப் பார்த்து ஒருநாள் அவன் கேட்டான்...

"இது ஏனம்மா இப்படி ஆச்சு?"

கம்பர்மலைச் சந்தியில் ஊரே கூடியிருந்தது. சிறு பெட்டிகளும் பைகளுமாக மக்கள் அங்கும் இங்குமாகச் சிதறி நின்றார்கள். ஒரு மனிதனைக் கண்டால் கூட 'வள்' என்று குரைக்கும் கந்தசாமி அண்ணை வீட்டு நாய், அந்தப் பெரிய கூட்டத்துக்கு நடுவில், எலும்பும் தோலுமாய் தெம்பில்லாமல் ஒரு மூலையில் சுருண்டு கிடந்தது.

கிழவர் ஒருவர் மதிலோரத்தில் உட்கார்ந்து வெறும் வாயைச் சப்பிக் கொண்டிருந்தார்.

நொவெம்பர் மாதத்தின் குளிர்காற்று சில்லென்று வீசிற்று.

பேச்சி தூரத்தில் இருந்த தெருமுனையைக் கவனமாகப் பார்த்தாள். பெரிய கூட்டமாக இந்தியப்படை சந்தியை நோக்கி வருவது தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருநூறு முன்னூறு பேர் இருக்கும் போலத் தோணுதே... ஏன்டா பாபு அரிசி போடறத்துக்கு இத்தனை பேர் எதுக்குடா?" என்று பாபுராஜைப் பார்த்துக் கேட்டாள் அவள்.

கீழே மணலில் உட்க்கார்ந்திருந்த பாபுராஜ் அச்சத்தோடும் பதற்றத் தோடும் தாயை அண்ணாந்து பார்த்தான்.

"தெரியல்லம்மா,"

கொஞ்ச நேரத்தில் இந்தியப்படை சந்தியில் இருந்த மக்களை வளைத்துக் கொண்டது.

டில்லியில் ஆட்சி செய்த கொடிய பழங்கால அரசர்களின் வெறிப் படைகள், குதிரைகளில் வாளும் கையுமாக ஊர்களை வளைத்துக் கொள்ளுமாமே! - அப்படித்தான் துப்பாக்கியும் கையுமாக அதே பழைய டில்லி நாகரிகத்தின் வாரிசுகளாய் இந்தியப்படை கம்பர்மலையில்...

பேச்சியம்மா பாபுராஜின் தோளை இறுகப் பற்றிப் பிடித்துக் கொண்டாள்.

கூட்டத்தில் நின்ற இளைஞர்களை ஒரு புறமாகத் தள்ளிக்கொண்டு போன உயரமான அதிகாரி ஒருவன் பாபுராஜுக்குப் பக்கத்தில் வந்தபோது, பேச்சியம்மாவுக்கு நெஞ்சு படபடக்கத் தொடங்கிற்று.

"என் மகன் அரிசி வாங்க வந்தவனையா... அவனை ஒண்ணும் பண்ணாதிங்க ஐயா."

பேச்சியம்மாவின் கண்ணீர் அதிகாரியின் நெஞ்சைக் கரைக்கவில்லை. கரடு முரடான இந்தியில் எதையோ வேகமாகப் பொழிந்து தள்ளினான் அவன். பாபுராஜின் கையைப் பிடித்து "கொறகொற' என்று அந்த வெறியன் இழுத்துக்கொண்டு போனபோது, பேச்சியம்மாவால் தாங்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாபு... பாபு... ஐயோ பாபு" என்று நிலத்தில் விழுந்து ஓங்கி அழுதாள் பேச்சி.

சந்திக்குப் பக்கத்தில் பேச்சியம்மாவின் வீடு இருந்தது. பாபுராஜின் சகோதரிகள் தாயின் ஓலம் கேட்டு பதறிக்கொண்டு ஓடி வந்தார்கள்.

அடித்தும் உதைத்தும், அங்கு நின்ற இளைஞர்களில் சிலரை இந்தியப்படை 'ட்றக்' வண்டியில் தூக்கிப் போட்டபோது, ஒரே பதற்றம் நிலவியது.

"பாபு... பாபு" என்று பேச்சியம்மா தொடர்ந்து கத்திக்கொண்டே இருந்தாள்.

ஊரில் சேதி அடிபட்டது. கம்பர்மலையில் கைதான இளைஞர்கள் ஏழு பேராம். பரமநாதன், வதனராஜா, சிவநாதன், ஜகதீஸ்வரன், பிரேமநாதன், லோகேந்திரன், பாபுராஜ் என்று ஊரில் பெயர்களைக் கூடச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்...

பேச்சிக்கிழவி வீதி வீதியாக அலைந்தாள்... 'பாபு எங்கே?'

இந்தியப்படை முகாம்களில் இருந்த அதிகாரிகள் சிலர் "அவன் பத்திரமாக இருக்கிறான். சீக்கிரம் வந்திடுவானம்மா... ஒண்ணும் யோசிக்காதே" என்று சொன்னார்கள்.

பேச்சியம்மாவின் வீட்டில் பிள்ளைகள் உண்ணவும் இல்லை... உறங்கவும் இல்லை. "அண்ணாவை விடவே மாட்டாங்களா?" என்று, தாயிடம் அந்தனிராஜ் அடிக்கடி கேட்டுக் கொண்டே இருந்தான்.

நான்கு வாரங்களுக்குப் பிறகு ஒருநாள்...

லோகேந்திரனையும் இன்னும் மூன்று பேரையும் இந்தியப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை செய்துவிட்டதாக யாரோ பேச்சியிடம் சொன்னார்கள். பேச்சியம்மா விடுதலையானவர்களை ஓடிப்போய்ப் பார்த்தாள்...

"எங்களுக்கு எதுவுமே தெரியாதம்மா" என்று கலங்கிய கண்களோடு லோகேந்திரன் கூறியபோது, ஏதோ நடந்துவிட்டது போலவே பேச்சிக்கு தோன்றிற்று. இல்லையென்றால் அவனுடைய கண்கள் ஏன் கலங்க வேண்டும்?

"ஏதெனாச்சும் ஆகி இருந்தா சொல்லுப்பா" என்று கெஞ்சினாள் பேச்சியம்மா.

லோகேந்திரன் பேசவில்லை. பேச்சி வீடு திரும்பினாள்.

அச்சம் லோகேந்திரனை ஊமையாக்கிற்றே தவிர, அவன் அப்படி ஒன்றும் கொடியவனல்ல. பேச்சியம்மாவிடம் சொல்லியிருக்கலாமே...? சொல்லவில்லையே! அவன் மனம் துடியாய்த் துடித்தது.

ஓ! இரத்தம் தோய்ந்த நொவெம்பர் 18 ஐ அந்த இளைஞர்கள் எப்படி மறப்பார்கள்?

நொவெம்பர் 16 இல் கைதான அவர்கள், இரண்டு நாட்கள் வல்வெட்டித்துறையில் வெவ்வேறு இந்தியப்படை முகாம்களில் இருக்க நேர்ந்தது. நொவெம்பர் 16 உம் 17உம் கொடுமையான சித்திரவதை களுக்கு அவர்கள் ஆளானார்கள். வதனராஜாவின் கண்களுக்கு முன்னாலேயே பரமநாதன் தலைகீழாகக் கட்டித் தொங்க விடப்பட்டு- அடித்துக் கொல்லப்பட்டான்.

18 ஆம் தேதி காலையில், மூன்று வெவ்வேறு முகாம்களில் இருந்து வல்லைவெளிக்கு ஆறு இளைஞர்களும் அழைத்து வரப்பட்டார்கள். பரமநாதனின் பிணமும் கொண்டு வரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு தோண்டிவைத்திருந்த குழியில் பரமநாதனின் பிணத்தை இந்தியப்படை வெறியர்கள் வைத்து மூடியபோது, அங்கு நின்ற எல்லா இளைஞர்களுமே அசைந்து போனார்கள்.

வல்லைவெளியில் நூறு இந்தியப் படையினர் - நான்கு இராணுவ வண்டிகள் - இதைத் தவிர ஒரு கொடிய அமைதி - வேறு எதுவுமே அப்போது இல்லை.

லோகேந்திரன், ஜகதீஸ்வரன், சிவநாதன், வதனராஜா, பிறேமநாதன், பாபுராஜ் ஆகியவர்களின் பின்னால் கட்டப்பட்டிருந்த கைகளின் கட்டுக்களை ஒரு தடித்த காக்கிச்சட்டைக்காரன் அவிழ்த்துவிட்டான்.

பாபுராஜின் முகத்தில் ஒரு மெல்லிய முறுவல் இழையோடிற்று.

"ஆறு குழிகளை உடனே தோண்டுங்கள்!"

அதிகாரி ஒருவன் ஆங்கிலத்தில் ஓங்கிக் கத்தினான். மண்வெட்டி ஒன்றைத்தூக்கி இளைஞர்களுக்கு முன்னால் எறிந்தான் இன்னொருவன்.

பாபுராஜின் முகம் பழையபடி கறுப்பாயிற்று. ஆறு குழிகளையும் 'பாவம் செய்த தமிழீழத்தின் பிள்ளைகள்' தோண்டி முடித்தார்கள்.

"டேய் பாபுராஜ் - அந்த முதல்ல இருக்கிற குழிக்குப் பக்கத்துல போய் நில்லடா..."

வெறியன் ஒருவன் பாபுராஜின் தோளை உலுப்பி முன்புறமாகத் தள்ளிவிட்டான்.

பாபுராஜ் நடுங்கிக்கொண்டே குழிக்குப் பக்கத்தில் போய் நின்றதை எல்லோரும் பார்த்தார்கள். அவனை நோக்கி இந்தியப் படைக்காரன் ஒருவன் துப்பாக்கியால் குறி பார்த்தபோது, "சுடாதீங்க ஐயா... அம்மாவை அனாதை ஆக்கிடாதீங்க ஐயா" என்று கெஞ்சினான் பாபுராஜ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோகேந்திரனும் நண்பர்களும் அழுதார்கள்.

"ஐயா... நாங்கள் யாருமே விடுதலைப் புலிகள் இல்லை ஐயா... பாபுராஜ் உங்க இந்தியா தான் ஐயா... அவனைச் சுடாதீங்க..."

அதிகாரி பதவியில் இருந்த அந்த முரட்டு மீசைக்காறனுக்கு இளைஞர்களின் ஓலம் சிரிப்பையே உண்டாக்கிற்று. 'கமோன்' என்று வெறிபிடித்துக் கத்தினான் அவன்.

டுமீல் டுமீல் டுமீல்... மூன்று குண்டுகள் அடுக்கடுக்காகத் துளைக்கப் பிணமாகக் குழியில் சாய்ந்தான் பேச்சியின் பிள்ளை.

"உங்களுக்கு 24 மணி நேரம் தாறன். அதுக்கு முன்னால புலிகள் இருக்கிற இடத்த சொல்லிப்புடணும்... இல்லேன்னா இங்கேயே உங்களை மீண்டும் கொண்டுவந்து..."

அந்த முரடன் இளைஞர்களைப் பார்த்து உறுமினான். 'டிறக்' வண்டியில் அவர்கள் தள்ளப்பட்டார்கள். வண்டி திரும்பவும் வல்வெட்டித் துறையை நோக்கிப் போயிற்று.

அப்போது தான்...

வண்டியின் பின்புறக் கம்பிகளால் லோகேந்திரன் பார்த்தான். பாபுவின் குழியை அந்த வெறியர்கள் மண்வெட்டியால் மூடிக்கொண்டிருந்தார்கள்.

பேச்சியம்மா இன்னுந்தான் அலைகிறாள்...

சிறுவன் அந்தனிராஜ் இப்போதும்தான் அண்ணாவைப் பறிக் கேட்கிறான். கம்பர்மலையில் இன்னுந்தான் அந்த வீடு பட்டினி கிடக்கிறது.

தமிழீழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓநாய்களின் மகிழ்ச்சிக்காக...

"மரகதத்தை எங்கே அப்பா கொண்டு போனாங்க...?"

"இந்தியப்படை முகாமுக்குத்தான்..."

"அங்கே கொண்டுபோய் என்ன அப்பா செய்தாங்க?" நான் கல்லாகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20-04-1989 இல் வெளியான 'உதயன்"

செய்தி நாளேட்டின் பக்கங்களைப் புரட்டுகிறேன்.

எத்தனை கொடுமை!

நிகழ்வு நடந்த நாள் மட்டும் செய்தியில் இல்லை.

ஆனால்...

1989 பங்குனியில், அந்தக் கொடுமை நிகழ்ந்திருக்க வேண்டும்.

கண்கள் பனிக்கின்றன.

பத்தக்குட்டி மரகதத்தை எனக்குத் தெரியும்.

அசைவற்றுப் போகிறேன்.

என் மகள் பக்கத்தில் வந்து "ஏனப்பா அழுறீங்க?"

என்று கேட்கிறாள்.

நிமிர்ந்து பார்க்கிறேன்.

"கேள் மகளே...!"

* * *

தமிழீழத்தின் எல்லையில் 'கட்டுமுறிவு' அழகான சிற்றூர். ஒரு காலத்தில் இரண்டு மூன்று குடிசைகளோடு, மட்டக்களப்புப் பெருநிலத்தின் ஒரு மூலையில் இந்தப் பழைய காட்டுக் கிராமம் கிடந்தது. தேக்கு, கருங்காலி, முதிரை என்று ஓங்கி வளர்ந்த மரங்களின் நிழலில் - இந்தப் பச்சைக் காட்டில் - வேட்டையாடுகிறவர்கள் தங்கிச் செல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழிப்பான மண். காலை விடியலில் பறவைகளின் கீச்சொலி கிளம்பும். நெடிய மரங்களில் குரங்குகளின் தாவல். சோளக் கொல்லையில் விழும் கிளிகளை விரட்டும் சிறுவர்களின் அட்டகாசம். ஓரிரு கட்டை மாட்டு வண்டிகள் 'கடமுட' என்று நிலத்தில் கோடு கிழித்து நடக்கும்.

சிங்களக் குடியேற்றம் 'கட்டுமுறிவில்' பலமுறை தலை நீட்டியிருக் கிறது. அப்போதெல்லாம் தமிழர்கள் திட்டமிட்டு இக்காட்டு நிலத்தைக் காப்பாற்றி இருக்கிறார்கள். தமிழர்களின் தாய்மண் என்பதால், கட்டுமுறிவை இழந்து விடக்கூடாது என்பதில் தமிழர்கள் உறுதியாக இருந்தார்கள். வடமுனை, கட்டுமுறிவு போன்ற கிராமங்களில் சிங்களவனுக்கு எப்போதுமே ஒரு கண்தான். புத்தகத்தின் ஓரத்தை முதலில் தின்னும் புழுவைப் போல், தமிழீழத்தின் இந்த எல்லைக் கிராமத்தையும் விழுங்கவே சிங்கள ஆக்கிரமிப் பாளர்கள் முயன்றார்கள்.

பத்தக்குட்டி மரகதம் கட்டுமுறிவில் துடிப்பான மனிதர். கிராம மக்களோடு மனம் விட்டுப் பழகுவார். அவருக்கு தனி மதிப்புண்டு. அந்த மண்ணை, சிங்கள ஆக்கிரமிப்புக்குப் பலியாகாமல் காப்பாற்றியவர்களில் அவரும் ஒருவர். நாற்பது வயது தான். காடு வெட்டி - பயிர் போட்டு - மண்ணோடு மண்ணாக வளர்ந்தவர் மரகதம்.

தன் மண்ணை உயிராகவே அவர் நினைத்தார். காட்டுப் புறத்தில் அந்த மக்களைப் பார்த்து மரகதம் அடிக்கடி சொல்லுவார் - ''கட்டுமுறிவில் இருக்கிற மனுசனுகள் மட்டும் தான் தமிழர்களா? இல்லடா... இந்த மரங்கள் கூடத் தமிழ் மரங்கள் தான். இது தமிழன் மண்.''

சிங்கள வெறிப்படை பல முறை இந்தக் கிராமத்துக்குள் நுழைந்து, தமிழர்களை அடித்து விரட்டி இருக்கிறது. எப்படியாவது தமிழர்களை அச்சுறுத்தி வெளியேற்றி விட்டு, இக்கிராமத்தைச் சிங்கள மயமாக்க வேண்டும் என்று அரசு திட்டமிட்டது. ஆனால் தமிழர்களோ மீண்டும் மீண்டும் அந்த மண்ணிலேயே உட்கார்ந்தார்கள். மரகதமும் அவர் குடும்பமும் அந்த மண்ணை விட்டு அசையவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை உணர்வு நகர்ப்புறங்களை விடக் கிராமங்களிடையே எப்போதும் வீரியமாகி எழுகிறது.

அரசுத் தொழிலில் அமர்ந்து 'உங்கள் கீழ்ப்படிவுள்ள ஊழியன்' என்று கையெழுத்துப் போட்டுப் பழக்கமில்லாத காட்டு உழவர்கள்...

பத்தக்குட்டி மரகதம் உறுதியானவர். மண்வெட்டி பிடித்து உரமேறிய கைகள். இறுகிப் போன உடற்கட்டு. பெரிய அளவு அரசியல் தெரிந்த மேதையாக இல்லை என்றாலும், ஒரு கிராமத்தானிடம் இயல்பாகவே இருக்கும் 'மானம்' அவரிடம் இருந்தது. விடுதலைப் புலிகளோடு இந்தியப்படை சண்டை போடத் தொடங்கிய சேதி மட்டக்களப்பில் பரவிய போது, "என்ன இழவுக்குடா இந்தச் சண்டாளனுகள் வந்தவனுகள். வெள்ளாமையை மாடு தின்னுது - ஆரும் வந்து மாட்டை விரட்ட மாட்டானுகளா எண்டு பார்த்தா - வந்தவனுகள் இருந்த வேலியையும் எலுவா உடைக்கிறானுகள்" என்று குமுறி வெடித்தவர் மரகதம்.

சிங்களக் குடியேற்றத்தை இந்தப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் தான் ஓரளவு தடுத்து நிறுத்தினார்கள் என்பது அவருக்குத் தெரியும்.

அதனால்...

இந்தியப் படை விடுதலைப் புலிகள் மீது பாய்ந்த போது, அவருக்கு ஏனோ உணவு இறங்கவில்லை. பத்தக்குட்டி மரகதம் விடுதலைப் புலி அல்ல. விடுதலைப் புலிகளின் போராட்டம் நியாயமானது என்று கருதும் பல இலட்சம் தமிழீழ மக்களில் அவர் ஒருவர் - அவ்வளவு தான். தமிழீழத்தில் மிகப்பெரிய எண்ணிக்கையில் இந்தியப் படையினர் துப்பாக்கிகளோடு குவிந்து - அந்த மண்ணைத் தங்கள் காலின் கீழே போட்டு மிதித்து - வெறியாடிய நிகழ்வு ஒவ்வொன்றும் அவரை வாட்டி வதைத்தது உண்மை.

"இது பஞ்சமா பாதகம் இல்லையாடா தம்பி?" என்று பித்தம் பிடித்தவரைப் போல் ஊரில் யாரைப் பார்த்தாலும் கேட்டார் அவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவு...

கட்டுமுறிவில் மின்மினிப் பூச்சிகளாய் ஆங்காங்கே குப்பி விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

இரவு 7.00 மணி.

மரகதத்தின் வீட்டு வாசலில் மாட்டுக் கன்று 'அம்மா' என்று வாய் கிழியக் கத்தியது. மரகதத்தின் மனைவி உன்னிப்பாகக் கவனித்தாள்... படலையைத் திறந்து கொண்டு யாரோ கூட்டமாக வீட்டை நோக்கி வருகிறார்கள்...

புதிய மொழிக்குரல்கள்.

"ஆரது"?

முற்றத்தில் நின்ற கூட்டத்தைப் பார்த்து மரகதம் கேட்டார்.

இப்போது தெரிகிறது.

குப்பி விளக்கு வெளிச்சத்தில் இந்தியப் படைக் கும்பலை அவர்கள் பார்க்கிறார்கள்.

"நீதானே மரகதம்?."

"ஓ! அதுக்கென்ன வாறன்."

மனைவியும் பிள்ளைகளும் நின்ற பக்கம் திரும்பினார் மரகதம்.

"என்னத்துக்கு இவரைக் கொண்டு போறீங்க எண்டு சொல்லுங்க ஐயா... பயமா இருக்கு..."

மரகதத்தின் மனைவி அழத் தொடங்கி விட்டாள். வந்த கும்பலுக்குப் பெரியவன்போல இருந்தவன் சொன்னான் -

"ஒன்றுமில்லை சும்மாதான்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோளில் துண்டைப் போட்டுக் கொண்டு கிளம்பினார் மரகதம். புறப்படும் போது பிள்ளைகளை மீண்டும் ஒரு முறை அவர் பார்த்தார். விம்மலின் அலைகளாய் அவர் உதடுகள் நெளிந்து விரிந்தன.

காட்டில் தூரத்தில் எங்கோ ஆந்தைகளின் அலறல் கேட்டது.

* * *

"மரகதத்தை எங்கே அப்பா கொண்டு போனாங்க ...?"

நீர் கோர்த்த விழிகளோடு 'உதயன்' நாளேடும் கையுமாக நின்ற என்னைப் பார்த்து மகள் கேட்கிறாள்.

"இந்தியப் படை முகாமுக்குத்தான்."

"அங்கே கொண்டு போய் என்ன அப்பா செய்தாங்க?"

நான் கல்லாகிறேன்.

தமிழீழ விடுதலைப் போரில் எதிரிகள் உருவாக்கும் இப்படியான கொடிய சூழலுக்கு என் மகளை நான் பழக்கி எடுக்கத்தான் வேண்டும்.

அவள் தலையை நான் தடவிக் கொடுக்கிறேன். "கேள் மகளே...!"

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரகதத்தின் மனைவி இந்தியப் படை முகாமுக்கு மறுநாளே சென்று, கணவனைப் பற்றிக் கேட்டாள்.

"அவரை விடுதலை செய்து விட்டோம்..." என்று பதில் வந்தது.

ஓர் இந்தியப் படை வெறியன் முரட்டுத்தனமாக அவளைப் பார்த்துச் சிரித்தான். கண்ணீரோடு திரும்பியவள் பக்கத்தில் நின்ற இன்னொரு இந்தியப் படைக்காரன், ஒரு விதமாகத் தும்மினான்.

நரிகளிடமிருந்து எப்படியோ தப்பிப் புதரை நோக்கித் தாவும் முயலைப் போல, முகாமை விட்டு அவள் வெளியேறினாள்.

'ஒருவேளை அவள் இங்கே இந்தியப் படை முகாமுக்கு வர, மரகதம் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்திருப்பாரா?'

அவள் கால்கள் வீட்டை நோக்கி வேகமாக விரைந்தன.

வீடு நெருங்க நெருங்க அவள் நெஞ்சம் விம்மிற்று.

படலையடியில் பிள்ளைகள் ஒழுங்கையையே பார்த்தபடி நின்றிருந்தார்கள்.

ஏக்கத்தோடு அவள் கேட்டாள் -

"அப்பா வந்திட்டாரா?"

"இல்லையம்மா..."

மரகதத்தின் மனைவிக்கு நெஞ்சம் நொறுங்கிற்று.

என்ன ஆனார் மரகதம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் - இரண்டு நாள் - மூன்று நாள் - நான்கு நாள் என்று நாட்கள் ஓடுகின்றன. அந்த வீட்டில் யாருமே உணவருந்தவில்லை. மரகதத்தின் பிள்ளைகள் பூனைக்குட்டிகளைப் போல் வீட்டைச் சுற்றிச்சுற்றி வருகிறார்கள்.

பத்தக்குட்டி மரகதம் வழக்கமாகச் சாய்ந்து உட்காரும் மூலைச்சுவர் - துணி காயப்போடும் அந்தக் கயிறு - நாள் தவறாமல் மரகதம் ஆட்டுக்குக் குழை கட்டித் தொங்கவிடும் மாமரம் - எங்கு பார்த்தாலும் மரகதமாகவே...

கணவனின் உருவம் மரகதத்தின் மனைவி நெஞ்சில் தோன்றித் தோன்றி கரைகிறது.

ஐந்தாம் நாள் காலை...

அப்படி ஒரு விடியல் பிறந்திருக்கவே வேண்டாம்...

அன்று காலை கதிரவன் கிளம்பியபோது தான், பத்தக்குட்டி மரகதத்தின் வீட்டில் இருளே நுழையத் தொடங்கிற்று!

வாசலில் மீண்டும் அதே கும்பல்.

மரகதத்தின் மனைவி வந்தவர்களை அச்சத்தோடும் - அதேவேளை ஏக்கத்தோடும் பார்த்தாள். அவர்களில் மரகதம் இல்லை. வெறி பிடித்த அந்த விலங்குகள் மட்டுமே...

"அப்பா இன்னும் வீட்டுக்கு வரவில்லையே... ஐயோ எங்கட அப்பா எங்க...?" மரகதத்தின் ஒரு பிள்ளை தலையைக் கையால் அடித்துப் புலம்பத்தொடங்கியபோது, அவர்கள் அட்டகாசமாய்ச் சிரித்தார்கள்.

ஓர் இந்தியப் படைக்காரன், "கூய்...!" என்று கத்தித் தன் பெரிய பண்பாட்டை வெளிப்படுத்தினான். அடுத்தவன் மரகதத்தின் மனைவியைப் பார்த்துச் சொன்னான் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரிய ஐயா உன்னையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வரட்டாம்..."

"எதுக்கு?"

"உன் புருசனைப் பார்க்கத்தான்..."

அந்த நொடிப்பொழுதில் அவளுக்குப் போன உயிர் திரும்பியது போலவே தோன்றிற்று. இரவும் பகலுமாய் நான்கு நாட்கள் எப்படி எல்லாம் அவள் துடித்தாள்... இப்போது எங்கோ மரகதம் கைகால்களோடு நடமாடுவது போலவும் - உட்கார்ந்திருப்பது போலவும் - பேசுவது போலவும் சிரிப்பது போலவும்...

இந்தியப் படை முகாமை நோக்கிப் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டாள் அவள். நெஞ்சில் முழுமையான அமைதி இல்லை. வீட்டு முற்றத்தில் இவர்கள் சிரித்தார்களே - ஏன்? ஒரு வேளை அவர் உயிரோடு இருக்கிறாரா? இல்லையா? திரும்பவும் நம்பிக்கை உடைந்து நொறுங்கி பொல பொல என்று துண்டுகளாய்ச் சிதறி விழ ஒடுங்கி நடந்தாள் மரகதத்தின் மனைவி.

படைமுகாமில் நுழையும்போதே மரகதத்தின் அலறல் "ஐயோ அப்பா...!" என்று மரண ஓலமாய்க் கேட்டது.

"அப்பா!" என்று கதறிக்கொண்டே, உள்ளே மனைவியும் பிள்ளைகளும் ஓடினார்கள்.

ஒரு முரடன் அவர்களைத் தடுத்து நிறுத்தினான். அவர்கள் நிற்கவில்லை. திமிறிக்கொண்டு அந்தக் குடும்பம் ஆவேசமாக உள்ளே பாய்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில் அடி உதையால் சுருண்டு கிடந்த மரகதம் தலையை நிமிர்த்தி, மனைவியையும் பிள்ளைகளையும் பார்த்தார். அவர் கண்களில் நீர் காட்டாறாய்ப் பொங்கிற்று.

பெரிய 'ஐயா' நாற்காலியில் இரு கால்களையும் விரித்துப் போட்டபடி உட்கார்ந்திருக்க, முரட்டுத்தனமான கொடுமைகள் நிகழ்ந்துகொண்டிருந்த அந்த விலங்குகளின் முகாமில் மரகதத்தின் குடும்பம் துடியாய்த் துடித்தது.

"உன் புருசன் கடைசியாக உன்னைப் பார்க்க ஆசைப்படுகிறான். அதுதான் உன்னை வரச்சொன்னது..." என்று, பக்கத்தில் நின்ற தமிழ்த் தெரிந்த இந்தியப்படைக் காரன் மூலம் மரகதத்தின் மனைவியைப் பார்த்துச் சொன்னார் 'பெரிய ஐயா.'

"ஐயா அவரை ஒண்டும் செய்யாதீங்க... விட்டுடுங்க ஐயா" என்று கெஞ்சினாள் மரகதத்தின் மனைவி.

பிள்ளைகள் துடியாய்த் துடித்தார்கள்.

'பெரிய ஐயா' சிரித்தார். முரட்டுத்தனமான சிரிப்பு. கையில் இருந்த இயந்திரத்துப்பாக்கியைத் தன் தொடையில் அடித்துக் கொண்டே அவர் சொன்னார் -

"எங்க படை ஆட்களை விடுதலைப் புலிகள் கொல்லும் போது - நாங்களும் யாரையாவது கொன்றால்தான் எங்களுக்கும் சந்தோசம்..."

திரும்பவும் அதே அட்டகாசமான சிரிப்பு.

சில படை வெறியர்களோடு எதையோ குசு குசு என்று பேசிவிட்டு வெளியேறினார் 'பெரிய ஐயா.'

பின்பு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரகதத்தை இந்தியப்படை முரடர்கள் அருகில் இருந்த கடையை நோக்கி கழுத்தைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு போனார்கள்.

'சுவரில் சாய்ந்தபடியே நில்!' என்று ஒரு வெறியன் கத்துவது கேட்டது.

மரகதத்தின் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் எதுவுமே புரியவில்லை.

ஒரே ஒரு மணித்துளிதான்...

வெடிகுண்டு ஒன்றின் பேரோசையோடு கடைச்சுவர் உடைந்து உடல் மேல் விழப் பிணமாய் சாய்ந்தார் மரகதம்.

மனைவியும், பிள்ளைகளும் தூரத்தில் நின்றபடியே வெறி பிடித்துக் கத்தினார்கள்.

'ஜீப்' வண்டி ஒன்றும் 'ட்றக்'குகளும் வரிசையாக முகாமை விட்டு வெளியே புறப்பட்டுப் போயின.

அடுத்த 'சந்தோசத்'துக்காக அவர்கள் எங்கே போகிறார்களோ...

* * *

'உதயன்' நாளேட்டைக் கீழே போட்டுவிட்டுப் பெருமூச்சோடு நாற்காலியில் சாய்கிறேன்.

கண்களில் நீர் பனிக்க 'இது என்ன கொடுமை அப்பா...!' என்று என் மகள் கைகளைப் பற்றிக்கொண்டு தேம்புகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கேள் மகளே...'

மத்திய கிழக்கில் 'ஏரோது மன்னன்' காலத்தில் யேசுவைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். கிரேக்கநாட்டு ஆட்சியாளர்கள் சோக்கிரட்டீசுக்கு நஞ்சு கொடுத்துச் சாகடித்ததாக வரலாறு. பிரான்சில் பதினான்காம் லூயி மன்னன் ஆட்சியில், மக்களின் தலைகள் 'கிலட்டின்' என்ற கத்தியால் தறிக்கப்பட்டன. ரஸ்யாவில் லெனினின் அண்ணன் அலெக்ஸாண்டர் உல்யானோவ் 'சார்' ஆட்சியில் தூக்கில் போட்டுக் கொல்லப்பட்டான்.

இன்று -

இருபதாம் நூற்றாண்டு என்று மார்தட்டுகிறார்கள் அல்லவா? ராஜீவ் காந்தியின் படைகள், இன்னொரு நாட்டில் சுவரை இடித்து வீழ்த்தி, மரகதத்தைச் சாகடித்தார்களே - இது வரலாற்றில் ஒரு புதுவிதமான முரட்டுக்கொலை.

மரகதம் பெரிய ஆள் அல்ல. ஆனால் அவர் கொலை பெரியது.

இப்படியான செந்நீர் வடுக்கள் வரலாற்றில் அழிவதில்லை மகளே...!

தமிழீழம்

மே - 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் மடியில்

உடைந்த சயனைட் குப்பியினொரு சிறு பகுதி கயிற்றுடன் கழுத்தில் தொங்க... வாயெல்லாம்... நீலம் பாரித்து மீளாத் துயிலில்...

"ஐயோ...! ஓ...! என்ரை ரா...சா..."

மார்பிலடித்துக் குளறும் அந்த அபலைத் தாயின் ஓலம்... அந்த ஆக்கிரமிப்பாளரைத் தாண்டி மெல்ல... மெல்ல... அந்த ஊரை நிறைக்கலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவின் இருமருங்கிலுமிருந்த அடர்காட்டின் பலமான மரக் கொப்புகளைக் காற்று கிழித்துச் செல்லும் போது ஏற்படும் பேரோசையைத் தவிர, வேறு எந்தச் சத்தமும் இல்லை. அநேகமாக அந்தத் தெரு செத்துக் கிடந்தது.

வீதிக்கும் பற்றைக்கும் மாறி மாறி விரைந்து, மிதிவெடி வைக்கும் வேலையைத் துரித கதியில் முடித்து விட்டு, அடர்ந்த பற்றையைப் பிரித்துக்கொண்டு வந்த ரமேஸ் தெருவில் காத்திருந்த ஈசனை அண்மிக்கின்றான். முகத்தில் பூத்த வியர்வை கன்னத்தில் வெள்ளமாய் வழிகின்றது.

மிதிவெடிகள் - ஆக்கிரமிப்பாளர்களின் அடிமனதைக் கலக்கிடும் விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் ஓர் ஆயுதம்.

"ஏதும் சிலமன் தெரியுதோ மச்சான்? போவமே?"

"ஒண்டையும் காணேல்ல... போவம்!"

நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான் ரமேஸ். நிலவு இன்னும் மறையவில்லை. போக மாட்டேனென அடம்பிடித்து, முகிற்கூட்டம் ஒன்றின் கையைக் கெட்டியாகப் பற்றியிருந்தது; பள்ளிக்குச் செல்ல மறுக்கும் ஒரு சிறுமி போல.

சற்றுத் தள்ளியிருந்த குளம் ஒன்றிலிருந்து, ஐம்பதிற்கும் மேற்பட்ட நீர்க் கொக்குகள் இதுவரையில் நிலவிய அமைதியைக் குலைத்துக் கொண்டு பறந்தன. அவற்றின் இறக்கைகள் அடிக்கும் சத்தம் 'பட பட' என்று சீராக வானிற் கேட்டது. அதைத் தொடர்ந்து எழுந்த பறவைகளின் கதம்பமான ஒலியும் விடியலுக்குக் கட்டியங்கூறின.

வட்டக்கச்சிக் கிராமம் மெதுவாக விடியத் தொடங்கியது.

சைக்கிளின் முன்பக்கத்தில் தொற்றிக்கொண்டே ரமேசை உற்றுப் பார்க்கிறான் ஈசன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது 17 தான் என்று நம்ப மறுக்கவைக்கும் உடல்வாகு. கடின வேலைகளால் காய்த்துப்போன கரங்கள். சீராக வாரப்படாத தலை. முகத்தில் தன்னம்பிக்கை. விடுதலைப் புலிகளுக்கேயுரிய, எதையுமே தீர்க்கமாக அலசும் கூர்மையான பார்வை. சேட் கொலரினூடு மறைந்தும் மறையாமலும் தெரியும் சயனைட் குப்பி.

"எப்படி இருக்கும் அந்த இந்தியக் கூலிகளுக்கு? தங்கட முகாமுக்குப் பக்கத்திலேயே இப்பிடி மிதிவெடி வெடிக்குமென்று எதிர்பாராமல், வெளிக்கிட்ட உடனேயே வெடிச்சுச் சிதறப்போகினம். எங்கட நாட்டில வந்து, எங்கட மக்களைக் கொல்லுறவையின்ர உடம்புகூட மிஞ்சக்கூடாது. இதில எங்கட உயிர் போனாலும் பரவாயில்லை."

கழுத்தில் இருந்த சயனைட்டை ஒரு தடவை தொட்டு ஊர்ஜிதம் செய்து கொள்கின்றன ரமேசின் கரங்கள்.

சயனைட் - விடுதலைப் புலிகளின் உன்னதமான ஆயுதம். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உயிர் கொடுத்து, உத்வேகம் ஊட்டிக் கொண்டிருக்கும் வீர மறவர்களின் ஆன்மா அது!

"ம்... ம்... ஆ" பசுவொன்றின் கதறல் ரமேஸின் எண்ண ஓட்டங்களிற்குக் கடிவாளமிடுகின்றது. பட்டியில் அடைக்கப்பட்டிருந்த மாடுகள் இவர்களைக் கண்டதும் உற்சாகமாகக் குரல் கொடுக்கின்றன.

"என்ரை பிறந்த இடம்... நான்... வளர்ந்த இடம்"

மாடுகள் அவனை அடையாளம் கண்டு துள்ளிக் குதித்தன. பசுவொன்றின் கால்களுக்கிடையில் சின்னஞ்சிறியதோர் கன்று. அதை வாஞ்சையுடன் தடவிக்கொடுக்கும் தாய்ப்பசு.

பழைய ஞாபகங்கள்... கூடவே அம்மாவின் ஞாபகம். மெலிந்து கூடாகிவிட்ட உடல் - இடுங்கிய கண்கள் - பெயர் சொல்லிக் கூப்பிடாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ராசா" என்று எப்பவும்போல இப்பவும் அம்மா கூப்பிடுவது போன்ற தொரு பிரமை.

"ஈசன்! கனகாலமாக நான் வீட்டுப்பக்கம் போகேல்ல. ஒரு ஐஞ்சு நிமிசம் கதைச்சுப்போட்டு வாறன். இதில்... கவனமாகப் பார்த்துக் கொண்டு நில்லுங்கோ அவங்கள் வந்திடுவாங்கள். கூப்பிடு தொலைவில் இந்தியன்ர காம்ப் "

ஈசன் அயலவன், இயக்கத்தின் ஆதரவாளனாகவும் இருப்பவன். நம்பிக்கையுடன் அவனைக் காவலுக்கு நிறுத்திவிட்டு, கண்டாயத்தைத் திறந்து உள்ளே போகின்றான் ரமேஸ்.

"என்ர ராசா" பாய்ந்து வந்து அணைத்துக் கொள்கின்றாள்:

"அம்மா!"

"இப்பவெண்டாலும் ஞாபகம் வந்ததோ?... ஒவ்வொரு நாளும் நெஞ்சில தண்ணியில்லாமல்... நான்..."

வாயில் சேலைத் தலைப்பை வைத்து விம்மியவள் "உள்ளுக்கு வாராசா!... ஆரேனும் கண்டினமெண்டாலும்... தனியவே வந்தனி?" ஏமலிப்புடன் வினவுகிறாள்.

"இல்லையம்மா: ஈசன் வந்தவன். கொஞ்சம் தள்ளி நிக்கிறான். அது சரி தங்கச்சி எங்கே?"

ஆவலோடு விசாரிக்கின்றான் ரமேஸ்.

மற்றை எல்லோரையும்விட ஒரு போராளிதான் பாசம், மனிதாபிமானம், நீதி என்பவற்றைப் பெரிதும் மதிக்கிறான். அதனால் தான் எமது மக்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து, உயிரையே பணயம் வைத்துப் போராடி, அம்மக்களின் சுதந்திரத்திற்காகப் பாடுபடுகின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்ப்பசுவை ஒருநாள் பிரிந்திருக்கக்கூட கன்று மறுக்கும்.

ஆனால், ஒவ்வொரு விடுதலைப் புலியும் மக்களின் விடுதலைக்காக தாய், தந்தை, சகோதரங்களை எத்தனை எத்தனை காலம்...

"நீ, வெளியில ஈசன் காவலுக்கு நிக்கிதெண்டாய். ஆனால் அவன் பெடியனைக் காணேல்லத் தம்பி."

மூக்குப் பேணியுடன் தேநீர் கொடுக்கச் சென்ற அம்மா திரும்பி வந்தாள்.

"காணேல்லையோ?"

சற்று யோசித்தவன்... "அங்கால மறைவில் நிப்பானம்மா."

அதே நேரத்தில், அருகிலிருந்த இந்திய இராணுவ முகாமில்...

"கிழக்கால இருக்கிற ஒழுங்கேல அந்த ஓலை வீடு தான் சேர்... அங்கே அவன் தனியாத்தான்..."

ஈசன் சொல்லிக் கொண்டிருக்க, ஆக்கிரமிப்பாளர்கள் துரித கதியில் செயற்படுகின்றனர்.

"சாப்பிட்டுட்டுப் போவன் ராசா... எத்தனை நாள் என்னுடைய கையால நீ சாப்பிட்டு... கண்களில் நீர் ததும்பக் கேட்கிறாள் அம்மா."

"இல்லையம்மா, நான் வேற இடம் போக வேணும் பிறகு ஒரு நாளைக்கு வாறேன்."

துள்ளியெழும்பிய ரமேஸ் திகைத்துப் போகிறான். கனமான சப்பாத்துக்களின் கீழ் சருகுகள் நொருங்கும் சப்தம். அந்த ஒலி வீட்டு வாசலை நோக்கி விரைந்து வருகிறது. திரும்பி, செத்தைக்கூடாகப் பார்க்கிறான். கண்ணுக்கெட்டிய இடமெல்லாம் தலைக் கவசங்கள். அவனையே குறி வைக்கும் துப்பாக்கிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் பொடியனைக் காணேல்லத் தம்பி?" அம்மா சொன்னதன் அர்த்தம் இப்போது விளங்குகின்றது.

'எம்மினத்துக்குள்ளேயே இருந்து' எம்மினத்தவரையே கொல்லத் துணைபோகும் துரோகிகள்... அவர்களில் ஒரு உளவாளி இவன்.

தப்ப இடமுமில்லை... நேரமுமில்லை.

போராடுகிற எவருக்கும் கிடைக்காத பேறு எனக்குத்தான் கிடைக்கப் போகுது... தீர்மானிக்கின்றான்.

"அம்மா உங்கட மடியில படுக்கப் போறன்."

பிரமை அடைந்த நிலையில் ரமேசின் தாய்... மடியில் மகன். கண்ணாடி நொருங்கும் சத்தம் கேட்கவும், இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் வாசலுக்கு வரவும் சரியாக இருந்தது.

உடைந்த சயனைட் குப்பியின் ஒரு சிறுபகுதி கயிற்றுடன் கழுத்தில் தொங்க... வாயெல்லாம்... நீலம் பாரித்து மீளாத்துயிலில்...

போர்க்களத்திற்கு மகனை உச்சி முகர்ந்து அனுப்பிவைத்த புறநானூற்று வரலாறு அன்று -

வீர மகனின் உடலைத் தனது மடியில் தாங்கிக் கொண்ட வீரத்தாயின் சோக வரலாறு இன்று!

"ஐயோ...! ஓ...! என்ரை ரா... சா..."

மார்பிலடித்துக் குளறும் அந்த அபலைத் தாயின் ஓலம்... அந்த ஆக்கிரமிப்பாளர்களைத் தாண்டி மெல்ல... மெல்ல... அந்த ஊரை நிறைக்கலாயிற்று.

- உணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடை

"தமிழனுகளை இந்தியப் படை கொல்லுகிற நேரத்தில 'சீட்டு' ஆடுறியே... நீயும் ஒரு தமிழனோடா? விடுதலைப் புலிகள் வீரமாய்ப் போராடுகினமாம்... இந்தியப் படையின்ர 'டாங்கிகள்' எல்லாம் நொறுங்கிப் போட்டுதாம்... அவனுகள் அல்லோ தமிழன்கள்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ட்றக்' வண்டிகள் பின்னால்வர 'இந்தியப்படை' ஆட்கள் துப்பாக்கிக ளோடு உலாவுகிறார்கள்.

எங்கும் பதற்றம்.

கொல்லப்பட்டவர்கள் பற்றிய சேதிகள் பரவிக்கொண்டிருக்கின்றன.

வேட்டுக்கள்... பிணக்குவியல்... குருதி... ஓடை....

யாழ்ப்பாணத்தில் - வளலாய்க் கிராமத்தில் இளைஞன் ஒருவன் நூல் நிலையத்தில் நண்பர்களோடு 'சீட்டு' ஆடிக்கொண்டிருக்கிறான்.

பொழுது போகவில்லை.

சிங்களப் படைகளை மோதிய காலத்தில் களத்தில் நின்றவன் அவன்.

'விடுதலைப் புலி' யாய் அவன் நடத்திய வீரப்போர்கள் பல.

இயக்கத்தின் உறுதியான கட்டுப்பாட்டை என்றைக்கும் அந்த இளைஞன் மீறியதில்லை.

ஆனால்...

சிறீலங்கா - இந்திய உடன்படிக்கை வந்தபோது - எல்லாமே ஓய்ந்துவிட்டது போல ஆன நேரத்தில் - தலைவர்களின் ஒப்புதல் பெற்றுக்கொண்டு அவன் ஒதுங்கி விட்டான்.

வீட்டில் சாப்பாடு - பெற்றவர்களோடு வாழ்க்கை - நண்பர்களின் உறவு.

தொலைவில் துப்பாக்கி வேட்டோசை முழங்கி ஓய்கிறது.

எங்கோ யாரோ கதறி அழும் ஓலங்கள்...

வெறி பிடித்த இந்தியப் படை கருக்கிய தமிழர் பிணங்களின் சாம்பற் பொடிகள், விண்ணில் எழுகின்றன.

இளைஞனோ 'சீட்டு' ஆடிக்கொண்டிருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் எதிர்பார்க்கவில்லை...

யாரோ 'பளீர்' என்று கன்னத்தில் ஓங்கி அறைந்த போது மூளை குழம்பிற்று.

நூல்நிலையத்துக்குள் இந்தியப்படை நுழைந்து...? அதிர்ச்சியோடு தலையை நிமிர்த்துகிறான்... அவன் தந்தை தான் எதிரில் நிற்கிறார்.

கண்களில் நெருப்பு.

"தமிழனுகளை இந்தியப்படை கொல்லுற நேரத்தில 'சீட்டு' ஆடுறியே... நீயும் ஒரு தமிழனோடா? விடுதலைப் புலிகள் வீரமாய்ப் போராடு கினமாம்... இந்தியப்படையின்ர 'டாங்கிகள்' எல்லாம் நொறுங்கிப் போட்டுதாம். அவனுகள் அல்லோ தமிழன்கள்.

திரும்பவும் அடி விழ இளைஞன் திணறிப் போகிறான்.

"போய் பழையபடி பிரபாகரனுட்ட துப்பாக்கிய வாங்கிட்டுக் களத்தில நில்லு. வீட்டுக்கு வந்திடாத... உனக்கு இனி வீட்டில சோறு கிடையாது... விளங்குதே?"

'விர்' என்று அவர் வெளியேறுகிறார்.

வளலாய் நூல்நிலையம் பின்பு அந்த இளைஞனைச் சந்திக்கவில்லை.

களத்தில் நிற்கிறானாம்.

பனைமரத் தோப்பில் அவனைத் துப்பாக்கியோடு பார்த்ததாகச் சேதி.

தமிழீழம்

ஜூலை - 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலம்

''தம்பி... வட்டுக்கோட்டைச் சந்தியில இந்திய 'ஆமி'க்காரன்கள் படுத்துக் கிடக்கிறானுகள் மோனே... உந்தப் பக்கம் போகாதே அப்பு...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுக்கோட்டைச் சந்திக்குச் செல்லும் பாதை. ஒரு விடுதலைப் புலி விரைவாகப் போய்க் கொண்டிருக்கிறான்.

சட்டைப் பையில் 'சயனைட்' குப்பி பத்திரமாக இருக்கிறது.

ஒவ்வொரு மணித்துளியும் சாவிற்குப் பக்கத்தில். இறுமாப்போடு நிமிர்ந்து நிற்கும் அந்த வீரன், போர்க்களத்தில் ஏதோ ஒரு கடமைக்காக விரைகிறான்.

எதிர்ப்புறமாக வந்த கிழவி ஒருத்தி பதற்றத்தோடு கையை நீட்டி, அவனைத் தடுத்து நிறுத்துகிறாள்.

நிமிர்ந்து பார்க்கிறான்.

"தம்பி... வட்டுக்கோட்டைச் சந்தியில இந்திய 'ஆமி'க்காறன்கள் படுத்துக் கிடக்கிறானுகள் மோனே... உந்தப் பக்கம் போகாதே அப்பு..."

தளதளத்த குரல்.

கிழவி சொன்னது அவனுக்குப் புரியவில்லை.

தொடர்ந்து அதே திசையில் விரைவாக நடக்கிறான்...

இரண்டு அடிகள் வைக்கவில்லை. கிழவி தலையில் அடித்து 'ஓ'! என்று கதறும் ஓலம் அவன் கால்களை இழுத்து நிறுத்துகிறது.

ஏன் கிழவி அழுகிறாள்?

திரும்பி வருகிறான்.

"ஏனணை அழுறே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவி அழுதுகொண்டே ஒவ்வொரு சொல்லாக அவனுக்கு விளங்கச் சொல்லுகிறாள்.

"வட்டுக்கோட்டைச் சந்தியிலை..."

இப்போது அவனுக்குப் புரிகிறது.

"நீயெல்லாம் உயிரோட இருந்தாத்தான் மோனே உவனுகளோட போராடலாம்..."

கிழவி தொடர்ந்து அழுகிறாள்.

மேனி சிலிர்க்கிறது.

கண்களில் நீர் பனிக்க-கிழவியை கைகளால் அணைத்துக்கொண்டே அவன் எதிர்த்திசையில் திரும்புகிறான்.

நண்பர்களோடு பேசும் போது இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு இன்றும் அந்த விடுதலைப்புலி சொல்லிக் கொள்கிறானாம்.

"இது தான் எங்கள் பலம்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவு

இத்தனை காலமும் சாவுக்குத் தப்பிய அந்த நல்லவர் இந்திய வெறிப்படையின் 'செல்' அடித்து இரத்த வெள்ளத்தில் கிடக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடியாய்த் துடிக்கிறார்.

இந்திய அமைதிப் படையின் 'செல்' தாக்குதலால் உடம்பெல்லாம் கிழிந்து போய் ஒரு கிழட்டு உயிர் சாவோடு போராடுகிறது.

உரும்பிராயில் எல்லோருடனும் 'நல்ல மனிதராய்' வாழ்ந்து விட்ட ஒருவர்.

செல்வா காலம்-சிவகுமாரன் காலம்-பிரபாகரன் காலம் மூன்றையும் தன் நீண்ட நெடிய வாழ்வில் நேரில் கண்டு, வீறு மிக்க விடுதலைப் போரில் தன்னையும் எங்கோ சேர்த்துக் கொண்ட பெருமை.

நல்ல விடுதலை உணர்வாளர்.

அதிகம் பேசாத வாய்.

இத்தனை காலமும் சாவுக்குத் தப்பிய அந்த நல்லவர், இந்திய வெறிப் படையின் 'செல்' அடித்து இரத்த வெள்ளத்தில் கிடக்கிறார்.

கண்களில் நீர் பொங்கப் பக்கத்து வீடுகளின் சிறுவர்கள் - இளம் பெண்கள் - பெரியவர்கள் - தாய்மார்கள் - இளைஞர்கள் எல்லோரும் வளைத்து நிற்கிறார்கள்.

உற்றுப் பார்க்கிறார்.

பேசத் தோன்றுகிறது.

"கடைசியாகச் சொல்லுறன்... ஒருவரையும் நம்பாதீங்கோ. சிங்களவன் ஏசிக்கொண்டு எங்களை அழிச்சான். இந்தியா பாராட்டிக்கொண்டு அழிக்குது. தமிழர்களைத் தமிழர்கள் தான் காப்பாத்த வேணும்... விடுதலைப் புலிகளுக்குப் பின்னால் நில்லுங்கோ..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் அழுகிறார்கள்.

உரும்பிராயில் ஒரு நல்ல உயிர் அடங்கிற்று.

அடுத்த நாள் –

இளைஞன் ஒருவன் சாவீட்டில், பக்கத்தில் நின்றவர்களைப் பார்த்துச் சொன்னான்.

''பெரியவர் எங்களை உசுப்பி விட்டுப் போகிறார்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறத்தின் இன்னொரு உயிர் நீப்பாய்

''யாரது?'' என்று கத்தினாள் அக்கா

''நாங்கள் தான் ஈ.பி.ஆர்.எல்.எப்'' என்று பதில் வந்தது.

கதவை அவர்கள் ஓங்கி உதைத்தார்கள்.

வெறித்தனமாக ஒருவன் அக்காவை வெளியே இழுத்தெறிந்தான்.

சாராய நெடி வீசிற்று.

'கொற கொற' என்று அவளைத் தெருவால் இழுத்துப் போனார்கள்.

சனசமூக நிலையத்திற்குப் பக்கத்தில் - தெருச்சந்தியில் கொணர்ந்து நிறுத்தப்பட்டபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைமுள் குத்தியது. குனிந்து காலைப் பார்த்தாள் லெட்சுமி அக்கா-சுவரில் அடித்த ஆணி போல் முள் ஆழப்பதிந்திருந்தது. வலி கடுமைதான்... ஆனால்-அக்காவுக்கு இதுதான் முதல் முள்ளா? பிடுங்கி எறிந்து விட்டு நடையின் விரைவைக் கூட்டினாள்.

துவரை-கிளா-காரை இடையே அந்த பற்றை காட்டின் நடுவில் இத்தி-வேம்பு-ஆல் இப்படி ஓரிரு நெடு மரங்கள். பசிய புற்கள் நிரம்பி வழிந்த கரடு முரடான வரம்புகளில் ஏறியும் இறங்கியும் அக்கா நடந்தாள்.

இந்தியப்படை வந்த நாள் தொடக்கம் நீண்ட இந்த வழியால் பயணம் போக முடிவதில்லை. வெறிபிடித்த மனிதப் பாம்புகள் படுத்துக்கிடக்கும். ஏழை உழவர்களின் முதுகெலும்பு முறிக்கப்படும். இளைஞர்களாய் இருந்தால் சிலவேளை பிணங்களாகக் கூட...

லெட்சுமி அக்கா வைரமானவள். இலட்சியம் தான் அவளுக்கு உயிர். அதற்காக-காட்டில் என்ன... நெருப்பில் கூட நடக்கலாம்.

ஒரு நொடிப்பொழுது அக்கா அசையாது நின்றாள். எதிரில்-திடீரென புதரின் பின்னால் பள்ளத்தில் இருந்து துப்பாக்கிகளோடு அவர்கள் பாய்ந்தார்கள்.

"எங்கே போகிறாய்?"

படைவெறியர்கள் முரட்டுத்தனமாக அவளைப்பார்த்தார்கள். முகத்தில் எல்லாம் புளுதி பட அழுக்குச்சேலையோடும் வியர்வையோடும் தன் அழகை குறைத்து அசிங்கப் படுத்தியிருந்தாள் அக்கா. அவளுக்கு இது தேவைப்பட்டது.

"வெட்டைவெளியில வாடியில இருக்கிற நான்... ஊருக்க போய்ச் சாமான் வாங்கித்து வாறேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன சாமான்?"

அக்கா கையிலிருந்த துணிப்பையைக் காட்டினாள். கருவாடு... மண்ணெண்ணெய்ப்பேணி... வெற்றிலை... பாக்கு...

"சரி போ."

அடர்ந்த காட்டை நோக்கி நடந்தாள் அக்கா.

தொப்பி போட்ட கூர்க்காப்படை கண்களைவிட்டு கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டிருந்தது.

அவர்கள் நின்ற திசையை நோக்கி லெட்சுமி அக்கா குலுங்கிச் சிரித்தாள்.

அக்காவின் சேலைத் தலைப்பில், காட்டில் உள்ள புலிகள் முகாம் தளபதி ஒருவருக்கு இன்னொரு புலிகள் முகாமில் இருந்து எழுதப்பட்ட கடிதம் இருந்தது.

* * *

கிரானுக்கும் வாழைச்சேனைக்கும் நடுவில் - பின்புறமாக வயல் வெளியைப் பார்த்தாற்போல் கிண்ணையடி; லெட்சுமி அக்கா பிறந்த - வாழ்ந்த கிராமம்.

அழகான வயல், பின்னால் உப்பு ஏரி, கழனி நண்டும், ஏரி நண்டும் கதை அளக்கும், ஆள்காட்டிக்குருவியின் கத்தலுக்குக் குறைச்சல் இல்லை. எருமையின் முதுகில் குந்தி வெள்ளைக் கொக்கு ஓய்வெடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்ணையடியில் லெட்சுமி அக்காவைத் தெரியாதவர்கள் இல்லை. முப்பத்தைந்து வயதுதான் இருக்கும். மக்களோடு அன்பாகப்பழகும் பண்பு. சுறுசுறுப்பாக இருப்பாள். கணவன் தாளாலையில் பணியாற்றிக் கொண்டி ருந்தான். ஆறு பிள்ளைகளோடும் கணவனோடும் அவள்.

மூத்த மகள் அழகம்மாவில் லெட்சுமி அக்காவுக்கு உயிர். சின்னக் குழந்தையாக அழகம்மா இருந்த காலம் தொடக்கம் அளவற்ற அன்பை அவள்மேல் அள்ளிப் பொழிந்தாள்அக்கா. அக்காவின் மடியில் முதலில் உட்கார்ந்த குழந்தை அழகம்மா.

அழகம்மாவுக்குக் குழந்தைப் பருவத்தில் - சிற்றாண்டித் திருவிழாவில் காப்பு வாங்கிப் போட்டது... கதறி அழ அழ ஒருநாள் அவளை இழுத்துச் சென்று பள்ளியில் சேர்த்தது முதல் அழகம்மாவின் திருமணம்வரை அக்காவின் நெஞ்சில் ஆழப்பதிந்த நினைவுகள்.

திருமணம் முடிந்து அழகம்மாவும் கணவனும் வாழ்ந்த மகிழ்ச்சிமிக்க நாட்கள் - அவர்கள் இருவரும் சிரிப்பது - பேசுவது. ஓ! அந்த நாட்களை அக்கா எப்படி மறப்பாள்?

அவள் பெற்ற பெண்ணுக்கு முழுத்துணையாய் அவன்...

ஆனால் -

சிங்கள சிறீலங்காவின் அதிரடிப்படையினர் வெறியாட்டம் போட்ட காலம், எத்தனை இனிய கனவுகளைச் சிதறடித்து விட்டது!

இடி திடீரென்று அக்காவின் தலையில் இறங்கியது.

ஒருகாலையில் யாரோ அந்தச் சேதியை அவளிடம் கூறியபோது அவள் உடைந்து நொறுங்கிப்போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்ட மருமகண்ட சவம் வெட்டைக்குள்ள எரிஞ்சு கிடக்குது புள்ள... நம்மட ஊர் ஆக்கள் பாத்திருக்கத்தான் அவனைச் சுட்டவனுகளாம். எட்டுப்பேரை கொலை செஞ்சி போட்டிரிகானுகள் - பாதகனுகள்"

உப்பேரியின் அடுத்த கரையில் - மருமகனின் பிணம் எரிந்து கிடந்தது.

அக்கா துடித்தாள்.

அழகம்மாவையே யாரோ சுட்டு நெருப்பில் போட்டு எரித்த மாதிரி அக்காவுக்குத் தோன்றிற்று. அவளுடைய செல்ல மகள் இத்தனை விரைவில் தனிமரம் ஆகிவிட்டாளே...

அக்கா கல்லாய் இறுகினாள்.

* * *

புலிகளை அவளுக்குப் பிடித்துவிட்டது.

'துப்பாக்கிகளுக்குத் துப்பாக்கிகள் தான் பதில்' என்பதை லெட்சுமி அக்கா இப்போது புரிந்துகொண்டாள்.

ஒவ்வொரு நாளும் சிறீலங்காப்படையின் படுகொலைகள் பற்றிய சேதிவரும்.

வாகரைக் கடலில் கரைக்குத் திரும்பிய தோணிகளில் இருந்த மீன்பிடித் தொழிலாளர்களை, கடலில் வைத்தே கொக்குகளைச் சுடுவதுபோல் சுட்டுத் தண்ணீரில் போட்டார்களாம்... நற்பிட்டிமுனை இளைஞர்களைக் கைது செய்து தம்பட்டை மணல்வெளியில் நிறுத்தி - அவர்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே மடு தோண்டச் செய்து - மடுவின் உள்ளே நிற்கச் சொல்லி, துப்பாக்கியால் சுட்டுப்புதைத்தார்களாம்.

லெட்சுமி அக்காவுக்குத் தலை வெடிக்கும்.

விடுதலைப் புலிகளை அக்கா எண்ணிப்பார்த்தாள். அவர்களுடைய துப்பாக்கிகளும் கண்ணி வெடிகளும் இல்லையென்றால், தமிழீழத்தை இதுவரை சிங்கள இனவெறி தின்று தீர்த்திருக்கும்.

"புலிகளுட்ட ஆயுதம் இருக்கிறவரைக்கும் நம்மள ஆரும் அசைக்க ஏலாது" என்பாள் அக்கா.

அந்த நாட்களில்தான்...

உப்புச் சப்பற்ற இந்திய - சிறீலங்கா உடன்படிக்கை உருவாயிற்று.

'ஆயுதங்களைப் புலிகள் இந்தியப் படையிடம் ஒப்படைக்கிறார்கள்' என்ற சேதி பரவிய போது அக்கா சோர்வுற்றாள். அவளால் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. புலிகளின் துப்பாக்கிகளை இந்தியப் படையிடம் ஒப்படைத்துவிட்டால் - பின்பு தமிழீழ மக்களுக்கு என்ன பாதுகாப்பு?'

லெட்சுமி அக்காவின் நெஞ்சம் குழம்பும்.

"பிரபாகரனை நம்புங்கள் - தமிழீழ மக்களுக்கு உண்மையான பாதுகாப்புக் கிடைக்கும் வரை, புலிகளின் ஆயுதங்களை அவர் ஒப்படைக்க மாட்டார்" என்று யாரோ சொன்னார்கள்.

ஆனால் -

புலிகள் ஒவ்வொரு நாளும் ஆயுதங்களை ஒப்படைத்துக்கொண்டு இருக்கிறார்கள், என்றே சேதிகள் வெளியாகிக்கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987 ஒக்ரோபரில், புலிகள் இந்தியப்படையைத் துணிச்சலாக மோதிய போது அக்கா பூரித்துப்போனாள். "ஆயுதங்களைப் பிரபாகரன் ஒப்படைக்க வில்லை - பார்த்தீர்களா?" என்று யாரைக்கண்டாலும் சிரித்துக் காண்டே சொன்னாள் அக்கா.

அக்கா ஆயுதங்களையே நம்பினாள்.

லெட்சுமி அக்காவின் ஒரு மகன் ஏற்கனவே தலைமறைவு வாழ்வை மேற்கொண்டிருந்தான்.

வீட்டில் படைவெறியர்கள் அடிக்கடி பாயும் நிலை இருந்தது.

தேடுதல்கள்.

மிரட்டல்கள்.

சண்டித்தனங்கள்.

நெருப்பில் குளித்துப் பழகினாள் அக்கா.

அவள் விடுதலைப்புலி அல்ல - ஆனால் விடுதலைப் புலிகளின் நாளமாய் - நரம்பாய் - குருதியாய் இருக்கவே விரும்பினாள்.

விடுதலைப்புலிகளின் முகாம்களுக்கு சேதிகளை எடுத்துச்செல்வது - தேவையான நிதியை சேகரித்துக்கொடுப்பது - எதிரிகளின் படை நகர்வுகள் பற்றி புலிகளுக்கு தெரிவிப்பது - லெட்சுமி அக்காவுக்கு இவையெல்லாம் ஒரு கடமையாகவே பட்டது.

ஆனால் -

விடுதலைப்புலிகளோ அக்காவின் பணியைப் போராட்டத்துக்கான ஒரு பெரும் பங்களிப்பாகவே கருதினார்கள். அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொள்வார்கள் - "அக்கா நீங்க 'சயனைட்' கட்டாத புலி."

லெட்சுமி அக்கா விடுதலை போரில் முழு நம்பிக்கை கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியப்படை வந்தாலென்ன - யார் வந்தாலென்ன - தமிழீழத்தின் நிலையான அமைதிக்காக இந்த மண் போராடும்.

வீட்டு முற்றத்தில் அழகம்மாவின் கையிலிருந்த குழந்தையை பார்த்து ஒரு நாள் அக்கா சொன்னாள் -

"உன்ர அப்பனை நேத்து சிங்கள வெறியனுகள் கொலை செஞ்சி எரிச்சானுகள்... ஆனா... அவண்ட நிலைமை உனக்கு வர நாளைக்கு புலிமாமாமார் விடமாட்டானுகள்."

* * *

ஊர் அமைதியாக இருந்தது

லெட்சுமி அக்கா ஊர்க்கிழவரைத் தெருவிலே பார்த்தாள்.

கிண்ணையடியில் எல்லோருக்கும் தெரிந்தவர் கிழவர். கோயிலடியில் வைத்து லெட்சுமி அக்காவின் கையை பிடித்துக்கொண்டு கண்கலங்கியவர், அவளோடு எதையுமே பேச முடியாமல் குழம்பினார்.

"என்ன அப்பாச்சி?" என்று கேட்டாள் லெட்சுமி அக்கா.

"ஒண்டுமில்ல மகளே... உன்னைக் கொல்ல வேணும் எண்டு, நீ இரிக்கிற இடமெல்லாம் மோப்பம் பிடிச்சித் திரியுறானுகளாம்..."

"ஆரு?"

"இந்தியப் படையோட திரியுறவனுகள் தான்... களிசறைகள்...கவனமா இரி மகளே... ஆருட்டயும் இதை நான் சொன்ன எண்டு சொல்லிப் போடாத... பெரிய மனிசன் - கிழவன் எண்டு பார்க்கிற காலமா இது?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவர் போய்விட்டார்.

லெட்சுமி அக்கா அமைதியாகச் சிரித்தாள். இப்படி எத்தனையோ தகவல்கள் அவளுக்குக் கிடைத்திருக்கின்றன. ஆனால் அவள் வாழ்வில் இவையெல்லாம் தவிர்க்க முடியாதவையே...

பாம்புகளின்மேல் நடப்பதுதான் அக்காவின் பணி. அவள் நடப்பாள்... தமிழீழ மண்ணின் விடுதலைக்கு இந்த நடை ஒரு கட்டாயத் தேவை யாகவே அவளுக்குப்பட்டது.

விடுதலைப்புலிகள் இரு நாட்டு அரசுகளின் படைகளுடன் மோதுகிறார்கள். எத்தனை வீரம்... அவர்களுக்கு உதவுவதை விட வேறென்ன பெரிய வேலை கிடக்கிறது?

* * *

2.1.89 இரவு 9 மணி

லெட்சுமி அக்கா, அவள் வீடு இருந்த அதே வீதியில் - கண்ணம்மா வீட்டுக்குப் படுக்கப்போனாள். இடம் மாறி இரவில் தூங்கப் போவது, கொஞ்ச நாளாக அவள் தனக்குத் தானே வகுத்துக் கொண்ட பாதுகாப்பு ஏற்பாடு.

வீட்டு முற்றத்தில் சில மணித்துளிகள் மனம் விட்டு அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கும்புறுமூலை இந்தியப்படை முகாமில் துப்பாக்கிச் சூட்டு ஓசை அடிக்கடி கேட்டது.

"ஆரைச் சுடுகிறானுகளோ - சண்டாளனுகள்" என்று குமுறினாள் அக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலியில் எங்கோ இந்தியப்படையின் வெறித்தனமான படுகொலை ஒன்றைப் பெரிய வீரதீரச் செயல் ஆக்கி யாரோ செய்தி வாசித்துக் கொண்டிருந்தான்.

அக்கா சொன்னாள் -

"புலிகளையாவது இவனுகள் அழிக்கிறதாவது... நாளைக்குத் தமிழீழத்தை விட்டு ஓடக்குள்ள எல்லாம் தெரியும்."

கதவைப் பூட்டி அக்கா படுக்கைக்குப் போனாள்... விரைவில் விடிந்து விட வேண்டும் போல இருந்தது.

புலிகளின் காட்டு முகாமுக்குத் தெரிவிக்க வேண்டிய ஒரு முக்கியமான சேதியைப்புலிகள் அவளிடம் கொடுத்திருந்தார்கள். எப்போது விடியும்?

வேப்பமரத்தில் 'பக்கிளின்' முக்கல் ஒசை விட்டு விட்டுக் கேட்டது.

இரவு 11 மணி.

படலையில் யாரோ கூப்பிடுவது கேட்டு, அரைத்தூக்கத்தில் இருந்த அக்கா திடீரென விழித்தாள்.

"லெட்சுமி அக்கா நாங்கதான் புலிகள்..."

அக்காவிற்கு நம்பிக்கையில்லை.

தூக்கத்திலிருந்த மற்றவர்களும் எழுந்து அச்சத்தோடு பதறத் தொடங்கினார்கள்.

கொஞ்ச நேரத்தில் -

படலை திறந்து உள்ளே பாய்ந்த வெறியர்கள் கதவை ஓங்கித் தட்டிய போது, சாவு பக்கத்தில் இருப்பது அக்காவுக்கு வெளிச்சமாயிற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரது?" என்று கத்தினாள் அக்கா.

நாங்க தான் ஈ.பி.ஆர்.எல்.எப்." என்று பதில் வந்தது.

கதவை அவர்கள் ஓங்கி உதைத்தார்கள்.

வெறித்தனமாக ஒருவன் அக்காவை வெளியே இழுத்தெறிந்தான்.

சாராய நெடி வீசிற்று.

'கொற கொற' என்று அவளைத் தெருவால் இழுத்துப் போனார்கள்.

சனசமூக நிலையத்திற்குப் பக்கத்தில் - தெருச்சந்தியில் கொணர்ந்து நிறுத்தப்பட்டபோது, சித்திரவதையால் அக்கா சருகாய்க் கிழிந்திருந்தாள்.

நொடிப் பொழுதுதான் -

ஒரு வெறியன் துப்பாக்கியோடு அவளுக்குப் பக்கத்தில் வந்தான்.

லெட்சுமி அக்காவின் வாயில் துப்பாக்கியை வைத்து அவர்கள் கொடுமையாகச் சுட்டார்கள்.

அக்கா விழுந்தாள்.

உலகில் அறத்தின் இன்னொரு உயிர் நீப்பாய்... தமிழீழம் சிவப்பாயிற்று!

நெருப்பு

ஆனி - 1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ரை தம்பி காசுக்காண்டி

"அவன்கள் தான் ரோந்து பார்க்க வெளிக்கிட்டான்கள் - எதற்கும் கவனமாக இருப்பம்."

நாய்களின் குரைப்பு இப்போது முன்னைவிட அருகில் கேட்கத் தொடங்கியது.

"பிறேம், வலு கவனம். வைரவர் கோயிலடிப்பக்கம் தான் நிற்கிறாங்கள்."

நேரம் நகர்ந்தது.

"ரகு, நிச்சயம் அவன்கள் ரோந்துக்கு வரலே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தே - இடையிடையே குண்டுகள் வெடித்த சத்தத்தைத் தொடர்ந்து, நிலம் அதிர்ந்தது. அதைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தமும் கேட்டது. இயந்திரப் பறவையின் ஓசையும் மெலியதாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

பிரதான ரோட்டில் விரைந்து செல்லும் பெரிய கனத்த வாகனத்தின் பெரிய நீண்ட இழுவைச் சத்தம் உடன் கேட்டு அற்றுப் போனது. ஊரே இருளில் மறைந்து போயிருந்தது. நாய்களின் குரைப்புச் சத்தத்தைக்கூடக் காணவில்லை. இதிலிருந்து 'அவர்கள்' இன்னும் 'ரோந்துக்கு' வெளிக்கிட வில்லையெனத் தெரிந்தது.

வாழைத் தோட்டத்தின் மத்தியில், பெரிய தண்ணி ஓடும் வாய்க்காலின் நடுவில் மல்லாந்து படுத்திருந்தான் அகிலன். அவனுக்கு எதிராகப் பிரேமும், ரகுவும் வாழைப்பாத்திக்கு அடியில் அமர்ந்திருந்தார்கள்.

கைகளில் அந்த ஆயுதங்கள் இருளோடு இருளாக மறைந்து கிடந்தன.

என்ன கதைப்பது என்பது தெரியாமல், மூவரும் யோசனையில் மூழ்கி இருந்தார்கள். தொடர்ந்தாற்ப் போல் அடிக்கடி இடம் மாறிய களைப்பு அவர்கள் உடம்பை வாட்டிக் கொண்டிருந்தது. அகிலனின் இடதுகை கழுத்தில் கிடந்த அந்த "விசக்குப்பியை" தொட்டுக் கொண்டது. மெல்லியதாகக் குளிர்காற்று வீசி, உடலுக்கு இதத்தைக் கொடுத்தது. ரகு மெளனத்தைக் கலைத்தான்.

"அகிலன் பாத்தியே, போன முறை அங்க கட்டுவனில 'அவங்களோட' சண்டை பிடித்து உள்ளுக்கு விடாமல் துரத்திக்கொண்டிருந்தம். இப்ப இவங்களோட...

"இடையில எத்தின சம்பவங்கள், மாற்றங்கள்."

"ஒரு இனம் நிம்மதியாக, சந்தோசமாக தங்கட மண்ணில வாழுறத்துக்கு ஏன்தான் உவங்கள் விடுறாங்கள் இல்லை..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாவம் எங்கட சனங்கள்."

குழந்தையொன்று வீரிட்டு அழும் சத்தம் காற்றில் வந்தது.

"பிரேம், அந்தக் குழந்தை அழுகிற சத்தம் இந்த இரவில கேக்க ஒரு மாதிரியெல்ல இருக்கு."

அகிலன் கேட்டான்.

"உண்மைதான், கேக்க மனதுக்கு ஒரு மாதிரியாகத்தான் இருக்கு."

"என்ரை அக்காவின்ரை பிள்ளையும் இப்படித்தான் வீட்டில அழுது கொண்டிருப்பானோ..."

அகிலன் நினைத்தான். மனம், மெல்ல மெல்ல வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கியது.

* * *

அவன் வீட்டில் இருந்து பார்த்தால் ரயில் போவது வடிவாகத் தெரியும். அம்மா, அப்பாவிற்கு தோட்டத்திற்கு சாப்பாடு கொண்டு போக, பள்ளிக்கூடம் போக, புகையிரதம் வந்து போகும் நேரம் தான் அவர்களுக்கு உதவியது.

காலை ஏழரை மணியளவில் பனைக் கூட்டத்திற்கு மத்தியில் புகையிரதம் தலை நீட்டும் போது, அவன் வீட்டு வாசலில் பள்ளிக்குப் போகத் தயாராகி இருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய சைக்கிள் ரியூப்பின் ஒரு நீளத்துண்டால் புத்தகம், கொப்பிகளை வரித்துக் கட்டியிருப்பான். அவன் வகுப்புக்குப் போகும் வரை அவை அசையவே அசையாது.

புகையிரதம், புகைவண்டி நிலையத்தில் நின்று பெருமூச்சு விட்டு, பின் வெளிக்கிட்டு நகர்ந்து விரைவு படுத்தும் போது, நின்ற இடத்தில் இருந்து ஒரு துள்ளலுடன் கத்தியபடி அவன் அதனோடு சேர்ந்து விடுவான்.

புகையிரதத்தில் இருப்பவர்கள் இவனைப் பார்த்துச் சிரித்தபடி கையசைப்பார்கள். அப்படி ஓடும் போது இவன் போட்டிருந்த அரைக் காற்சட்டை கழன்று கீழே விழ, மறு படியும் மேலே இழுத்து விட்டுக் கொண்டு ஓட்டம் பிடிப்பான்.

கால ஓட்டமும் ஆரம்பத்தில் அவனுக்குச் சந்தோசமாகத் தான் இருந்தது. இருந்தும் அப்படித் தொடர்ந்து இருக்கக் கடவுள் விரும்பவில்லை.

இளவயதில் புகையிரத்தோடு ஓடியது - பள்ளியில் பாடம் முடிந்து வீடு திரும்பியது - பின் வைரவர் கோயில் வீதியில் கிளித்தட்டு விளையாடியது - காலையில் எழும்பித் தோட்டத்திற்குப் போய் வேலை பார்த்தது -

அப்படியே மெல்ல மெல்ல வகுப்பு இடம்மாறி, ரகுவும் சம்பந்தனும் நெருங்கிய நண்பர்களானது - உதட்டுக்குமேல் முளைத்த பூனை மயிர்கள் கறுக்கத் தொடங்கியது -

அம்மா, அப்பா எல்லோரையும் நினைத்து மனம் வைத்துப் படிக்கத் தொடங்கி...

சாதாரணம் தாண்டி உயர்தரம் வந்து இதில் நன்றாகப் படித்துச் சித்தியடைந்தால் உயர் படிப்பு பின் வேலை குடும்பக் கஸ்டம்நீங்கும்.

கற்பனை, கற்பனை, கற்பனை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தது...?

"அட்வான்ஸ் லெவல்" படித்து, பரீட்சை எழுதி வீட்டில் நிற்கும்போது தான், வவுனியா போகும்போது வழியில் சம்பந்தன் அநியாயமாகச் சிங்களவரால் கொல்லப்பட்டான்.

சம்பந்தனின் மறைவு மனதில் ஏற்படுத்திய தாக்கம், சித்தியடைந்தும் உயர் கல்வி மேலே படிக்க முடியாமல் இருந்த கல்வி நிலை, இவன் மாத்திரமில்லாது எத்தனை பேர்...

எதிர்பார்த்த கனவுகள் பூச்சியமாகத் தெரிந்தது மட்டுமல்ல, ஆண்டுக்கு ஆண்டு நடக்கும் இனத்தை அழிக்கும் செயல்கள் கண்டு, மனம் குழம்பிக் குழம்பி வெறுப்படைந்தது.

கடைசியில் கொஞ்சம் கொஞ்சமாக இளவயதினர் காணாமல் போக அவனும் அதேபோல் ஆனான்.

கைகள் அந்த கனத்த இரும்பு ஆயுதத்தை தூக்கத் தொடங்கின.

* * *

"என்ன அகிலன் பேசாமல் இருக்கிறாய்?" - ரகு.

வீட்டு யோசனைதான்" - அகிலன்.

"அண்டைக்கு உன்ரை அக்காவைப் பார்த்தனான்.குழந்தையோட போனா. கௌரி அக்கா என்று கூப்பிடப்பார்த்தன்; பிறகு பேசாமல் விட்டுட்டன். மகன் உன்னை மாதிரித்தான் இருந்தான்" பிரேம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேம் சொல்வதைக் கேட்டு அகிலன் மெல்லியதாகச் சிரித்தான்.

"என்ரை சாயலில் இருக்கட்டும் அவன். வயது வர என்ன மாதிரி ஆளாகாமல் நிம்மதியாய் வாழவேணும்."

இரவு நீண்டு கொண்டு போக, இருந்தாற் போல நாய்களின் குரைப்புச் சத்தம் கேட்கத் தொடங்கியது.

அவ்வளவுதான். மூவரும் பட்டென எழுந்தார்கள். கைகளில் அந்த இயந்திர ஆயுதத்தை இறுகப் பிடித்த படி, பிரேம் வலக்கையில் அந்த கிளிப்புப் பொருத்திய உருண்டைப் பொருளை வீசுவதற்கு ரெடியாக வைத்திருந்தான்.

"அவங்கள் தான் ரோந்து பார்க்க வெளிக்கிட்டான்கள். எதற்கும் கவனமாக இருப்பம்."

நாய்களின் குரைப்பு இப்போது முன்னைவிட அருகில் கேட்கத் தொடங்கியது.

"பிரேம், வலு கவனம். வைரவர் கோயிலடிப் பக்கம்தான் நிக்கிறாங்கள்.

நேரம் நகர்ந்தது,

"ரகு நிச்சயம் அவன்கள் ரோந்துக்கு வரேல."

அவர்கள் வரும் ஆபத்தை புரிந்துகொண்டார்கள்.

காலடி ஓசைகள், கட்டளைகள் அருகில் கேட்டு முடியப், பிரேம் கிளிப்பைக் கழற்றி வீசினான்.

குண்டு வெடித்தது. துப்பாக்கிகள் சடசடத்தன. சுட்டுக் கொண்டே ஓடினார்கள்... இறுதிவரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிரேம், ரகு, நீங்கள் நிற்க வேண்டாம்; கெதியில மாறுங்கோ, எனக்குத் தலைக்குள்ள ஏதோ செய்யுது."

மார்பிலிருந்து ரத்தம் பீரிட்டது.

காலை.

வாழைத் தோட்டத்தின் முடிவில்...

அகிலன் நிம்மதியாக உறங்கியிருந்தான். அவனைச் சுற்றி ஒரே பட்டாளமாக 'அவர்கள்' நின்றிருந்தார்கள். வெளியில் நடமாடிய சிலரைப் பிடித்து வந்து அவனைக் காட்டினார்கள்.

"பாரு உங்கட புலிக்குட்டி."

ஊருக்குள் செய்தி பரவியது. இராத்திரி நடந்த அமளியின் முடிவை, சனங்கள் அறிந்திருந்தார்கள். கோயிலில் சனங்கள் கும்பலாக இருந்தார்கள். இரவு வீடுகளில் காவலுக்குப் படுத்தவர்கள் அமளியைத் தொடர்ந்து கோயிலுக்கு வந்து விட்டார்கள்.

அதிகாலையில் காலைக் கடனை முடிக்க வெளியில் போன சிலர், வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தொடர் வாகனங்களைக் கண்டு உடனேயே ஓடி வந்து விட்டார்கள்.

தெரியாமல் சிலர் மாட்டிக் கொண்டார்கள். விடிந்தும் இன்னமும் அவர்கள் வராதது கண்டு, எல்லோரும் பயந்தார்கள்.

சிறிது நேரத்தின் பின், அவர்கள் தள்ளாடிய படி வீங்கிய முகத்துடன் ஊருக்கு வந்தார்கள்.

"என்ன அடிச்சவங்களோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்களைப் பிடிச்சு வைச்சிட்டு, இப்ப விடுவம், கோயிலுக்க புலி இருந்தால் சொல்லுங்கோ என்றான்கள்."

"நாங்கள் தெரியாது எண்டு சொல்ல... "

"உங்களுக்குத் தெரியாதோ? எண்டு பேசிக்கொண்டு வேலியில தடியை முறித்து, கீழே படுக்க வைச்சுப் போட்டு..."

கதை சொன்னவர்களைச் சுற்றிக்கூட்டம் கூடியிருந்தது. கோயிலில் இருந்த இளம் பெடியன்களைப் பார்த்துப் பலர் கவலைப்பட்டார்கள்.

"கடவுளே, வந்து என்ன செய்யப்போறான்களோ?"

விழிகள் நிலை குத்தி இருக்க, நெஞ்சு படபடக்க, எல்லோரும் பிரமை பிடித்தவர்கள் போல் இருந்தார்கள்.

அப்போது விரைந்து வந்த ஊர்ப்பெரியவர்கள் மூலையில் குழந்தையோடு படுத்துக்கிடந்த கௌரியை எழுப்பி, ஆறுதலாக விசயத்தைச் சொல்ல,

"ஐயோ என்ரை தம்பியடா. தம்பி! எங்கள விட்டுட்டுப் போட்டியே..." என்று கத்தினாள் கௌரி.

கௌரியின் அலறலைக் கேட்டு, தந்தையும் தாயும் கூடவே சேர்ந்து எழுப்பிய குரல் ஆவேசமாய் ஒலித்தது.

அம்மா, அப்பா, கௌரி மூவரும் அலறியபடி வெளியில் ஓடினார்கள். இவர்கள் இப்படி ஓடிப்போக, கோயில் வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்த வாகனத்தில் இருந்தவர்கள், உடனே குதித்து ஓடிக்கோயிலுக்குள் புகுந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரத்தில் இளவயதுப் பெடியன்கள் பலர் கைகள் மேலே தூக்கியபடி வரிசையாக வெளியே வந்தார்கள். பின் எல்லோருடைய கண்களும் துணிகளினால் கட்டப்பட்டன.

பிறகு,

வரிசையாக நடக்கவிடத் தொடங்கினார்கள். வரிசை தவறி நடந்தவர்கள் மீது அவர்கள் தங்கள் கைகளில் வைத்திருந்த தடியினால்...

"அம்மாளே!"

"ஐயோ கடவுளே!"

இந்தக் கொடுமைகளுக்கு நடுவிலேதான் - கௌரியும் அவள் பெற்றோரும் ஓடிக்கொண்டே இருந்தார்கள்...

கடைசியில் அகிலன்...

அதோ பிணமாய்க் கிடக்கிறான்.

கதறல்கள், அழுகைகள், விம்மல்கள். அந்த அதிகாரியின் புரியாத பாசையின் கேள்விகள் ஊர்ப்பெரியவர்களின் பயத்துடனான மொழிபெயர்ப்புக்கள், பாவம் அவர்களின் பதில்கள்.

"உன்ட மகனா?"

தலையாட்டினார்.

"பெயர்?"

"அகிலன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எவ்வளவு காலம் போய்?"

"மூன்று வருசம்."

"ஊரில் இப்படி எத்தனை பேர் இருக்கிறார்கள்?"

"தெரியாது"

"வீட்டில 'இது' வச்சிருக்கின்றானா?" - என, கைகளில் வைச்சிருந்ததைக் காட்டிக் கேட்டான்.

"இல்லை."

"எல்லோரும் வண்டியில ஏறுங்க, வீட்டை போக."

அந்தப் பெரிய வாகனத்தில் பின் பக்கம் அவன் உடல் ஏற்றப்பட்டது. பின் ஒரு துணியினால் மூடி விட்டார்கள்.

ஊர்ப்பெரியவர்களை ஜீப்பில் ஏறச்சொல்லி, இவர்களை உடல் வைத்த வண்டியில ஏறச்சொன்னார்கள்.

வீட்டு வாசலில் வண்டி நிற்க, இவர்களை வண்டியிலேயே இருக்கச் சொல்லிவிட்டு அவர்கள் மட்டும் உள்ளே போனார்கள்.

அந்த ஓலைமண் வீட்டில் எல்லா இடமும் துருவித் துருவி அலசினார்கள். கொட்டிச் சிதறினார்கள். ஓலைகளைப் பிரித்து பார்த்தார்கள். போயிலை உலர்த்தும் கிடங்கை ஆச்சரியமாய்ப் பார்த்தார்கள்.

அதனைப் பார்த்துப் பல கேள்விகள் கேட்டார்கள். வீட்டைச் சுற்றி மண்வெட்டியினால் கொத்தினார்கள்.

கடைசியில் சில பிரசுரங்களும் போஸ்டர்களும் கிடைத்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யார் இது படத்தில்?"

"என்ரை மகனின்ர சினேகிதன். இங்க ஆமியோட சண்டையில செத்துப் போனான்."

"ஒண்டும் இல்லையெண்டாய், இப்ப இது...?" அந்த அதிகாரி தந்தையின் கன்னத்தில் அடித்தார். "அப்பாவை விடுங்கோ, சுகமில்லாதவர்."

"இவனும் சுடுவானோ?"

அவன், கையில் வைத்திருந்த குழந்தையைக் காட்டிக் கேட்டான். அது அழுவதற்குப் பயந்து முழித்தபடி இருந்தது.

சிறிது நேரத்தில் அந்த அதிகாரியின் கட்டளைப்படி எஞ்சிய பொருட்கள் எரிக்கப்பட்டன.

அயலில் வசித்தவர்கள் ஒருவரும் வெளியே வரவில்லை.

அகிலனின் அப்பா மகனைக் கெதியில் தங்களிடம் தரமாட்டார்களா எனத்தவித்தார்.

அது பற்றிக்கேட்டதற்கு, தங்களின் காம்புக்குக் கொண்டு போய்க் காட்டிய பிறகு தரலாம் என, அந்த அதிகாரி சினத்துடன் கூறினான்.

மறுபடி பெரியவர்களுடன் அகிலனின் தந்தை மட்டும் பயணமானார். மற்றவர்கள் கூடவர அனுமதிக்கவில்லை.

காம்பில் உடல் இறக்கப்பட்டு மேலும் சில உயர் அதிகாரிகள் வந்து பார்த்தார்கள். அடுத்த கட்டமாக ஒரு துண்டுக் காகிதத்தில் அவரிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு என்னவென்று விளங்கவில்லை.

பெரியவர்கள் முளித்தார்கள்.

"நான் இவர்களுக்கு இதற்கு கையொப்பம் இட்டு ஒப்புதல் அளிக்கிறேன். இது இயற்கை மரணமா அல்லது வேறு..."

மகனே போய்விட்டான்.

அதே வாகனத்தில் உடலை ஏற்றி வீடு வந்து சேர்ந்தார்கள். உடல் வீட்டின் வாசலில் கிடத்தப்பட்டு...

அந்த அதிகாரி பக்கத்திலே இருந்தார். பின் அகிலனின் தந்தையாரை அழைத்துச் சொன்னார்.

"நான் இப்படி நடந்ததை இட்டு வருத்தப்படுகிறேன்."

பின் ஏதோ யோசித்தபடி பக்கத்தில் உடன் இருந்தவர்களோடு கதைத்து, தனது மணிபர்சில் இருந்து சில ரூபாய்த் தாள்களை எடுத்து, அவர் கைகளில் திணிக்க... இது வரையும் அவரின் செய்கைகளைப் பார்த்த படி நின்ற அகிலனின் அக்கா கௌரி ஓடிவந்து, தகப்பனின் கைகளில் திணித்த ரூபாய்த்தாள்களைப் பறித்து, அதிகாரியின் முகத்தில் வீசினாள் ஏசியபடி -

"பிடியுங்கோ உங்கட காசை, என்ரை தம்பி இந்தக் காசுக்காண்டிச் சாகயில்ல... இது உங்களுக்குப் புரியாது?"

தமிழீழம்

ஜூன் 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாளுக்காகக் காத்திருக்கிறான்

மனைவியை ஒரு தள்ளுவண்டியில் வைத்து

'எக்ஸ்ரே' படம் பிடிக்கும் அறைக்குக் கொண்டு

வந்தான் அவன்.

என்ன கொடுமை.

துப்பாக்கிகளின் வெறி ஓசை இப்போது பக்கத்திலேயே கேட்டது. மனித அலறல்கள் காதைப் பிளந்தன. 'கிரனேட்' ஒன்று அறைச்சுவரின் ஓரத்திலேயே விழுந்து அதிர்ந்து வெடித்தது.

நொடிப்பொழுதுதான்.

இந்தியப் படை வெறியர்கள் 'எக்ஸ்ரே ' அறைக்குள் பாய்ந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்தை அள்ளிக் கொட்டி அவனோடு நீண்ட காலம் பழகிவிட்ட மனைவி - இரத்தமும் தசையுமான ஐந்து பிள்ளைகள் - எல்லோருடைய பிணங்களையும் வீட்டுக்குத் தூக்கிச் செல்லத்தான் யாழ்ப்பாணம் மருத்துவ நிலையத்துக்கு வருகிறான்.

இப்படி ஒரு நிகழ்வு வாழ்வில் ஏற்படுமென்று அவன் நினைத்தானா? ஒன்றன்பின் ஒன்றாக சாமி கும்பிட்ட கோயில்களெல்லாம் நினைவுக்கு வந்தன.

உதடுகள் துடிக்க - நெஞ்சு வலிக்க, "கடவுளே கடவுளே" என்று அவன் முனகினான்.

யாழ்ப்பாணத்தில் குண்டு விழுந்து ஒவ்வொரு மூலையிலும் ஏதோ ஒரு கோயில் இடிந்து கிடந்தது. இந்த நேரத்தில் அவனுடைய முனகல் கடவுளின் காதில் விழ நியாயமில்லை.

ஆண்மகன் என்பதையும் மறந்து, மருத்துவநிலைய வாசலில் நின்று தேம்பி அழுதான்.

பிள்ளைகளின் நினைவை மிஞ்சி மனைவியின் நினைவே நெஞ்சைக் குடைகிறது.

உரும்பிராய்தான் ஊர். கத்தரி பூத்துக் காய்க்கும் காலத்தில் கொழுகொழு என்று இருக்குமே - அந்தக் குடும்பம் அப்படித்தான் இருந்தது.

சிறீலங்காவின் சிங்களப் படை யாழ்ப்பாணத்தில் கொட்டமடித்த நாட்கள் ஹெலிகொப்டர்களின் கொடிய இரைச்சல் - 'செல்'களின் வெறித் தனமான தாக்குதல் - இவற்றின் நடுவில்கூட அவர்கள் வீட்டில் கண்ணீர் பாயவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விடுதலைப் புலிகள் விடமாட்டினம். நீதிக்கான ஒரு போரை வெண்டு போடலாம் என்று ஜெயவர்த்தனாவும் அத்துலத்முதலியும் நினைக்கினை. எங்களின்ர பெடியன்களைப் பற்றி இவனுகளுக்குத் தெரியாது" என்று மனைவியிடம் பெருமையோடு சொல்லிச் சிரிப்பான் அவன். வீடு கலகலப்பாகவே இருந்தது.

மனைவி கணவன் என்பது ஒட்டு மா மரத்தைப்போல-இரண்டு வெவ்வேறு மரங்களாக இருந்தாலும்-ஒட்டிய பின்பு ஒரே மரமாய்-ஒரே உயிராய்-ஒரே வாழ்க்கையையே... அவன் மனைவியை என்றைக்குமே இன்னொன்றாய் நினைத்ததில்லை. காலத்தால் தன்னோடு ஒன்றாகி விட்ட அவளை அவன் உயிர் மூச்சாகவே எண்ணினான்.

பிள்ளைகள் போய்விட்டார்கள் என்பதைவிட, அவர்களையெல்லாம் கட்டிக்காத்து வளர்த்த அவள்-குடும்பத்தில் மூத்த பிள்ளை போலவே இருந்த அவள்-அவள் போய்விட்டாள்.

மருத்துவ நிலைய வாசலில் ஒரு கூட்டமே அவனை மொய்த்திருந்தது. இந்திய 'செல்' தாக்குதலின் கொடிய விளைவு-பிணங்கள் பிணங்களாய் வந்து குவிந்துகொண்டிருந்தன. அவனுடைய மனைவி பிள்ளைகளின் பிணங்கள் கூட இதுவரை வந்து சேர்ந்திருக்கவேண்டும். யாரோ அறிந்துவர உள்ளே போனார்கள். அவன் காத்துக்கொண்டிருக்கிறான்.

***

நேற்றுத்தான் நடந்தது.

இந்தியப் படை சண்டையைத் தொடங்கிய நாளில் இருந்து, கொடுமைகள் பற்றிய சேதிகள் ஓயாமல் பரவிக் கொண்டே இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டையிலும் நாவற்குழியிலும் பலாலியிலும் இருந்து 'செல்' அடிக்கிறார்களாம். கோப்பாயை நோக்கி இந்தியப் படைகளின் 'டாங்கி'களும் படையும் முன்னேறிக் கொண்டிருக்கிறதாம். கொக்குவிலுக்குப் பக்கத்தில், ஒரு கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றை 'டாங்கி' யின் இரும்புச் சங்கிலிக் கால்களால் வெறியர்கள் மிதித்தார்களாம். கலட்டியில் தமிழ்ப் பெண்கள் கற்பழிப்பாம். நல்லூர் முருகன் கோயிலில் அகதிகள் கூட்டம் நிரம்பி வழிகிறதாம்...

'செல்' களின் வேகத்திலேயே சேதிகளும் பரவிக்கொண்டிருந்தன. திடீரென்று தெருவில் அழுகை ஓலம் கேட்கும். "என்ர மகனைக் கொண்டு போட்டானுகளே பாவிகள்... " என்று ஒரு தாய் தலையில் அடித்துக் கத்திக் கொண்டு போவாள். கை முற்றாக முறிந்துபோய் "ஓ" என்று கதறும் சிறுவன் ஒருவனை, இரத்தம் வழிய ஒரு பெரியவர் மிதிவண்டியில் வைத்து எங்கோ வேகமாகத் தள்ளிக்கொண்டு பறந்தார். தூரத்தில் வீடுகள் எரிந்து வானத்தில் புகை மண்டலம் கிளம்பும். ஐந்து மணித்துளிக்கு ஒரு தடவை கொடுமையான 'செல்' லின் வெறியோசை கேட்கும். யாழ்ப்பாணம் இந்தியப் படை முரடர்களின் இரத்தப் பசிக்குத் தீனியாகிக் கொண்டிருந்தது.

அவன் மனைவியைப் பார்த்துச் சொன்னான் - "விடுதலைப் புலிகள் இப்பவே பதின்மூன்று 'டாங்கி' களை நொறுக்கிப் போட்டினமாம். இந்தியப் படையிலை ஆயிரம்பேர் செத்திருப்பாங்கள் போலத் தெரியுது. எங்க பார்த்தாலும் சனங்கள் குடும்பம் குடும்பமா கோயிலுக்குத்தான் ஓடுதுகள். நாங்கள் வீட்டிலை இருக்கிறது நல்லா இல்ல - வசவிளான் முகாமிலை இருக்கிற இந்தியப் படை உரும்பிராய்க்கு வந்து கொண்டிருக்குதாம்..."

அவள் மளமளவென்று மூட்டை முடிச்சுகளைக் கட்டினாள். கடைசி இரண்டு பிள்ளைகளும் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

"எப்ப திரும்புவமோ தெரியாது - தலையெல்லாம் காய்ஞ்சு போய்க் கிடக்கு... வாடா இப்படி..." மகனை இழுத்துத் தலையில் நல்லெண்ணெய் தேய்த்துவிட்டாள் அவள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனும் மனைவியும் பிள்ளைகளுமாய் அந்தக் குடும்பம் மூட்டை முடிச்சுகளோடு, பொக்கணை அம்மன் கோயிலுக்குப் புறப்பட்டது.

காலை 11 மணி. தெருவில் யாருமே இல்லை. கிளுவை மர வேலியில் இருந்த ஒரு ஓணான் கீழே இறங்கி-தெருவில் நின்று தலையை ஆட்டிக் கொண்டிருந்தது.

பிள்ளைகளுக்குக் கோயிலுக்குப் போகும் மகிழ்ச்சி.

இந்தக் கோயில் திருவிழாக்களில் அவனும் அவளும் பிள்ளைகளும் கலகலப்பாகக் கலந்து மகிழ்ந்த நாட்கள் எத்தனை! தூரத்தில் கோயிலைக் கண்டபோதே அவளுக்கு மேனி சிலிர்த்தது.

பிள்ளைகள் ஆர்வத்தோடு கோயிலை நோக்கித் துள்ளி ஓடினார்கள்.

அப்போதுதான் அந்தக் கொடுமை நிகழ்ந்தது.

கோயிலுக்குப் பின்னால் முன்பே மறைந்திருந்த இந்தியப் படை முரடர்கள், வெறித்தனமாகச் சுடத் தொடங்கினார்கள்.

"அம்மா! அம்மா!" என்று கத்திக்கொண்டே ஒவ்வொரு பிள்ளையும் விழுவதை அவன் கண்டான். ஐந்து பிள்ளைகளும் சடலங்களாய்ச் சாய்ந்தன.

"கடவுளே!" மூட்டை முடிச்சுகளை வீசி எறிந்துவிட்டு, பிள்ளைகளை நோக்கி வெறி பிடித்தவளாய் ஓடினாள் அவள். என்ன பயன்? சண்டாளர்களின் இன்னொரு துப்பாக்கிக் குண்டு அவளையும் இரத்த வெள்ளத்தில் வீழ்த்திற்று.

"ஓ!" என்று கத்திக்கொண்டே நிலத்தில் குப்புற அவன் விழுந்தான்.

துப்பாக்கிகள் ஓய்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வெறியர்கள் வருவார்களோ!-பக்கத்தில் நின்றே சுடுவார்களோ!-அவன் உடல் வெடவெடத்தது.

ஆறு மணி நேரம்... பிணத்தைப் போலவே அவன் படுத்துக் கிடந்தான். மாலை 5 மணி அளவில் ஒரு 'ட்றக்' வண்டியின் இரைச்சல் கேட்டது. மெதுவாகத் தலையை நிமிர்த்திப் பார்த்தான். அவர்கள் போகிறார்கள். சிலவேளை ஒரு சிலர் கோயிலில் நிற்கவும் கூடும்.

பக்கத்து வேலியால் நுழைந்து-கிறிஸ்தவத் தேவாலயம் ஒன்றின் வழியாகத் தப்பி, ஊரின் குறுக்கு ஒழுங்கைகளால் ஓடினான் அவன்.

***

மருத்துவ நிலையத்தின் உள்ளே இருந்து வந்த உரும்பிராய்க்காரர் ஒருவர் வாசலில் நின்ற அவனைப் பார்த்துச் சொன்னார்-

"தம்பி... உன்ர பிள்ளைகளுக்கு இப்படி நடந்திருக்குதே பார்... நல்லகாலம். உன்ர மனுசி ஒரு மாதிரித் தப்பிற்றுது. 8-ஆம் 'வார்ட்'டிலை வச்சிருக்கினம்.

மனைவி உயிரோடு இருக்கிறாளா?

துயரங்களுக்கு நடுவிலும் ஒரு புதிய நம்பிக்கையால் சிலிர்த்தான்.

பிள்ளைகளின் சாவு நெஞ்சில் திணித்த துயரத்தை அவனோடு சேர்ந்து பங்கிட, ஒருத்தி உயிரோடு இருக்கிறாள். அவள் அவனை விட்டுப் போக மாட்டாள். அவனைத் தனியாக அழவிடுவாளா அவள்? என்றைக்காவது விட்டிருக்கிறாளா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8-ஆம் வார்ட்டை நோக்கி அவன் விரைவாக நடந்தான்.

மனைவியின் பக்கத்தில் போய் நின்று ஒரு குழந்தையைப் போல விம்மி அழுதான் அவன். அவள்-அவன் கையை இறுகப் பிடித்துக்கொண்டு உடலின் நோவைத் தாங்க முடியாமல் பாயில் நெளிந்து புரண்டாள். அறுவைச் சிகிச்சை முடிந்து புண்ணுக்கு மருந்து கட்டியிருந்தார்கள்.

சவஅறைக்குப் போய்ப் பிள்ளைகளின் சடலங்களை நேரில் பார்க்க இயலாதவனாக அவளுக்குப் பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்தான்.

திடீரென்று மருத்துவ நிலையத்தின் மேல் அடுக்கடுக்காகச் 'செல்'கள் விழத் தொடங்கின. எல்லோரும் பதறிக்கொண்டு அங்கும் இங்குமாக ஓடினார்கள்.

வானத்தில் ஒரு 'பொம்மர்' விமானம் உறுமிக்கொண்டே குண்டுகளை அள்ளி வீசியது.

மனைவியை ஒரு தள்ளுவண்டியில் வைத்து 'எக்ஸ்ரே' படம் பிடிக்கும் அறைக்குள் கொண்டு வந்தான் அவன். அந்த அறை கொஞ்சம் பாதுகாப்பாக இருந்தது. டொக்ரர்கள், நேர்சுகள், மருத்துவ நிலைய ஊழியர்கள் எல்லோரும் அந்த அறையை நோக்கி ஓடினார்கள்.

என்ன கொடுமை.

துப்பாக்கிகளின் வெறி ஓசை இப்போது பக்கத்திலேயே கேட்டது. மனித அலறல்கள் காதைப் பிளந்தன. 'கிரனேட்' ஒன்று அறைச் சுவரின் ஓரத்திலேயே விழுந்து அதிர்ந்து வெடித்தது.

நொடிப்பொழுதுதான்.

இந்தியப் படை வெறியர்கள் 'எக்ஸ்ரே' அறைக்குள் பாய்ந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுக்கட்டாக இருந்த 'எக்ஸ்ரே' படங்களின் எலும்பு உருவங்கள் சிதறிப் பறந்தன.

எங்கும் பிணம், எங்கும் இரத்தம், எங்கும் மரண ஓலம், டொக்ரர்களும், நேர்சுகளும் சடலங்களாய்...

மனைவியின் தலையில் குண்டு பாய்ந்து, அவள் தள்ளு வண்டியின்மேல் குப்புறப் பிணமாக விழுவதை அவன் பார்த்தான்.

இந்தியப் படை முரடர்கள் சுட்டுக்கொண்டே அடுத்த அறையை நோக்கி ஓடினார்கள். குண்டுபட்ட காலின் இரத்தக் காயத்தோடு அவன் மனைவியின் சடலத்துக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

நடுங்கிக்கொண்டே அவன் உதடுகள் முனகின.

"போய்விட்டாயா! போ... நான் உன்னோடு வரமாட்டேன். விடுதலைப் புலிகளின்ர வெற்றியை நான் என்ர கண்ணால பார்க்கவேணும்!"

தமிழீழம்

ஏப்ரல் 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத் துயரையும் மேவிய...

"இண்டைக்கு ஆசுப்பத்திரிக்குப் போகவேணும். எட்டு மணிக்கு வெளிக்கிட்டாத்தான் உவங்கட 'சென்றி கின்றி' எல்லாம் தாண்டிப்போக நேரம் சரியா வரும்" என்றபடி சமையல் அறைக்குள் நுழைகிறாள்.

"கடவுளே..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழம் பூராவும் தமிழ் மக்களுக்கு எதிராக இனப் படுகொலைகள் நடத்தப்பட்டுவரும் வேளையில் குறிப்பாகத் திருகோணமலையிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும்,மிகவும் மோசமான முறையில் படு கொலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மக்கள் சொல்லொணாத் துன்பத்திலும் துயரத்தின் மத்தியிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

சிறீலங்காக் கூலிப்படை, அன்னிய கூலிப்படை என்ற இவர்களின் காலடிகள் என்று அக்கிராமத்தில் பதிக்கப்பட்டனவோ, அன்றிலிருந்து தன் பொலிவிழந்து, அழகிழந்து மதியிழந்தது அக்கிராமம்...

கண்களை விழித்துக்கொள்கிறாள் திலகா.

அன்று ஏனோ தன்னை அறியாத மனக்கலக்கம் அவளுக்கு. கடவுளை வேண்டியபடி...

"கடவுளே! நீதான் துணை."

'என்ன நடக்கப்போகுதோ...? ஏது நடக்கப்போகுதோ...?' என்ற மனப் பீதி, "இத்தனை காலம் சிங்களவனின் அட்டூழியத்தையும் பார்த்துப் பார்த்துப் மனம் கல்லாப் போச்சு" என வாய்க்குள் முணுமுணுத்தபடி, படுக்கையைச் சுற்றிப் பறனில் வைக்கிறாள். மனப் பீதியைச் சமாளிப் பதற்கு திரும்பவும் வாய்க்குள் முணுமுணுப்பு.

"இவ்வளவு காலமும்தான் இந்தச் சிங்களவன்செய்த அட்டூழியங் களையும், அநியாயங்களையும் அடக்கி வந்தாங்க எங்கட புலிப்படைத் தம்பியவை."

"கொஞ்சக் காலம் நிம்மதியாய் இருந்தோம்."

"ஒப்பந்தம் கிப்பந்தம் எண்டு வந்தாங்கள் இந்தப் பாளுண்டு போவாங்கள். இவங்கட அட்டகாசத்தைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறான் இந்தக் கடவுள்" எனக் கடவுளில் பழியைப் போட்டுவிட்டு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இண்டைக்கு ஆஸ்பத்திரிக்குப் போக வேணும். எட்டு மணிக்கு வெளிக்கிட்டாத்தான், உவங்கட 'சென்றி கின்றி' எல்லாம் தாண்டிப்போக நேரம் சரியா வரும்" என்றபடி சமையல் அறைக்குள் நுழைகிறாள்.

"கடவுளே..."

"இண்டைக்குச் சாப்பாட்டு கொடுக்க வேணும். நான் தீர மறந்து போனேன். எனக்குப் பல சோலியில இந்த முக்கியமானதை மறந்து போனேன்."

"எங்கட தம்பியவை ஊனில்லாமல், உறக்கமில்லாமல் இலட்சியத் திற்காய்ப் போராடியும் இவங்கள் என்னடா எண்டால், அவையள் போறவழி வாறவழி எல்லாம் படுத்துக் கிடக்கிறாங்கள்."

"சுடுகிறான்கள்."

"எட்டு மணிக்குத்தான் உங்க அநியாயம் பிடிப்பாங்கள் வருவாங்கள்; அதுக்கிடையில நான் சமைச்சு சாப்பாடு குடுத்திடவேணும்."

மின்னல் வேகத்தில் சமையலைத் தொடர்கிறாள் திலகா.

"அவருக்கு (கணவன்) உடம்பு சரியில்லை என்று சொன்னதே! அவரைப் பார்க்கப் போகக் கூட நேரமில்லை"

அவ்வளவு வேகம்.

கடைசி மகள் கலாவைக் கூப்பிடுகிறாள்.

"பிள்ளை இந்தக் தேத்தண்ணியைக் கொண்டேய் அப்பாட்டைக் குடுத்துவிடு" என கொடுக்கிறாள்.

சில நிமிடங்களின் பின்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்...மா...அ...ம்...மா..." என்று வார்த்தைகளை விழுங்கியபடி...

'ஆமிக்காரங்கள் வந்திட்டாங்களோ...?

'தம்பியவைதான் வரேக்க ஏதும் நடந்து போச்சோ?'

'இல்லை அப்படி எல்லாம் நடக்காது; நடக்கவும் கூடாது' எனத் தன்னுள் கேள்வியும் பதிலும் அளித்தபடி ஏங்கிக்கொண்டிருக்கின்றது அத்தாயுள்ளம்.

"அம்...மா...மா" அதே பதற்றம்.

"என்னபிள்ளை கெதியாய்ச் சொல்லு... எனக்கு நேரம் போச்சு."

"அம்மா... அப்...பாக்கு மூச்சு வரேல்ல."

"அப்பாவுக்கு என்ன பிள்ளை?" கணவனை நோக்கி ஒடுகிறாள். அவரின் உயிர் அவரது உடலை விட்டுப் பிரிந்து விட்டது. அழுது ஆர்ப்பரித்து ஊரைக் கூட்டாமல் மனத்துள் வேதனையை அடக்கிக் கொண்டு...

சாப்பாட்டை அவசரமாகக் கட்டிக்கொண்டு, சனநடமாட்டமற்ற அப் பாதையினூடே நடந்து சென்று, பனைஓலையால் இழைக்கப்பட்ட அந்தக் கடகத்தைத் தலையிலிருந்து இறக்கி வைத்துவிட்டுச் சேலைத் தலைப்பால் முகத்தை ஒரு தடவை துடைத்துக்கொண்டு...

அவள் முகத்தில் சோகம் குடிகொண்டிருந்தது.

அவளின் கண்மடல் சிறிது வீங்கியிருந்தது. எம் தோழர்களில் ஒருவன் "அம்மா! ஏன் ஒரு மாதிரி இருக்கிறியள்?" என வினாவினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்றுமில்லை" - மெதுவாகக் கூறியவள், சற்றுக் கண்டிப்புக் கலந்த தொனியில், "கெதியில எல்லோரும் வந்து சாப்பிடுங்கோ."

இயல்பாய் இருப்பது போன்ற பாவனையுடன் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள்.

தோழர்கள் மௌனமாகவே உணவருந்தத் தொடங்கினார்கள்.

"அப்ப தம்பியவை நான் போட்டு வாறன்."

விரைவுடன் படியிறங்கி நடந்தவளைப் புதிருடன் பார்த்தார்கள்.

"இண்டைக்கு இவவுக்கு என்ன நடந்தது!"

புதிருடன் பார்த்துக் கொண்டிருந்த தோழர்களில் ஒருவனின் தோளை மெதுவாகத் தொட்டார், முகாமுக்குப் பக்கத்து வீட்டுக் கிழவர்.

"தம்பியவை! இவள் பொடிச்சியின்ர மனிசன் காலமை 10 மணிக்கு, இருந்தாப்போல செத்துப்போச்சு. இன்னும் சவம் கூட எடுக்கேல்ல. அதுதான் இவள் பொடிச்சி..."

குசுகுசுத்தார் பொன்னுச்சாமிக் கிழவர்.

"என்ன இன்னும் சவம் எடுக்கேல்லையே...!!"

முகாமிலிருந்து சற்றுத் தொலைவிலிருந்த அம்மாவின் குடிசையைக் கற்பனையில் பார்க்கமுடிந்தது.

கட்டிய கணவன் மீளாத்துயிலில்... அருகில் கதறியபடி பிள்ளைகள்... எனினும் தேச விடுதலைக்காய்ப் போராடும் போராளிகள் தான் பெரிதென்று, அவர்களுக்கு உணவு படைக்க விரைந்து வந்த அந்தத் தாயை நினைத்து விக்கித்து நின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ! இவர்கள் எம் மக்கள்." தமிழீழப் போராட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டம் திருகோணமலை மாவட்டமாகும். ஒவ்வொரு குடும்பமும் அழிவைச் சந்தித்திருக்கிறது. பாதிப்படையாத தமிழ் பேசும் மக்களே கிடையாது. 1983 இல் இருந்து 1987 வரை 39 தமிழ்பேசும் கிராமங்கள் அழிக்கப்பட்டன; 26 760 வீடுகள் அழிக்கப்பட்டன; 44 800 குடும்பங்கள் அகதிகள் ஆகினர்.

சாவுகளோடுதான் தமிழீழத்தில் வாழ்க்கை தொடர்கின்றது. இந்தப் பின்னணியில்தான் இச்சம்பவம் நடந்தது.

-உணர்வு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நிமிர்ந்த குரலின் மரணம்

யோகனின் குரல் 'கணீர்' என்று ஒலித்தது -

"அசையாதீங்கடா. நமக்கு மேல அவன் 'ஜீப்'பை விடட்டும். நம்மளை அவன் கொல்லலாம் - ஆனா நம்மட போராட்டத்தை அவன் ஒடுக்கமுடியாது. திலீபன் நம்மட தலைவர்களில ஒருவன். அவனுடைய கோரிக்கை வெல்லவேணும். எண்டுதான், அகிம்சை வழியில நாம இந்த மறியல் போராட்டத்தை நடத்துறம்... அசையாதீங்கடா."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணா நோன்பில் திலீபன் உட்கார்ந்து ஐந்தாம் நாள்.

19. 09. 1987.

அடம்பன் சிங்கள சிறீலங்கா படைமுகாம் முன்னால் "திலீபன் கோரிக்கையை நிறைவேற்று!" என்று முழங்கும் மக்கள் திரள்.

நல்லூர்க் கோவில் முற்றத்தில் உருகிக் கரைந்து கொண்டிருந்த திலீபன், தமிழீழம் முழுவதும் பேரெழுச்சியானான்.

அது -

கதிரவன் மறைவுக்கு முந்திய கடைசி வெளிச்சம்.

நெடுங்கண்டல் - பாலைக்குழி - தாமரைக்குளம் - இத்திக்கண்டல் - சகாய வீதி - ஆண்டான்குளம் - பிள்ளையார்பிட்டி - கண்ணாட்டி - உயிலங்குளம் - வட்டுப்பித்தான்மடு - புதுக்கமம் - இப்படி அடம்பன் கிராமத்தின் பக்கத் தூர்களில் இருந்து திரண்ட மக்கள், அடம்பன் சிறீலங்காப் படைமுகாம் முன்னால் மறியல் போரிலும், ஒரு நாள் அடையாள உண்ணா நோன்பிலும் ஈடுபட்டிருந்தார்கள். சிங்களப்படையை முகாமுக்கு வெளியே வரவிடுவ தில்லை என்பது மக்கள் எடுத்த முடிவு.

படைமுகாம் சூடாகிக்கொண்டிருந்தது.

'ஜீப்' வண்டியையும், படைவெறியர்களையும் முகாம் வாசலில் உட்கார்ந்திருந்த மக்களை நோக்கி நகர்த்தினான் சிங்களப்படையின் முரட்டுத் தளபதி.

அப்போதுதான் -

யோகனின் குரல் 'கணீர்' என்று ஒலித்தது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அசையாதீங்கடா. நமக்கு மேல அவன் 'ஜீப்'பை விடட்டும். நம்மளை அவன் கொல்லலாம்... ஆனா நம்மட போராட்டத்தை அவன் ஒடுக்க முடியாது. திலீபன் நம்மட தலைவர்களில் ஒருவன். அவனுடைய கோரிக்கை வெல்லவேணும் எண்டுதான், அகிம்சை வழியில நாம் இந்த மறியல் போராட்டத்தை நடத்துறம்... அசையாதீங்கடா."

தெரு ஓரத்தில், தன் உழவுப்பொறி வண்டியில், பழங்காலப் போர்வீரன் ஒருவன் குதிரைமேல் இருந்தது போல் அவன் உட்கார்ந்திருந்தான்.

'ஜீப்' வண்டி உறுமித் தணிந்தது... ஓர் அங்குலம் கூட அவர்களால் மக்களை நோக்கி முன்னேற முடியவில்லை.

கொஞ்ச நேரத்தில் -

'தள்ளாடி' பெரிய முகாமிலிருந்து வந்த சிங்களப் படையின் 'பவல்' கவச வண்டி மக்கள் முன் உறுமி நின்றது.

"திலீபன் கோரிக்கையை நிறைவேற்று! திலீபனின் உயிரைக் காப்பாற்று..."

மக்களின் ஆர்ப்பரிப்பு முழக்கம்.

தென்னாபிரிக்க தயாரிப்பான 'பவல்' கவசவண்டியை விடுதலைப் புலிகள் பலமுறை கண்ணிவெடியால் நொருக்கி இருக்கின்றார்கள்.

யோகன் மீண்டும் கத்தினான் -

"விழுந்து படுங்கடா... விடாதீங்கடா... அசையாதீங்க... எத்தனை பேர் இதுவரையில நம்மட போராட்டத்தில செத்துப் போனானுகள். நாம ஆரெண்டு இவனுகளுக்குத் தெரியாதா? அசையாதீங்கடா... விழுந்து படுங்க."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தெருவில் விழுந்து படுத்தார்கள். நிலைமை சூடாயிற்று.

சிங்களப்படைத் தளபதிக்கு, மன்னார் இந்தியப் படைத் தலைமை நிலையத்தைத் தொடர்பு கொள்வதை தவிர வேறு வழி இருக்கவில்லை. படை முகாமாக மாறியிருந்த பழைய அடம்பன் மருத்துவ நிலையக் கட்டிடத்தின் முள்வேலிக் கம்பி வளையத்தை, அவன் சுற்றிச் சுற்றி வந்தான்.

தொலைத் தொடர்புக் கருவியில் யாரோ உள்ளே தொண்டை கிழியக் கத்துவது கேட்டது.

கொஞ்ச நேரத்தில் -

இந்தியப் படையின் மன்னார் மாவட்டப் பொறுப்பதிகாரி லெப். கேணல் டிலோனின் 'ஜீப்' வண்டியும் 'ட்ரக்' வண்டிகளும் வரிசைகட்டி வந்து நின்றன.

'ட்ரக்' வண்டிகளின் உறுமல் - மன்னார் மண்ணின் புழுதிப்புகை - மக்களின் எழுச்சி முழக்கம்.

யோகன் லெப். கேணல் டிலோனை உற்றுப் பார்த்தான்.

ஓரிரு நாட்களுக்கு முன் மன்னார் இந்தியப் படை முகாமுக்கு மக்களின் துன்பங்களை எடுத்துச் சொல்லப்போன சலீமை நோக்கித் துப்பாக்கியை நீட்டியவன் டிலோன்.

இந்நிகழ்ச்சிபற்றி மன்னாரில் அப்போது பரபரப்பாகப் பேசப்பட்டது.

"எல்லோரும் கலைந்து செல்லுங்கள்... விரைவில் விரைவில்" என்று 'ஜீப்' வண்டியிலிருந்து இறங்கிய டிலோன் ஆங்கிலத்தில் கத்தியபோது - துப்பாக்கிகளோடு இந்தியப்படை வெறியாளர்கள் மக்கள்முன் பாய்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது - பதற்றம் நிலவிற்று.

"திலீபன் கோரிக்கையை நிறைவேற்று! திலீபனின் உயிரைக் காப்பாற்று!"

உணர்ச்சிவசப்பட்டவர்களாய் மக்கள் ஆர்ப்பரித்தனர்.

டிலோனின் முகம் சிவப்பாயிற்று.

"போகிறீர்களா இல்லையா...?" என்று சினம் பிடித்தவனாய் இரைந்தான் அவன். துப்பாக்கியை நீட்டி "உங்களைச் சுடுவேன்!" என்றும் கத்தினான்.

யோகனுக்கு உலகம் மறந்து போயிற்று. டிலோனின் முன்னால் பாய்ந்து, சட்டையை திறந்து, மார்பைக் காட்டி, "சுடுங்கோ, தாராளமாச் சுடுங்கோ... நாங்கள் சாவுக்கு அஞ்சவில்லை..." என்று உறுமினான் யோகன்.

டிலோன் யோகனை உற்றுப் பார்த்தான். இரண்டு மூன்று மணித்துளிகள் பார்த்தபடியே நின்றான்.

பின்பு -

அவன் வண்டிகள் மன்னார் நோக்கி விரைந்து நகர்ந்தன.

'தள்ளாடி' முகாமிலிருந்து வந்த 'பவல்' வண்டியும் திரும்பிற்று.

*இரவு மறியல்போர் முடிகிறவரை மக்கள் எழுச்சி கொஞ்சமும் குறைய வில்லை.

வானத்தில் விண்மீன்கள் கண்சிமிட்டின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பான மன்னாரின் இரவுநேரத் தென்றல் உசும்பிற்று.

அடம்பனில் இருந்து இரண்டு கல் தொலைவில் இத்திக்கண்டல்.

வரண்ட மன்னாரில் ஒரு பச்சைக் கிராமம்.

ஐம்பது வீடுகளில் சவரிப்பிள்ளை வீடும் ஒன்று.

தென்னை - வாழை - வீட்டு முற்றத்தில் நெடிய வேப்பமரம் - பின்னால் பச்சைப் பசேலென்ற வயற்காணி - அறுவடை காலத்தில் குருவிகளின் கீச்சொலி கேட்டுக் கொண்டே இருக்கும்.

"யேசுவே! எங்கட மண்ணுக்காகப் போராடுற இந்தப் பெடியனுகளைக் காப்பாத்து!" என்று சவரிப்பிள்ளையின் மனைவி செபம் சொல்லுவாள்.

"வெறுவாக்கிலங் கெட்டவனுகள்... மாடு மாதிரி பிஞ்சு புரசுகளைச் சுடுகிறானுகள்" என்று புழுங்குவார் சவரிப்பிள்ளை.

யோகன் இவர்களின் பிள்ளைதான்.

பெரிய குடும்பம். இரண்டு தம்பிகள் புலிகள் அமைப்பில் இருந்தார்கள். தங்கச்சி டெய்சி - தங்கச்சி கிளி - இருவரும் யோகனுக்கு உயிர். தம்பி நவரத்தினம் யோகனை ஒட்டிக்கொண்டே திரிவான். வீடு கலகலப்பாக இருக்கும்.

நீண்ட காலம் அந்த வீடு விடுதலைப் புலிகளைத் தாங்கியிருக்கிறது. தன் பிள்ளைகளைப் பார்ப்பது போலவே, விடுதலைப் புலிகளுக்கு ஓயாது சமைத்துப் போட்டவள் யோகனின் தாய்.

முற்றத்தில் உழவு வண்டி நிற்கும்.

வீட்டு விறாந்தையில் உட்கார்ந்து அவர்கள் பேசுவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி நவத்துக்கு அண்ணனின் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தே பொழுது போய்விடும்.

கிளிக்கு, யோகன் கதைகதையாகச் சொல்லுவான் -

'லெப். கேணல் விக்டரின் கதை - லெப். கேணல் ராதாவின் கதை - மேஜர் அசோக்கின் கதை - கப்டன் நோயலின் கதை - அடம்பனில் ஒரே நேரத்தில் குண்டு வெடிப்பில் மடிந்த அந்த ஏழு பேரின் கதை...'

மண்ணோடு மண்ணாகிவிட்டவர்கள்.

"அவர்களும் யேசுவானவரைப்போல சிலுவை சுமந்தவங்கதாண்டா தம்பி" என்பார் சவரிப்பிள்ளை.

யோகன் விடுதலைப் புலிகளின் முழுத்துணை; ஆலம் விழுது.

ஒரு கால் அவனுக்கு இயல்பாக நடக்க உதவுவதில்லை. காலை இழுத்து நடப்பான்... நிமிர்ந்து நிற்க முடியாத உடல் என்றாலும், யோகனின் குரல் எப்போதும் நிமிர்ந்தே நிற்கும்.

போராட்டங்களில் அவன்தான் முதல் வரிசையில் இருந்தான்.

கட்டளைகளாய் அவன் குரல் ஒலித்தது.

"தலைவர்" என்று நண்பர்கள் அவனை அழைத்தார்கள்.

ஒவ்வொரு மணித்துளியும் மக்களில் ஒருவனாய்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திக்கண்டலில் இருந்து அரைக்கல் தொலைவில் மூங்கில் முறிச்சான்குளம்-அந்தப்பகுதி வயல்களுக்கெல்லாம் பாலூட்டும் தாய்முலை.

குளக்கரையில் சின்னவன் வீடு.

யோகன் மனம்விட்டுப் பேசிக்கொண்டிருந்தான்.

அது 22. 09. 1987.

சின்னவனுக்கும் அவனுக்கும் நீண்ட கால நட்பு.

யோகனின் வீடு போலவே-சின்னவன் வீட்டிலும் புலிகளின் சந்திப்பு நிகழும்.

நிறைந்த குளத்திலிருந்து கிளம்பும் குளிர் காற்று. இலைகளின் சலசலப்பு... பச்சை வெளி...

பேசிக்கொண்டே இருக்கலாம்.

மூன்று நாட்களுக்கு முந்திய அடம்பன் மறியல் போராட்டம் பற்றி அவர்கள் பேசினார்கள்.

"அண்டைக்குத் தெரிஞ்சிருக்கும் அடம்பனைப் பற்றி... " என்றான் சின்னவன்.

"அடம்பனைப் பற்றி எண்டு சொல்லாதடா-தமிழனைப்பற்றி எண்டு சொல்லு..." திருத்தினான் யோகன்.

யோகன் சொன்னான்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம்மட கடமையை நாம செய்யிறம். இந்த நேரத்தில இதைச் செய்யல்ல எண்டா எப்படா செய்யப்போறம்...? நாம பேசிக் கொண்டிருக்கிறம்... நல்லூரில ஒருவன் செத்துக் கொண்டிருக்கிறான்... நாளைக்குப் பட்டித் தோட்டத்தில இந்தியப் படை தலைமை நிலையத்துக்கு முன்னால் நாம நடத்துற போராட்டம், அடம்பன் போராட்டத்தை விட சூடாக இருக்கும் பார்."

"சூடா இருக்கும் எண்டுறியா? அடம்பனில துவக்கை நீட்டினவனுகள்... பட்டித்தோட்டத்தில சுட்டாலும் சுடுவாங்கள் எண்டுறியா...? என்று கேட்டான் சின்னவன்.

யோகன் அமைதியாகச் சிரித்தான். பின்பு சின்னவனைப் பார்த்துச் சொன்னான் -

"ஏண்டா சின்னவா! அவனுகள் என்னைச் சுட்டா - நான் பிணமா விழுந்தா நீ என்னைத் தூக்கமாட்டியா?"

இரண்டு பேரும் சிரித்தார்கள்.

அவர்களுடைய வழமையான பகிடிகள்...

ஒரு குருவி கீச்சிட்டுக் கொண்டு பறந்துபோயிற்று.

அடுத்தநாள் மறியல் போராட்டத்துக்கு ஆட்களை அழைத்துப்போக வேண்டும் - காலை 6 மணிக்கெல்லாம் புறப்பட்டுவிட வேண்டும். அடம்பனைப் போலவே பட்டித்தோட்டத்தையும் உணர்ச்சியால் அசைத்தெடுக்க வேண்டும்.

யோகன் சின்னவனின் தோளைப் பிடித்துலுப்பிவிட்டுப் பின்பு சொன்னான் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெள்ளணை 5 மணிக்கே வந்திடு என்ன?"

யோகனின் உழவுப்பொறி வண்டி மிடுக்கோடு இத்திக்கண்டலை நோக்கிப் புறப்பட்டது.

23. 09. 1987

திலீபன் உண்ணா நோன்பு தொடங்கி 8 நாள் ஆயிற்று. எந்த நொடியிலும் இனி அந்த மெழுகுவர்த்தி அணையலாம்.

காலை 5 மணிக்கு, முற்றத்தில் நின்ற உழவுப்பொறிவண்டியில் 'புலிக்கொடி'யைக் கட்டிக்கொண்டிருந்த யோகனைப் பார்த்து- சவரிப்பிள்ளையின் மனைவி சொன்னாள்-

"யேசுவே! அந்தப் பெடியன் எத்தனை நாளைக்கோ...!"

யோகனுக்குத் தாயின் கவலை புரிந்தது.

"அதுக்காகத்தான் அம்மா இண்டைக்குப் பட்டித்தோட்டத்தில மறியல் போராட்டம் நடக்குது" என்றான் அவன்.

காலை ஞாயிற்றின் ஒளி வெளியே வராதபடி, வானத்தை முகில் விழுங்கியிருந்தது.

வீட்டுக்கு முன்னால் தெருவில் வழக்கம்போல மாடுகள் படுக்கை போட்டிருந்தன.

யோகன் தெருவில் இறங்கவும் சின்னவன் வரவும் சரியாக இருந்தது.

உணர்ச்சிமிக்க கிராம மக்களை அழைத்துக் கொண்டு பட்டித் தோட்டத்தை நோக்கி அவர்கள் புறப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவெல்லாம் அதே முழக்கம்-

"திலீபன் கோரிக்கையை நிறைவேற்று! திலீபனின் உயிரைக் காப்பாற்று!"

இத்திக்கண்டலிலிருந்து அடம்பன் இரண்டு கற்கள்-அடம்பனிலிருந்து மன்னார் எட்டுக் கற்கள்-மன்னாரிலிருந்து பட்டித்தோட்டம் இரண்டு கற்கள்.

பன்னிரண்டு கற்கள் தொலைவில்-பட்டித்தோட்டத்தில் மறியல் போராட்டம்.

முதலில் மன்னாருக்குப் போக வேண்டும். மன்னாரிலிருந்து பட்டித் தோட்டத்தை நோக்கி மக்கள் பேரணி 8 மணிக்குப் புறப்பட இருந்தது.

யோகன் பேரணியில் கலந்து கொண்டான்.

மக்கள் கடல்.

விடுதலை உணர்வின் பேரலைகள்.

கிராமங்கள் இதற்கு முன்பு இப்படிக் கிளர்ந்தெழுந்ததில்லை.

பெண்களின் முழக்கொலி-பள்ளிக்கூட மாணவ மாணவிகளின் பேரெழுச்சி-காலை 9 மணிக்கெல்லாம் பட்டித்தோட்டம் இந்தியப் படையின் தலைமை முகாமுக்கு அவர்கள் வந்துவிட்டார்கள்...

கடலை ஒட்டினாற்போல் உப்புத்தரவை-முன்பக்கம் புகைவண்டிப் பாதை-நெடிய பனை மரங்கள்-மேடு கட்டிய மணற் திட்டு உடைமுள் காட்டின் நடுவில் முகாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பிமுள் வேலியால் படை முகாம் அரண் செய்யப்பட்டிருந்தது. துப்பாக்கி தாங்கிய இந்தியப் படையாட்கள் வரிசையாக நிறுத்தப் பட்டிருந்தார்கள்.

"எல்லோரும் உட்காருங்க... கீழே இருங்கடா... அங்க. இங்க ஓடாதீங்க தங்கச்சி... நம்மட புலிகள் சொல்லுறதைக் கேளுங்க..."

யோகன் மறியல் போரில் கலந்து கொண்டவர்களை ஒழுங்காக உட்கார வைத்தான்.

பக்கத்தில் யோகனின் தம்பி நவரத்தினம்... சின்னவன்...

ஒலிபெருக்கியில் உணர்ச்சியான தமிழீழ விடுதலைப் பாடல்கள் ஒலிக்கத் தொடங்கிற்று.

மாணவர்களின் ஆர்ப்பரிப்பு -

"திலீபன் கோரிக்கையை நிறைவேற்று! திலீபனின் கோரிக்கையை நிறைவேற்று! தி பனின் உயிரைக் காப்பாற்று!"

ஆங்காங்கே புலிக்கொடிகள் மிடுக்கோடு பறந்தன. திலீபனின் பெரிய படங்கள்... சுலோக அட்டைகள்...

பொறுப்பதிகாரி டிலோன், முகாமுக்கு வேளியே வந்தான். அவன் முகம் கடுப்பாகி இருந்தது. தமிழர்களின் உணர்வுகளைப்பற்றி அவனுக்கு என்ன தெரியும்...?

யோகன் ஓயாது முழங்கிக்கொண்டே இருந்தான்...

அதே முழக்கம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திலீபனின் கோரிக்கையை நிறைவேற்று! திலீபனின் உயிரைக் காப்பாற்று!"

நிலைமை சூடாகிக்கொண்டே வந்தது.

இந்தியப் படை வெறியன் ஒருவன் திடீரென்று பெண்கள் இருந்த பகுதியில் பாய்ந்து அவர்களைத் தாக்கியபோது, கொந்தளிப்பு உருவாயிற்று.

தடுக்க முயன்ற பெண்கள் துப்பாக்கிப் பிடிகளால் தாக்கப்பட்டார்கள்.

"அமைதியாக இருங்க தங்கச்சிமாரே... நம்மட உறுதியை யாருமே அசைக்க முடியாது... " என்று கத்தினான் யோகன்.

ஒரே குழப்பம்.

மாணவிகள் தாக்கப்பட்டு விழுந்தார்கள்.

யோகன் பாய்ந்து முன்னால் ஓடினான்.

"எதுக்காக அடிக்கிறீங்க... ? நாங்கள் ஓடுவம் எண்டு நினைக்கிறீங்களா? இந்தியப் படைக்கு தமிழீழத்தைப் பற்றித் தெரியாது... போகப் போகத் தெரியவரும்."

உணர்ச்சிவசப்பட்டு முழங்கினான் அவன்.

கொடிய தடி ஒன்று யோகனைத் திடீரென்று தாக்கிற்று.

ஒரே அமளி துமளி.

அப்போதுதான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலோனின் துப்பாக்கி யோகனைக் குறிபார்த்தது. அதிர்ந்து வெடித்த கொடிய வேட்டொலியோடு தொடையில் குண்டுபட்டுச் சாய்ந்தான் யோகன்.

துப்பாக்கிச் சூட்டைக் கண்களால் பார்த்துகொண்டிருந்த தம்பி நவரத்தினத்தின் "யோகண்ணா!" என்ற கதறல், மக்கள் பெருமளவில் திரண்டிருந்த அந்த மைதானத்தை உலுக்கிற்று.

தண்டவாளத்தில் கிடந்த யோகனை சின்னவன்தான் தூக்கினான்.

அந்த வீரனை வண்டியில் ஏற்றி மருத்துவ நிலையத்துக்குக் கொண்டு போனார்கள்.

ஆனால்...

பாதி வழியிலேயே தம்பி நவரத்தினத்தின் மடியில், அவன் தலை சாய்ந்து விழுந்தது.

சின்னவன் விழிகளில் பொங்கிய கண்ணீரைத் துடைத்துவிட்டான்.

காருக்கு வெளியே எட்டிப் பார்த்தான் அவன்...

சலனமற்ற வானம். மாரிகால மேகங்கள். மண்ணுக்காக விழும் மழைத்துளி.

நெருப்பு

டிசம்பர் 1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மானைக் கும்பிடுறானுகள்...!

வெறியர்கள் அவளை விலங்குத்தனமாக நெருங்கினார்கள்.

யோகராணியின் கையைப் பற்றி ஒருவன் இழுத்தபோது "அக்கா!" என்று கத்திய சின்னத் தங்கச்சியை, அடுத்தவன் 'கொற கொற' என்று இழுத்துக்கொண்டு போனான்.

யோகராணி நடுங்கினாள்.

அவளைக் கீழே தள்ளி அவளுடைய மார்புச் சட்டையைக் கிழித்தான் அந்த நெட்டை வெறியன். வானம் தலை கீழாகிக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் கொஞ்சம் வசதி குறைந்தவர்கள் இங்கேதான் படிக்க வருகிறார்கள். விவேகானந்தா மகளிர் வித்தியாலயத்தில் அட்டகாசங்கள் இல்லை. ஏழ்மையில் நொந்து போன உள்ளங்களுக்கு கிளுகிளுப்பு ஏது? பெரிய இடத்துப் பெண்களின் கூச்சலையும் பாய்ச்சலையும் இங்கே பார்க்க முடியாது. காற்று வீசி அலை கிளப்பாத நேரத்தில் மட்டக்களப்பு ஏரி எப்படி அமைதியாக இருக்குமோ, அப்படித்தான் அந்தப் பள்ளிக்கூடமும் இருந்தது.

யோகராணி புத்தகங்களோடு பள்ளிக்கூடத்தை விட்டுத் தெருவில் இறங்கினாள்.

நீண்ட தூரம் குனிந்த தலை நிமிராமலே நடந்தவள்... தூரத்தில் வந்த சிறீலங்காப் படையின் 'ட்றக்' வண்டியைப்பார்த்து, பக்கத்தில் இருந்த வீட்டுக் 'கடப்பின்' உள்ளே 'விர்' என்று நுழைந்தாள். "வா புள்ள" என்று அழைத்து ஒரு பெரியவர் அவளை முற்றத்தில் உட்காரவைத்தபோது, யோகராணிக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

"ஆமிக்காறனுகள் வாறானுகள்" என்று சுருக்கமாக அவள் சொன்னாள். 'ட்றக்' வண்டி உறுமிக்கொண்டே பெரியவரின் வீட்டைக் கடந்தது போயிற்று.

சிங்களப் படை ஊர்களை வளைத்துக் கொண்டு தமிழ்ப் பெண்களைக் கற்பழிக்கும் கொடுமைகளை யோகராணி அறிந்திருந்தாள். இல்லையென்றால் முன்பின் தெரியாத பெரியவர் வீட்டுக்குள் திடுதிப்பென்று நுழைவாளா? "திருகோணமலையிலையும் கனக்கப் பொடிச்சிகளை பழுதாக்கிப்போட்டா னுகளாம் அறுவான்கள்..." என்று, யோகராணியின் அச்சத்தைப் புரிந்து கொண்ட கிழவர் ஆத்திரத்தோடு உறுமினார். யோகராணி வீட்டுக்குப் போக எழுந்ததும் 'கடப்பு' வரை வந்து "கவனமாகப் போ புள்ள... சண்டாளனுகள் குறுக்காலையும் நெடுக்காலையும் திரியுறானுகள்" என்று கூறி, அக்கறையோடு அவளை வழியனுப்பி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தார் அவர்.

யோகராணி இப்படித்தான் ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடம் போய் வருகிறாள். தமிழீழ மக்களின் இழிந்த அடிமைநிலை, பத்தாம் வகுப்புப் படிக்கும் அவளை உலுப்பிற்று. பள்ளிக்கூடம் போகும் வழியில் எத்தனை வீடுகள் எரிந்து சாம்பலாகிக் கிடக்கின்றன. இதே தெருவில் பல குடும்பங்களைச் சேர்ந்த 'பொடியனுகள்' விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து தாய்மண்ணுக்காகப் போராடிப் பிணங்களாய் விழுந்ததை அவள் எண்ணிப் பார்த்தாள். எத்தனை பேர் 'பூசா' முகாமில் அடைபட்டு...!

யோகராணியின் கண்களில் நீர் தளதள என்று நிரம்பிற்று. வீட்டுக்கு வந்ததும் புத்தகங்களை மேசையில் எறிந்துவிட்டுத் தாயைப் பார்த்து அவள் சொன்னாள்:

"அம்மா... இனி என்னால பள்ளிக்கு போக ஏலாது..."

தமிழரின் நாற்பது ஆண்டுகால விடுதலைப் போரில் ஆரையம்பதி என்றைக்குமே பின்நின்றதில்லை. மட்டக்களப்பு நகரில் இருந்து ஐந்து கல் தொலைவில் இருக்கும் இக்கிராமம், 'அகிம்சை' வழியில் தமிழர்கள் 'செல்வா' தலைமையில் போராடிய காலத்திலும் சரி-சிங்கள இனவாதிகளுக்கும் அகிம்சைக்கும் தொடர்பே இல்லை என்பதைப் புரிந்துகொண்டு, 'பிரபாகரன்' அந்த வெறியர்களை எதிர்த்துத் துப்பாக்கிகளோடு போராடும் இன்றும் சரி-களத்திலேயே நிற்கிறது. மட்டக்களப்பில் இதுதான் பெரிய கிராமம். மீன்பாடும் மட்டுநகர் ஏரியோடு ஒட்டினாற்போல் 'ஆத்தங்கரையில்' அமைந்த இக்கிராமம், அழகாகவே இருக்கும். மக்கள் தொகைப் பெருக்கத்தால் 'செல்வாநகர்' என்ற புதிய கிராமம் ஒன்றை இவ்வூர் மக்கள், ஆரையம்பதிக்குப் பக்கத்திலேயே உருவாக்கியிருக்கிறார்கள்.

'செல்வா நகரில்' தான் யோகராணியின் வீடு. அவளுடைய குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியது. அப்பா செத்துப்போனார். ஏழு பேரைக் கவனிக்கவேண்டிய பொறுப்பு தாய்க்கு இருந்தது. மூத்தவர்கள் எதையோ உழைத்துவர வெளியே போய் வந்து கொண்டிருந்தார்கள். பத்தொன்பது வயது யோகராணி பள்ளிக்கூடத்தையும் படிப்பையும் உதறிவிட்டு வீட்டில்தான் கிடக்கிறாள். பொழுது போவதே இல்லை. அடிக்கடி சிங்கள படை வெறியர்கள் ஆரையம் பதியை வளைத்துக்கொள்வார்கள். அந்தக் கிராமத்தில் துப்பாக்கிகளின் வேட்டோசை கேட்டுக்கொண்டே இருந்தது.

"புலிப் பொடியனுகளுல ஒருவனைச் சுட்டு-சவத்த சிங்கள 'ஆமி' க்காறனுகள் கட்டி இழுத்துற்றுப் போறானுகளாம்... "

யாரோ 'ஓ' என்று அழும் ஓசை கேட்கும். அச்சமும் நடுக்கமுமாய்...

***

1987 ஜுலை 29இல் இந்திய-சிறீலங்கா உடன்படிக்கை ஏற்பட்ட போது, வேகமாக ஓடிய ஒரு வண்டி திடீரென்று நின்றுவிட்டது போலவே தோன்றிற்று.

ஆரையம்பதி 'செல்வா நகர்' மக்கள் அசைந்து போனார்கள் யாருக்காக யார் உடன்படிக்கை செய்வது? அரசியல் தெளிவு மிக்க அம்மக்கள், உடன்படிக்கையில் எதுவுமே இல்லை என்பதை உறுதியாகவே தெரிந்து கொண்டார்கள் பிரபாகரனின் 'சுதுமலைப் பேச்சு' அவர்களை உணர்ச்சி வசப்படுத்தியது; அதே வேளை விழிப்பாக இருக்கவும் செய்தது.

ஊரில் காந்திகாலக் கதை தெரிந்த ஓரிரு கிழவர்கள் இந்தியப் படை வந்ததில் நம்பிக்கை பெற்றார்கள் என்பதும் உண்மை. "எப்படியோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமேல் சிங்கள ஆமிக்காறனுகளுற 'அட்டாதுட்டித்தனங்கள்' நடக்காது தம்பி" என்று, பேரனைப் பார்த்துப் பெருமையோடு சொல்லிக் கொண்டார் ஒரு கிழவர்.

தெருக்களில் இந்தியப் படையின் கரும்பச்சை 'ட்றக்' வண்டிகள் பறக்கத் தொடங்கின...

***

கண்ணகி பிறந்த சோழநாட்டிலும்-வழக்குரைத்த பாண்டிய நிலத்திலும்-மறைந்த சேர மண்ணிலும் கண்ணகி கோயில்களைக் காண்பது அரிதாக இருந்தாலும், மட்டக்களப்பில் கண்ணகி கோயில்கள் இல்லாத கிராமங்களே இல்லை. தமிழீழத்தின் இந்தத் தென்பகுதியில்தான் இன்று கண்ணகி வழிபாடே உயிரோடு வாழ்கின்றது ஒரு 'மனிதப் பெண்ணை'-அவள் கற்பின் மாண்பை-மட்டக்களப்பு மக்கள் போற்றி வழிபடுகிறார்கள். ஒவ்வொரு வைகாசித் திங்களிலும் கண்ணகி திருவிழா தடபுடலாக நடந்து, 'குளிர்த்திச் சடங்கோடு' நிறைவு பெறுகிறது. ஆரையம்பதியிலும் 'கண்ணகி கோயில்' உண்டு. சிறிய கோயில்தான்-ஆனால் கோயில் எப்போதும் கலகலப்பாகவே இருக்கும்; பெண்களுக்குக் குறைவில்லை கோயிலின் மணல் முற்றத்தில் பிள்ளைகளின் விளையாட்டு ஒரு பக்கம் நடக்கும். அங்கும் இங்குமாக நான்கு பெரியவர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள்.

யோகராணி கண்ணகி கோயிலுக்குள் நுழைந்தபோதே தன்னை மறந்தவளாய்த்தான் நுழைந்தாள்.

"அம்மாளே! இவ்வளவு நாளும் எங்கட ஊருல ஒரு பெண்ணுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீங்கு வராம காப்பாத்துனியே, உன்னை ஒரு நாளும் மறக்கமாட்டம் தாயே... இனி எங்களுக்கு ஒரு கேடும் வராது... இந்தியப்படை வந்திருக்குது.''

யோகராணி கண்களில் நீர் கசிந்து 'பொலபொல' என்று கொட்டிற்று. அவள் அழுதாள்.

ஆற்றங்கரையில் நண்டு வாங்கிக்கொண்டு வீட்டுக்குப்போக வந்த மூன்றாம் குறிச்சி வாத்தியார் தெருவில் நின்று உரத்தகுரலில் சொன்னார்:

''விடுதலைப் புலிகளுற 'நிதர்சனம்' நிலையத்தையும் 'ஈழமுரசு,' 'முரசொலி' பத்திரிகைக் கட்டிடத்தையும் இந்தியப் படை யாழ்ப்பாணத்துல குண்டு வச்சுத் தகர்த்துப் போட்டுதாம்... விடுதலைப் புலிகள் திருப்பி அடிக்கத் தொடங்கிற்றானுகளாம்... எத்தனை நாளைக்குத்தான் பொடியனுகளும் பொறுப்பானுகள்? அவன் பொடியன் தி பனையும்-அவன் குமரப்பாவையும்-அவன் புலேந்தியையும் மத்தப்பொடியனுகளையும் இவனுகள்தானே சாகவச்சவனுகள்...''

வாத்தியார் பேசிக்கொண்டிருந்தபோதே இந்திய 'ட்றக்' வண்டி ஒன்று தெருவால் சீறிக்கொண்டு போயிற்று. தெருவில் நின்றவர்கள் எல்லோருமே அந்த வண்டியின் வழக்கத்துக்கு மாறான வேகத்தைக் கவனிக்கத் தவறவில்லை. பழையபடி அவர்கள் நெஞ்சில் அச்சம் தலை தூக்கிற்று.

வாத்தியார் தொடர்ந்தும் பேசிக்கொண்டுதான் இருந்தார்...

''திருகோணமலைப் பகுதியில சிங்களவனுகள ஆயிரக் கணக்கில் குடியேத்துறானுகளாம். இதுக்குத்தானா உடன்படிக்கை?''

'ட்றக்' வண்டி சுற்றிக்கொண்டு திரும்பவும் அதே இடத்தில் வந்து நின்றது. வண்டியில் இருந்த முரட்டு இந்தியப் படை வெறியன் ஒருவன் 'அரைகுறைத்' தமிழில் கத்தினான். ''டேய்... றோட்டுல நில்லாதீங்கடா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ எல்லாம் புலிகள் தானே... ?

எல்லோரும் சிதறிக் கலைந்துபோகத் தொடங்கினார்கள்.

வாத்தியாரும்தான்.

ஆனால் அவர் போகும்போதும் பேசிக்கொண்டே போனார்.

"நாம அடிமைகளாக இருக்குமட்டும் நாலு பேரும் உதைப்பானுகள். நம்மள நாமளே ஆளவேணும் அதுமட்டும் நமக்கு உதைதான்... வெடிதான்... சாவுதான்."

1987 ஒக்ரோபர் 10ஆம் நாள் தொடங்கிய இந்தியப்படை-விடுதலைப் புலிகள் சண்டை, நாளுக்கு நாள் பெரிதாயிற்று ஓர் எதிரி நாட்டு அரசுப் படையை மோதுவது போலவே, விடுதலைப் புலிகளை இந்தியப் படைகள் மோதின. விடுதலைப் புலிகள் தளர்ந்துவிடவில்லை. உலகின் அந்த நாலாவது பெரிய அரசின் படைகளை எதிர்த்து, அவர்கள் உறுதியாகவே போராடினார்கள்.

"கல்லடியில வீடு வீடா சோதனை போடுறானுகளாம். நாளைக்குச் செல்வா நகருக்கு வந்தாலும் வருவானுகளாக்கும்..."

தெருவில் சேதி அடிபட்டது.

யோகராணி இடிந்து போனாள். அவள் நெஞ்சு படபடத்தது.

வீட்டு முற்றத்தில் உட்கார்ந்து தாயும் பிள்ளைகளும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

எங்கோ தொலைவில் யாரோ ஒருவன் 'தண்ணியில்' வாய்கிழிய கத்திப் பாட்டுப் பாடுவது கேட்டது இரவு மாடுகள் வேலியில் உராய்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு யோயின. வீதியில் எரிந்த மின்விளக்கு வெளிச்சம் வேலிச் செடிகளைத் தாண்டிப் பொட்டுப் பொட்டாக விழுந்துகொண்டிருந்தது. தூரத்தில் அடிக்கடி துப்பாக்கி வேட்டோசைகளும் கேட்டன.

அமைதியின் உடல் துண்டு துண்டாய் கிழிந்து கிடந்த அந்த இரவில், ஒரு பிணத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்து பேசுவது போலவே அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ட்றக்குல போற நேரத்துல நல்லாச் சிரிக்கிறதும் - கையைக் காட்டுறது மாகத்தானே திரிஞ்சவனுகள் - இவனுகள் இந்த மாதிரி இருப்பானுகள் எண்டு நாம் நினைக்கல்லியே... 'சத்துருக்கொண்டானு' ல பொம்புளையள எல்லாம் கெடுத்துப் போட்டானுகளாம்..."

பக்கத்து வீட்டுப் பிள்ளை சொன்ன சேதியை யோகராணி சொன்னாள்.

"ஏனம்மா சிங்களவனுகளுட ஆமியும் இந்தியாட ஆமியும் ஒண்டுதானா?" என்று தாயைப் பார்த்துக் கேட்டாள் சின்னவள். தாய் போராட்ட உணர்வோடும், அதேவேளை பெருமூச்சோடும் கூறினாள் -

"எனக்கெண்டாத் தெரியா மனே... பாவம்... இவனுகள் விடுதலைப் புலிகளை அழிக்கிற எண்டா எவளவு மனவருத்தமா இரிக்குது. நமக்காகத் தானே அவனுகள் செத்தவனுகள். 'இயக்கமோ' என்னவோ எண்டு சொல்லித்து ஆரோ நம்மடவனுகள் தான் காட்டிக் கொடுக்குறானுகளாம். சனமெல்லாம் சொல்லுது."

அவர்கள் இரவு முழுதும் பேசிக்கொண்டே இருந்தார்கள். ஒரு வெளவால் மாமரத்தில மோதிக்கொண்டு பறந்து போயிற்று.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொவெம்பர் 23 காலை அந்த வீட்டில் எல்லோரும் சோர்வுடனேயே இருந்தார்கள். இரவு தூங்காமல் யோகராணியின் முகம் காய்ந்துபோய் இருந்தது. வழக்கமான காலை வேலைகளை முடித்துவிட்டு, அவள் அம்மாவுக்குக் கோப்பி போட்டுக் கொடுத்தாள். அம்மாவும் மற்றவர்களும் வேலைக்குப் புறப்பட்டார்கள்.

யோகராணி கொஞ்ச நேரம் முற்றத்துக்கு வந்து வானத்தை அண்ணாந்து பார்த்தபடியே அசைவற்று நின்றாள். பெரியவர்கள் யாருமே வீட்டில் இல்லை என்பதை நினைக்க அவளுக்கு நடுக்கமாக இருந்தது.

இருவர்தான் அவளோடு வீட்டில் இருந்தார்கள். ஒருத்தி சின்னத் தங்கச்சி; இன்னொன்று அவளுடைய நாலு வயதுக் குஞ்சு மருமகள். இவர்கள் ஒரு துணையா? பாதுகாப்பா?

கிணற்றடிக்குப் போய்க் குளித்துவிட்டு வந்து தலை வாரிக் கொண்டிருந்தவள் தெருவில் யாரோ சிறுவன் 'இந்தியப்படை வருகுதாம்' என்று கத்திக்கொண்டு ஓடியபோது, அசைந்துபோனாள்.

வெளியே தெருவில் ஆட்கள் வேகம்வேகமாக நடப்பதும் ஓடுவதும் தெரிந்தது.

மோட்டார் சைக்கிள் வண்டியில் போன ஒருவன்,

"முதலாம் குறிச்சிச் சந்தியில 'லொறி' களை எல்லாம் கொணர்ந்து உட்டுத்து இந்தயாக்காற ஆமி நிக்குதாம். ஊருக்குள்ள வாறானுகள் போலக் கிடக்கு... " என்று உரத்துச் சொல்லிக்கொண்டே வண்டியை விரைவாக ஓட்டினான்.

யோகராணிக்கு உடல் கொதித்தது. அவள் படபடத்தாள். வியர்வை வியர்வையாய்க் கொட்டிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரில் ஒரு பெரிய அமைதி நிலவுவதை அவள் கவனித்தாள். மாலையில் பறவைகளெல்லாம் ஓடி அடங்குமே-அப்படித்தான் செல்வா நகர் ஓடி அடங்கி ஓய்ந்துகிடந்தது.

யோகராணி என்ன செய்வது என்று தெரியாமல் வீட்டுக்குள்ளேயே இங்கும் அங்குமாக நடந்துகொண்டிருந்தாள்.

அப்போது நேரம் 10 மணி.

நாய்கள் தொடர்ந்து குரைக்கும் ஓசை ஒவ்வொரு நொடிப்பொழுதும் பக்கத்தில் நெருங்கிவருவதை அவள் கேட்டாள். இப்போது அவளுடைய தெருவிலேயே நாய்கள் குரைக்கத் தொடங்கிவிட்டன.

யோகராணி வேலிப்பக்கம் பார்வையைச் செலுத்தினாள்... இந்தியப் படைவெறியர்கள் இருவர் வேலிப் படலையைத் திறந்து, அவள் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

பக்கத்தில வந்ததும், ஒரு முரடன் அவளை விழுங்கி விடுவது போலவே பார்த்தான். யோகராணி ஒடுங்கிப்போனாள்.

வெறித்தனமான அவன் கண்களும்-காவி படிந்த அந்த அசிங்கமான பற்களின் முரட்டுச் சிரிப்பும்-அவள் நெஞ்சைக் குத்தி வதைத்தன.

"வீட்டில ஆம்பிளைகள் யாரும் இல்ல..." என்று கள்ளம் கபடம் இல்லாத அவள், அந்த முரட்டு இந்தியப்படை வெறியர்களைப் பார்த்துச் சொன்னாள். விடுதலைப் புலிகளைத்தானே தேடுகிறார்கள்... இப்படிச் சொன்னால் அவர்கள் போய்விடக்கூடும் என்பது அவள் நினைப்பு.

ஆனால்...

வெறியர்கள் அவளை விலங்குத்தனமாக நெருங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகராணியின் கையைப் பற்றி ஒருவன் இழுத்தபோது "அக்கா!" என்று கத்திய சின்னத்தங்கச்சியை, அடுத்தவன் 'கொற கொற' என்று இழுத்துக்கொண்டு போனான்.

யோகராணி நடுங்கினாள்.

அவளைக் கீழே தள்ளி அவளுடைய மார்புச் சட்டையைக் கிழித்தான் அந்த நெட்டை வெறியன். வானம் தலைகீழாகிக் கொண்டிருந்தது. அவளுடைய இரண்டு கால்களையும் முரட்டுக் கைகளால்கள் வெறித் தனமாகத் தள்ளி...

"கண்ணகி அம்மாளே!" என்று ஓங்கிக் கத்தினாள் யோகராணி.

அவள் நினைவாற்றல் கொஞ்சம் சொஞ்சமாக மங்கிப்போயிற்று.

ஒருவன் அவளை விட்டு நிமிர்கிறான். அடுத்தவன் தொடர்ந்து...

கண்களைத் திறந்தபோது யோகராணி ஒரு சிறிய மருத்துவ நிலையத்தில் இருந்தாள். மருத்துவர்கள் அவள் உடலைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

"கொல்லாம இந்த அளவோட விட்டுத்துப் போனானுகளே - 'பொடிச்சி'ர நல்ல காலந்தான்..." என்று, மருத்துவ நிலையத்துக்கு வெளியே ஒரு கிழவி பெருமூச்சோடு சொல்லிக் கொண்டாள்.

கட்டிலில் கிடந்த யோகராணியின் கண்களில் நீர் பொங்கிற்று.

நினைவு வரும்போதெல்லாம் உயிருள்ளவரை இனி அவள் செத்துச் செத்துத்தானே...

கட்டிலுக்குப் பக்கத்தில் நின்றவர்களைப் பார்த்து அச்சத் தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சண்டாளனுகள் ஊரைவிட்டுப் பொயிற்றானுகளா?" என்று கேட்டாள் அவள்.

ஒரு பெரியவர் சொன்னார் -

"நான் வரக்குள்ள கண்ணகி கோயிலடியில 'ட்றக்' வண்டி நிக்குது. அம்மாளைக் கும்பிடுகிறானுகள் போல கிடக்கு!"

தமிழீழம்

ஜுலை 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச் சம்பவங்களைக் கருவாகக் கொண்ட பதினைந்து 'உண்மைக் கதைகள்' இத்தொகுப்பு நூலில் உள்ளன.

இந்திய ஆக்கிரமிப்புக் கால கட்ட வாழ்கையையும், அந்த வாழ்க்கையின் அவலங்களையும் - சோகங்களையும் சித்தரிக்கும் சிறந்த படைப்புக்களாக பதின் நான்கும்; சிறீலங்கா இராணுவக் கொடூரத்தினைச் சித்தரிப்பதாக ஒன்றும் அமைந்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள்

Liberation Tigers Of TAMIL EELAM

இது,
தமிழீழ விடுதலைப் புலிகள்
வெளியீட்டுப் பிரிவின்
வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by VASAN LITHO PRINTER Tel: 0181 - 640 4